பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 04 வெள்ளிக்கிழமை (20-11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 359

20 NOV 2009

# தமிழர்கள் நாட்டில் எங்குமே சுதந்திரமாக நடமாட முடியாத சூழ்நிலை இலங்கையில்!

## ஐ.நா.அதிகாரி ஹோம்ஸிடம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 20

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டதாக அரசு கூறினாலும் வடக்கு- கிழக்கு உட்பட இலங்கையில் எங்குமே தமிழர்கள் சுதந்திரமாக அச்சமின்றி நடமாடக்கூடிய நிலைமை இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ள ஜோன் ஹோம்ஸை நேற்று மாலை, தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் கொழும்பில் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பின் போதே அவர்கள் இலங்கையில் தமிழர்களின் தற்போதய நிலைமை தொட்பாக ஐ.நா.பிரதிநிதிக்கு விளக்கிக் கூறினர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ஸ்ரீகாந்தா, செல்வம் அடைக்கலநாதன், பா.அரிய நேத்திரன், டாக்டர். வில்லியம் தோமஸ் தங்கதுரை மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் I, II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும்-I, விஞ்ஞானம் II, பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## மன்னாரில் வெடிவிபத்து இருவர் காயம்!

கொழும்பு, நவ. 20

மன்னார் மாந்தை மேற்கு பகுதியில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்ட இருவர் காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்.எஸ்.டி எனப்படும் கண்ணிவெடி அகற்றும் குழுவினர் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் தவறுதலாக கன்ணிவெடி ஒன்று வெடித்ததில் இவ்விபத்து நேர்ந்துள்ளது. காயமடைந்த இருவரும் மன்னார் வைத்தியசாலைக்கு உடனடியாக அனுப்பி (20ஆம் பக்கம் பார்க்க)

## அரைவாசிக்கும் மேற்பட்ட அகதிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் எம்.பிக்களை இராணுவ வழித்துணையுடன் முகாம்களுக்கு கூட்டிச் செல்வது ஏமாற்றுவேலை



### அத்தகைய பயணத்தை நிராகரித்தார் ஜயலத்

கொழும்பு, நவ. 20

வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனா, இராணுவத்தினரின் துணையுடன் மேற்கொள்ளப்படும் வழிகாட்டுதல் பயணங்களை நிராகரித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை அரசு இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களுக்குச் செல்வதற்கு அனுமதித்தமை தொடர்பாக ஐ.பி.எஸ். செய்திச் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசு தேர்தல் அறிவிப்பை எந்தநேரமும் வெளியிடலாம்; காலம் இருப்பதால் பொறுமை வேண்டும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, நவ.20

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு இன்னும் காலம் இருப்பதால் அவற்றுக்காக அவசரப்படாது பொறுமையுடன் இருக்குமாறு நாட்டு மக்களைக் கேட்டுள்ளது அரசாங்கம்.

எந்தத் தேர்தலை நடத்துவதென்று அரசு இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும், எந்நேரமும் தேர்தல் அறிவிப்பை வெளியிடலாம் என்றும் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா கூறியுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசு எந்தத் தேர்தலுக்கும் முகம் கொடுக்கத் தயாராகவிருக்கிறது. எமது அரசு அதிக மக்களின் ஆதரவைப் பெற்ற மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாக இருக்கின்றது. இதை எவராலும் அசைக்க முடியாது.

இப்போதைய நிலையில் நாம் நினைத்தால் எந்தத் தேர்தலையும் நடத்தலாம். ஆனால், எத் தேர்தலை நடத்துவதென்று (20ஆம் பக்கம் பார்க்க)

## வாடகைக்கு வீடு தேடுகிறார் சரத் பொன்சேகா; உரிமையாளர்கள் மிரட்டப்படுவதால் பெறுவதில் சிரமம்!

கொழும்பு, நவ.20

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து வெளியேறுமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக மிகக் குறுகிய காலத்தில் பொருத்தமான வீடொன்றைக் கண்டுபிடிப்பதில் அவர் பலத்த சிரமத்தை எதிர்கொண்டுள்ளார் என்று கூறப்படுகிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு தகவல் வழங்கினாரா? ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் கைது!

கொழும்பு, நவ. 20

விடுதலைப் புலிகள் அமைப்பிற்குத் தகவல்களை வழங்கி மற்றும் உதவி ஒத்துழைப்புக்களை வழங்கியதுடன் மாதாந்தம் ஊதியத்தைப் பெற்றுவந்தார் எனக் கூறப்படும் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஒருவர் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிற்கு அருகிலுள்ள பிரதேசமொன்றில் வசித்துவரும் இந்த சிங்கள இனத்தவரான இராணுவ மேஜர், தாம் பணியாற்றிய காலத்தில் மாத்திரமல்லாது ஓய்வுபெற்ற பின்னரும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

15 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தில் பணியாற்றிய இவர், இராணுவப் புலனாய்வுப் பிரிவிலும் பணியாற்றியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியைச் சந்தித்தார் ஜோன் ஹோம்ஸ்

கொழும்பு, நவ. 20

இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கை தொடர்பான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

இது தவிர மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, பாதுகாப்பு செயலாளர் (20ஆம் பக்கம் பார்க்க)

ரூ. 2,000/- ற்கு இலவசமாக பேசுங்கள்

Dialog லாண்ட் லைன் தொலைபேசியில் சந்தோஷமாக பேசுங்கள்

யாழ்நகரில் Dialog லாண்ட் லைன் தொலைபேசி இணைப்பினை ரூ. 5,999/- ற்கு கொள்வனவுசெய்து ரூ. 2,000/- பெறுமதியான அழைப்புகளை இலவசமாக பெறுங்கள்.

அனைத்து Dialog வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

Fixed Line

TRC/DBN/09/001(p)

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





அண்மையில் யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வின் பதிவுகளைப் படங்களில் காண்கிறீர்கள்.

தரம்-2 மாணவிகள் இருமருங்கிலும் நின்று வரவேற்க அதிதிகள் அழைத்து வரப்படுவதையும் பின் அவர்கள் இறைவணக்கத்தில் ஈடு பட்டிருப்பதையும் முதல் இரு படங்களில் காணலாம். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். ஆயர் அதி.வண.தோமஸ் சௌந்தரநாயகம் உரையாற்றுவதையும் பாடசாலையின் பழைய மாணவியும் யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியருமான திருமதி அபிராமி செந்தூரன், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும் ஏனைய படங்களில் காணலாம்.




# வன்னி அகதிகளின் விடுதலைக்கு வழிசெய்யுமாறு மன்மோகனிடம் ஒபாமா வலியுறுத்த வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

கொழும்பு, நவ. 20

வெள்ளை மாளிகைக்கு விஜயம் செய்ய இருக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இலங்கையின் இராணுவத்தால் நடத்தப்படும் முட்கம்பி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகளின் விடுதலைக்கு உடன் வழி செய்யுமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கட்டாயம் வலியுறுத்தவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று அவசரமாக வேண்டுகோள் விடு[illegible]ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் விசேட அழைப்பின்பேரில் எதிர்வரும் நாள்களில் வெள்ளை மாளிகைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

இச்சந்திப்பின்போது இரு தலைவர்களும் சர்வதேச - சமகால - அரசியல் விவகாரங்கள் குறித்துப் பேசுவார்கள்.

இந்நிலையிலேயே இலங்கையின் முகாம் அகதிகளின் விடுதலைக்கு உடன் வழிசெய்யவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் அமெரிக்க கிளைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் லாரி கொக்ஸ் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

### இலங்கை தெரிவித்த அவகாசம் முடிந்துவிட்டது

அவர் அப்பகிரங்க மடலில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமிழ் அகதிகள் ஆறு மாதங்களுக்கு இடை யில் முகாம்களிலிருந்து விடுதலை செய்யப் படுவர் என்று இலங்கை அரசு இந்தியாவுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனால், அந்த ஆறு மாதகால அவகாசம் முடிந்துவிட்டது. ஆனால், 10 ஆயிரக்கணக்கான அகதிகள் இன்னமும் அங்கு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறுவர்கள் அடங்கலாக சுமார் 12 ஆயிரம் பொதுமக்கள் புலிச் சந்தேக நபர்கள் என்ற பேரில் இராணுவத்தால் அகதிகளின் முகாம்களில் புறம்பாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர்கள் இப்புலிச் சந்தேக நபர்களைச் சந்திப்பதற்கு அனுமதி இல்லை. இப்புலிச் சந்தேக நபர்கள் அவர்களின் சார்பில் வாதாடுவதற்கு சட்டத்தரணிகளின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களைப் பெறுவதற்கும் அனுமதி இல்லை.

அமெரிக்க ஜனாதிபதி இந்தியப் பிரதமருடனான சந்திப்பின்போது இந்த இலங்கைத் தமிழ் அகதிகளின் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணுமாறு இந்தியாவை வலியுறுத்தவேண்டும். அமெரிக்க ஜனாதிபதி இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது. இலங்கை அரசு இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்தபடி ஆறுமாத காலத்துக்குள் அகதிகளை இன்னமும் மீள்குடியேற்றவில்லை என்பதை அமெரிக்கா இந்தியாவுக்கு ஞாபகப்படுத்தவேண்டும். எனவே, இலங்கை அரசு இந்தியாவுக்கு வழங்கிய மேற்படி வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டமை தொடர்பில் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்து பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இந்தியப் பிரதமரை அமெரிக்க ஜனாதிபதி உற்சாகப்படுத்தவேண்டும். - என்று உள்ளது.


## உயர்வுக்கு வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை
விஞ்ஞான ஆசிரியர்
திருமதி
குமுதினி அசோக்குமார்
Sp. Trd (Sci) SLPS III



விந்தை மிகு விஞ்ஞான ஆசிரியர் குமுதினி மாணவர்
சிந்தையில் உரம் பெற(வே) கற்பித்தே வந்தார்
தந்தையர் போற்ற தரணியே வாழ்த்த -தன்னை
இலங்கை அதிபர் சேவையில் இணைத்தார் இன்று.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோப்பாய் ம.வி.

## அச்சுக்கூடம் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள கணனி அச்சுக்கூட தளபாடங்கள், அச்சு இயந்திரங்கள் (ஓவ்செற் மெசின்), மற்றும் கருவி சாதனங்கள் விற்பனைக்குண்டு.

தர்சா தமிழ் பதிப்பகம்,
வங்கி வளாகம், இராசா வீதி, அச்சுவேலிச் சந்தி,
அச்சுவேலி. 077 4563913,077 4083698
(சி/562613)

## தவறிவிட்டது

10 C, கடற்கரை வீதி, ஈச்சமோட்டையைச் சேர்ந்த சிவபாதம் சிவதர்ஷன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல 862363531V உட்பட சாரதி அனுமதிப்பத்திரமும் சிறுதொகைப் பணமும் யாழ்ப்பாணத்திற்கும், பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0776705672, 10 C, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை.

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

சொந்தப்பண்ணைக்கு வளர்த்த 'பிறிமா-பிறவுண்' முட்டை இடும் இளம் கோழிக் குஞ்சுகளில் (40+ நாள் வளர்ச்சி கொண்டது) ஒரு பகுதி விற்பனைக்கு உண்டு. பிற்பகல் 3 மணிக்கு பின்னர் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:021 226 3403, 021 373 4246


## மரண அறிவித்தல்கள்

### கே.என்.ஜெயசீலன்

(ஓய்வு பெற்ற இ.போ.ச பணியாளர்)



கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட கே.என்.ஜெயசீலன்(15.11.2009) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் கிருசாம்பாளின் அன்புக் கணவரும், ஜெனதா (ஆசிரியை, பாலிகா மகா வித்தியாலயம்- பாணந்துறை/முன்னாள் தாவடி-இ.த.க பாடசாலை), ஜெனதாஸ் (டென்மார்க்), கேமாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணரத்தினத்தின் அன்பு மைத்துனரும், பாலசிங்கம் (யாழ்.மருத்துவபீடம்), அந்தோனிப்பிள்ளை, பாரதி (டென்மார்க்), ஆகியோரின் மாமனாரும், ருகுணரேகா (டென்மார்க்), வித்தியாசாகரன் (லண்டன்), ஜெயதர்சன், பிறீஜனா, அமுதசாகரன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), மெரீனா (யாழ்.இந்து மகளிர்), அபிராமி (டென்மார்க்), ரெறன்மேசிகா (யாழ்.மத்திய கல்லூரி), அபினயா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஆராதனைகள் நாளை (21.11.2009) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு முற்பகல் 11 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

154/45 A, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் மேற்கு, யாழ்ப்பாணம். (91233)
தகவல்: பாலசிங்கம் (மருமகன்)

### சின்னையா சண்முகராசா (சின்னராசா)

(பிரபல மரக்கறி வியாபாரி, திருநெல்வேலி, நாவலடி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா)



யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சண்முகராசா செவ்வாய்க்கிழமை (17.11. 2009) இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு-பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ஜெயக்குமார், காலஞ்சென்ற உதயகுமார், மற்றும் ஜெகதாம்பிகை, வாலாம்பிகை, பத்மஜோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவகுமாரி, பாலாம்பிகை, லிங்கமூர்த்தி, பகீரதன், பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு சகோதரரும், கந்தையா, கனகசபை, நடராஜா, சுப்பிரமணியம், சரஸ்வதி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவாஜினி, அனோஜன், நிரோஜன், விருஷன், பவிலக்ஷன், லக்ஷிகா, நிதர்ஷன் சரண்யா, பகிரதன், சிவாஜினி, பரத்குமார் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2009) வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

75A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (91231)
தகவல்: சிவபாக்கியம் (மனைவி)
ஜெயக்குமார் (மகன்)

## நீங்காத நினைவலைகள்

15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 27 | 12 |
| ★ | ★ |
| 11 | 11 |
| ★ | ★ |
| 1948 | 1994 |



அமரர் தம்பிராசா புவனேஸ்வரன் (பவா)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 27 | 21 |
| ★ | ★ |
| 03 | 10 |
| ★ | ★ |
| 1955 | 2009 |



அமரர் லக்சுமிதேவி புவனேஸ்வரன் (பவா - உடுவில்)

அன்பிற்கும் பண்பிற்கும் இனியவர்களாய்,
எம்மைப் பாசத்தோடு அணைத்தீர்கள்
கள்ளங்கபடமற்ற உங்கள் செயல்களால்
பாரினில் பலரைக் கவர்ந்தீர்கள்

பரிதவிக் கின்றோம் உங்களை இழந்து.
உயிர் இருக்கும் வரை உங்களை மறவோம்.
புன்னகை சிந்தும் உங்கள் முகம் காண
நித்தம் ஏங்கித் தவிக்கின்றோம்.

டச்சு வீதி, உடுவில். (91232) [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சூரிச் கலந்துரையாடலின் பின்னணி என்ன?

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் தொடர்பில் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை ஒன்றிணைத்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நேற்று முதல் மூன்று நாள்களுக்கு சுவிட்ஸர்லாந்தின் சூரிச் நகரில் உயர் மட்டக் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படுவதாகத் தெரிவிக்கும் செய்திகள் இப்போது வெளியாகியுள்ளன.

இதில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்து தமிழ்த் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் பெருங் கூட்டமாக சூரிச்சுக்குப் படை எடுத்திருக்கின்றார்கள்.

இந்தக் கூட்டம் - அல்லது இந்தக் கலந்துரையாடல் - நடத்தப்படும் விதமும், அது தொடர்பான ஏற்பாடுகளும் இலங்கையிலும் புலம் பெயர்ந்த தேசங்களிலும் ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள், அவதானிகள் மட்டத்தில் பலத்த சலசலப்பையும், சந்தேகங்களையும் எழுப்பி நிற்பது உண்மை.

இத்துணை தரப்புகளை சத்தம் சந்தடியின்றி ஓரிடத்தில் கூடவைக்கும் ஏற்பாட்டாளர்கள், இதுபற்றி ஊடகங்களுக்கு மூச்சுக்கூட விடாமல், அமானுஷ்ய - அதீத - மௌனம் காப்பது ஏன் என்ற வினா இயல்பாகவே எழுகின்றது.

முரண்பட்ட திசைகளிலே - முட்டுப்பட்டு, மோதிக் கிடக்கும் தமிழ், முஸ்லிம் தலைவர்களை, ஆரவாரமே காட்டாமல் ஒரு மூடிய அறைக்குள் கொண்டுவந்து சேர்க்கும் ஓர் அமைப்பின் முயற்சியும் அதில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய தரப்புகளின் பலமும் குறைத்து மதிப்பிடக்கூடியவையல்ல.

ஆனால் இந்தக் கலந்துரையாடல், அதற்கான ஏற்பாடுகள், முன்நடவடிக்கைகள் குறித்தெல்லாம் அளவுக்கு அதிகமான மௌனம் காக்கப்படுவது ஏன்? இப்படி தமிழ், முஸ்லிம் தலைவர்கள் - அதுவும் இன்றைய மிக நெருக்கடியான வேளையில் - ஒன்றுகூடி, தமக்குள் கலந்துரையாடி ஓர் இலக்கை எட்டுவது என்பது உலகத் தமிழினமே கூர்ந்து - உற்று நோக்கி - கவனிக்க வேண்டிய விடயம். ஆனால், ஊடகவியலாளர்களையே நெருங்க விடாமல் இத்தகைய கலந்துரையாடலை, மிக இறுக்கமான சுவர்களுக்குப் பின்னால் மூடிய வேலிக்குள் நடத்துவது ஏன்? இவையெல்லாம் இயல்பாகவே சந்தேகத்தைக் கிளப்புகின்றன.

உண்மையில், நெருக்கடி மிக்க இலங்கை அரசியலில் தமிழ், முஸ்லிம் மக்கள் தரப்பில் ஒன்றிணைந்த அரசியல் நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமே அவர்களுக்கு ஏதேனும் மீட்சியை ஈட்டிக் கொடுக்கமுடியும் என்ற நன்நோக்கத்திற்காக இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்குமானால் - ஏற்பாடுகள் நடந்திருக்குமானால் - இத்தகைய அதீத,அளவுக்கு மீறிய கட்டுக்கோப்பு வேலி அத்தியாவசியமற்றதாகும்.

அது மாத்திரமல்ல, தமிழர்கள் தமக்குள்ளும், அதே சமயம் முஸ்லிம்களுடன் சேர்ந்தும் ஒன்றுபட்டு அரசியல் சவால்களை சந்திப்பதற்கான தளத்தை உருவாக்கும் நோக்கோடுதான் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்படுமானால், இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இன்னொரு பிரதான தரப்பு ஏன் புறந்தள்ளப்பட்டது என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

நடப்பதை நடந்தவாறே - உள்ளதை உள்ளபடியே - வெளிப்படுத்தித் தெரியப்படுத்துவது மட்டும்தான் ஊடகங்களின் பணி என்ற நிலைமையைத் தாண்டியதாக இன்று தமிழ் ஊடகவியல் தரப்பின் எல்லை விரிந்து, பரந்து கிடக்கின்றது.

தமிழர் அரசியலில் கருத்துருவாக்கிகளாக- பிரதான கருத்துருவாக்கிகளாக - இன்று ஊடகங்களும், ஊடகவியலாளர்களுமே முன்னிலை வகிக்கும் நிலைமை உள்ளது. இதன் காரணமாகவே தமிழின அடக்குமுறை நடவடிக்கைகளின் பிரதான அங்கமாக ஊடக அடக்குமுறையும் இலங்கைத் தீவில் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதன் காரணமாகவே அரசியல்வாதிகளுக்கு நிகராக இப்போது வரை ஊடகவியலாளர்களும் இழப்புகளை - பாதிப்புகளை - இங்கு சந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஊடகவியலாளர்களையும், ஊடகத்துறையையும் புறந்தள்ளி விட்டு, அரசியல்வாதிகள் மட்டத்தில் ஒத்த கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி என்பது நான்கு சக்கர வாகனத்தை மூன்று சக்கரத்தில் நகர்த்தும் எத்தனமாகவே படுகின்றது.

இன்றைய களநிலைமையில் ஊடகங்களைப் புறம்தள்ளி வைத்துவிட்டு, அரசியல் தலைமைகளிடையே ஒத்த கருத்தை உருவாக்க முடியும் என்பது இந்தக் கலந்துரையாடலின் ஏற்பாட்டாளர்களின் நப்பாசையாக இருந்தால் அது புத்திசாதுரியமற்றதாகவே அமையும் என்பதை சுட்டிக்காட்டுவது அவசியமாகும்.

இந்தக் கலந்துரையாடலுக்கு, பெரும் பணச் செலவில் அழைக்கப்பட்ட சில அரசியல்வாதிகளை விடவும் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் செல்வாக்கும், ஆதரவும், வரவேற்பும், வழிகாட்டும் தகைமையும் பெற்ற ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் இலங்கையிலும் புலம்பெயர் தேசங்களிலும் இருக்கின்றமையை மறைத்து விடமுடியாது.

இதேவேளை, 1985 இல் பல்வேறு தமிழ் போராட்ட இயக்கங்களும், கட்சிகளும் திம்புவுக்குக் கூட்டிச் செல்லப்பட்டமை போன்ற தோற்றத்தை இப்போது சூரிச் கலந்துரையாடல் முன்நகர்வும் காட்டி நிற்கின்றது

திம்பு ஏற்பாட்டுக்கு இந்திய அதிகார வர்க்கம் பின்புலத்தில் இருந்தது. இப்போது சூரிச் ஏற்பாட்டுக்கு வெளியே தெரியாமல் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய சர்வதேச சக்தி எது?

ஊடகத் தரப்பினைப் புறக்கணித்து - உதாசீனம் செய்து - ஓரங்கட்டி - இந்தக் கலந்துரையாடலை வெற்றிகரமாக நடத்தி விட்டால், பின்புலத்தில் உள்ள அரூபக் கரங்களை மறைத்து விடலாம் என சம்பந்தப்பட்டோர் எண்ணுவார்களேயானால் அது வேடிக்கையன்றி வேறில்லை.

எல்லா விடயங்களையும் எல்லாக் காலத்திலும் மூடி மறைத்து விடமுடியாது என்பதுதான் உண்மை.

# வன்னிப் போரில் சிக்கி உயிரிழந்த மக்களின் மரணச் சான்றிதழைப் பெற விசேட செயற்றிட்டம்

## இன்னும் 3 மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், நவ. 20

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் சிக்கி உயிரிழந்தோரின் மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொடுப்பதற்கான விசேட செயற்றிட்டம் ஒன்று இன்னும் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

யாழ்.செயலகப் பதிவாளர் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் சிக்கி உயிரிழந்த மக்களின் மரணச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு மக்கள் பிரதேச செயலகங்களுக்கும், பதிவாளர் அலுவலகத்துக்கும் அலைந்து திரிகின்றனர். இதனால் அவர்களுக்கு வீண் சிரமங்கள் ஏற்படுகின்றன.

எனவே இந்த மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு விசேட செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வன்னி யுத்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான செயற்திட்டம் ஒன்றை இன்னும் மூன்று மாதத்தில் நடைமுறைப் படுத்தவுள்ளதாகப் பதிவாளர் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் எமக்கு அறிவித்துள்ளது - என்றார் அந்த அதிகாரி. (50-9)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய கட்டடத்துக்கு மின்னிணைப்பு இல்லை

## நோயாளர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், நவ. 20

மின்சாரம் தடைப்பட்ட வேளையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட பாம்பு கடித்த நோயாளி வைத்தியசாலை புதிய கட்டடத்தில் மின்சாரம் இன்மையால் அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 17ஆம் திகதி இரவு இடம்பெற்றது.

புதிய கட்டடத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியசாலை வளாகத்தில் மின்பிறப்பாக்கி இருந்தும் இன்னமும் புதிய கட்டடத்திற்கான இணைப்பு வழங்கப்படாததால் இந்த அவசர நோயாளி யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 17ஆம் திகதி பி.ப 1.30 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருந்ததாகவும் அவ்வேளையில் வைத்தியசாலை நிர்வாக சபை செயற்பாடுகள் மின்சாரமின்மையால் ஸ்தம்பிதமடைந்திருந்ததாகவும் இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டதாகவும் தெரிவித்தனர். (50-207)

# நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவருக்கு உதவி வழங்கப் பல்வேறு நிறுவனங்கள் முன்வந்துள்ளன

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவுவதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

எனவே இதுவரை பாடசாலைகளில் இணைந்துகொள்ளாத மாணவர்கள் தமக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் இணைந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலைகளில் இணைந்து தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் மீளக்குடியமர்ந்த மாணவர்கள் பலர் இன்னும் பாடசாலைகளில் இணைந்து தமது கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்கவில்லை என்று அறிகின்றோம்.

அவ்வாறு இணைந்து கொள்ளாத மாணவர்கள் உடனடியாகத் தமக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் இணைந்து கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற உதவிகளையும் அவர்கள் பெற்றுக் கொள்ள ஏதுவாக அமையும் என்றார் அவர். (04-9)

# யாழ்ப்பாணத்தில் எரிபொருளுக்கு நிலவிய தட்டுப்பாடு நேற்றுடன் சீரடைந்தது

## விற்பனை நிலையங்களில் வழமை போன்று விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாணத்தில் எரிபொருள்களுக்கு நிலவி வந்த தட்டுப்பாடு நேற்றுடன் சீரடைந்தது.

நேற்றும், நேற்று முன்தினமும் மாவட்டங்களில் உள்ள சகல எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பும் களஞ்சியத்தின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்றும் தரைப்பாதையூடாகப் பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்கள் எடுத்துவரப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

சகல எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் சுழற்சிமுறையில் பெற்றோலை விநியோகிக்கும் பணியில் பணியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

அத்துடன் மண்ணெண்ணெய் இன்று வெள்ளிக்கிழமை சகல எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

பெற்றோல் ஒரே சமயத்தில் சகல நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட்டதால் யாழ். நகரில் நேற்று, சாதாரணமாகப் பெற்றோலைப் பெறக்கூடியதாக இருந்தது. (50-224)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், நவ. 20

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை மின்சார விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் கிளை அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

இளவாலை, மாதகல், வடலியடைப்பு, மூளாய், சுழிபுரம், பொன்னாலை, காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை வேலணை ஆகிய பிரதேசங்களில் மின்வெட்டு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-201)

## யாழ். பல்கலைக்கழக பளுதூக்கும் அணி கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், நவ. 20

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டியில் உதைபந்தாட்டம், மற்றும் பளுதூக்கும் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ். பல்கலைக்கழக அணி நேற்று கொழும்பு புறப்பட்டு சென்றுள்ளது.

உதைபந்தாட்டப் போட்டி ராஜரட்டை பல்கலைக்கழக மைதானத்திலும், பளுதூக்கும் போட்டி விளையாட்டு அமைச்சின் மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (50-23)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 05 | 21.11.2009 சனிக்கிழமை |
| திதி: | பஞ்சமி முழுவதும் |
| நட்சத்திரம்: | பூராடம் பி.ப.01.51 வரை |
| சுபநேரம்: | 03.10-04.40 வரை |
| ராகுகாலம்: | 09.10-10.40 வரை |

# தேசிய சேமிப்பு வங்கியின் இரு கிளைகள் இன்று திறப்பு

## பிரதி நிதிஅமைச்சர் சியம்பலாப்பிட்டிய பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம், நவ. 20

தேசிய சேமிப்பு வங்கியின் நெல்லியடி, அச்சுவேலிக் கிளைகளின் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் எஸ். ஆர். ஆட்டிக்கலவின் அழைப்பின் பேரில் திறப்பு விழாக்களில் பிரதம விருந்தினராக நிதி மற்றும் அரச வருவாய்த்துறை அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கலந்து கொண்டு கிளையைத் திறந்து வைப்பார்.

நெல்லியடிக் கிளையின் திறப்புவிழா இன்று முற்பகல் 11.02 மணிக்கு நெல்லியடியில் நடைபெறும்.

அச்சுவேலிக் கிளையின் திறப்புவிழா இன்று பிற்பகல் 3.25 மணிக்கு இராஜவீதி, அச்சுவேலியில் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு தேசிய சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (50-70-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்றிகள் தொல்லை

யாழ்ப்பாணம், நவ. 20

தென்மராட்சியின் மந்துவில் பகுதியில் காட்டுப்பன்றிகள் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் கூட்டம் கூட்டமாக வரும் பன்றிகள் விளை பயிர்களையும், பனம் பாத்திகளையும் துவம்சம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (207)

## தேங்காய் வீழ்ந்து மாணவன் காயம்

உயரமான மரத்திலிருந்து வீழ்ந்த தேங்காய் மாணவனின் தலையைத் தாக்கி காயப்படுத்தியது.

கடந்த புதன்கிழமை மிருசுவில், தவசிக்குளத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த எஸ்.விக்னேஸ்வரா (வயது-10) சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (207)


### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, இந்துக் கல்லூரிக்கு அருகில் குளப்பிட்டி லேனில் 4½ பரப்புக் காணியும், கொக்குவில் மேற்கு CCTM ஒழுங்கையில் 4பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்)

தொடர்பு:- இல.10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு.

(91225) 077 8997113


## நாவலர் தினப்போட்டியில் பரிசு பெற்றவர்களின் விவரம்

யாழ்ப்பாணம.நவ.20

ஆறுமுக நாவலர் தினத்தையொட்டி சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**பேச்சுப் போட்டி**

**கீழ்ப்பிரிவு**

முதலாம் பரிசு- உ.சாந்திகா (கொக்குவில் இந்து), 2ஆம் பரிசு- நவநீதா சிவநேசநாதன் (மானிப்பாய் மகளிர்), 3ஆம் பரிசு- பிரசாந்தி கண்ணதாஸ் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**மத்திய பிரிவு**

முதலாம் பரிசு- ஜனுஜா அருந்தவராசா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), 2ஆம் பரிசு- தம்பிஜயா மதுஜனன் (இணுவில் மத்திய கல்லூரி), 3 ஆம் பரிசு- க.யஸ்மிதா (கொக்குவில் இந்துக்கல்லூரி)

**மேற்பிரிவு**

முதலாம் பரிசு-சி.பவித்திரா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), 2ஆம் பரிசு- கணநாதன் உஷாந்தன் (யாழ்.இந்து.), 3ஆம் பரிசு- கோபிதா நாகலிங்கம் (இராமநாதன் கல்லூரி)

**கட்டுரைப்போட்டி**

**மேற்பிரிவு**

முதலாம் பரிசு-ப.கஜிதா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), 2ஆம் பரிசு - தர்சிகா தனராஜ் (நவாலி ம.வி.), 3 ஆம் பரிசு- கோகினி நவரத்தினம் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.). (ஒ)


### ராஜீ திருமண சேவை

இந்து கௌரவ குடும்பம், 32வயது, பூரட்டாதி நட்சத்திரம், 4செவ்வாய் (நட்பு), 53 கிரகபாவம், வர்த்தக உரிமையாளருக்கு அழகிய மணமகள் தேவை.உத்தியோகம் விரும்பத்தக்கது.

158/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077-4745647,021-3735980.

### உடன் தேவை

யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன நிர்வாகத்திற்கு திருநெல்வேலிச்சந்தியில் இருந்து புன்னாலைகட்டுவன் சந்திக்கு இடைப்பட்ட பகுதிக்குள் வாடகை வீடு (Rent House) பிரதான வீதியில் உடன்தேவை.

தொடர்பு:
0213002343
0772477977

சி.பொ.வ.மா.க.
முதலியார் (JP)
தலைவர்


## டெங்கு ஒழிப்புக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.20

டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளதாக கழகத் தலைவர் லயன். ப.செல்லத்துரை தெரிவித்தார். (207)

## லைசென்ஸ் இன்றி மணல் ஏற்றிய வாகனம் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்.நவ.20

அனுமதிப்பத்திரமின்றி (லைசென்ஸ்) மணல் ஏற்றிச்சென்ற வாகனத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்றதாகப் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த புதனன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் வாகனத்தின் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத்தவறின் 25 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் வாகனத்தை டிசெம்பர் 30 ஆம் திகதி வரை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-207)


### விண்ணப்பம் கோரல்

கடந்தகால அனர்த்தங்களால் தாய், தந்தை இருவரையும் இழந்து ஆதரவின்றி இருக்கும் தரம் 6 முதல் 9 வரையான மாணவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கம் பொறுப்பேற்று மாணவர் விடுதியில் வைத்துக் கல்வியூட்ட முன் வந்துள்ளது.

பொருத்தமான மாணவர்களிடம் இருந்து டிசெம்பர் 4ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளவும். (சி/562611)

அதிபர், யாழ். இந்துக் கல்லூரி.

### சமையல்காரர் தேவை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் விடுதிக்கு சைவ உணவு, சிற்றுண்டி சமைக்கக் கூடிய 45 வயதுக் குட்பட்ட ஆண் சமையல்காரர் 2010 ஜனவரி முதல் தேவை.

தங்குமிடவசதி, உணவு, சீருடை என்பன வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நவம்பர் 30ஆம் திகதிக்கு முன் நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்,
(சி/562610) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

### வேலை வாய்ப்பு

* மிக்ஷர் உற்பத்தி செய்யக் கூடியவர்களில் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் (ஆண்,பெண் இருபாலாரும்)
* மிக்ஷர் பொதி செய்வதில் அனுபவம் உள்ளவர்களும், ஆர்வம் உள்ளவர்களும் (பெண்கள் மட்டும்)

குறிப்பு: பேச்சு,கேட்டல் தொடர்பான விசேட தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

* மேற்பார்வையாளர் பெண் கல்வித்தரம், உயர்தரம் (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

சனி, ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் 12.30 மணிவரை தொடர்புகொள்ளவும்.

(91221)

ரேஸ்ரா மிக்ஷர்
இல.3, இந்துமகளிர் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P-0779789223


## புதிதாக 2ஆயிரம் மாணவர் சேர்ப்பு

யாழ்ப்பாணம்.நவ.20

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இணைந்துவரும் மாணவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தை நெருங்கிவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை நண்பகல் வரை ஆயிரத்து 946 மாணவர்கள் பாடசாலைகளில் சேர்த்துக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## சுயதொழிலுக்கு சுழற்சிக் கடன் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், நவ. 20

அரியாலை கிழக்கு நாவலடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தினரின் வாழ்வாதாரத்திட்ட சுயதொழில் சுழற்சிக்கடன் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரியாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கச் செயலாளர் டாக்டர் செல்வி த.சர்மிலா தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்துக்கு யாழ். கரித்தாஸ்-கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி.ஜோ.ஜெயக்குமார் அவர்கள் பிரதம விருந்தினராகவும், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஒ-7)

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்.நவ20.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-7)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியரும், ஆசிரிய சகோதரத்துவத் தலைவருமான

திரு.சிவசுப்பிரமணியம் தயாபரன்
(Sci.Sp.Trd, B.A, PGDE, M.Ed,MA(Develop), SLTS.I, SLPS III)

அவர்கள் அதிபர் தரம் III இற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளமையைப் பாராட்டுவதோடு மேலும் பல உயர்வுகள் பெற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றேம்.

ஆசிரிய சகோதரத்துவம், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (சி/562604)

### STUDY & WORK IN SINGAPORE

HOTEL MANAGEMENT / ACCOUNTING / ENGLISH
BUSINESS ADMINISTRATION

Commencing on 01/12/2009

Those who have sat for the G.C.E O/L can apply.
Accommodation can be arranged



Contact Tel:- 0755708293

### 31 ஆம் நாள் நினைவலைகள்



செல்லமுத்தர்
திருலோகச்சந்திரன் (மணி)

மண்ணில்
13.01.1950

விண்ணில்
21.10.2009

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி -சரோ
உரும்பிராய். (சி/562608) மகள்- நிரோஜினி(நிரு)

### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தசாமிப்பிள்ளை இராசரத்தினம்
(இளைப்பாறிய ஊழியர், ஊறணி அரசாங்க வைத்தியசாலை)

மலர்வு:08.08.1932 உதிர்வு: 09.11.2007

உங்கள் வாழ்வின் நினைவழியா நாள்களை நாம் எப்போதும்
நினைத்திருப்போம் என்றுமுமைத்துதிப்போம்
அப்பா நீங்கள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள்
வளம்பல சேர்த்தீர்கள்
கோவிலமைத்து குடமுழுக்கும் செய்தீர்கள்
சந்ததி வாழ்வதற்காய் சலிப்பின்றி உழைத்தீர்கள்
நோயிற்படுக்கவில்லை நொந்துன்றும் செல்லவில்லை
தாயிற் சிறந்தவனே உன்- தண்ணளியை நாம் மறவோம்
என்றென்றும் உங்கள் நினைவில் வாழும்....

(90958)

நாற்றந்தோட்டம், கரணவாய் மேற்கு, கரவெட்டி. குடும்பத்தினர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

குழந்தை திசாலினி சிவராசா



பிறப்பு
05.11.2003

இறப்பு
21.10.2009

(20.11.2009)

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த குணநிதியே
எத்தினமும் சுறுசுறுப்பாய் நீ திரிந்தாய் இவ்வுலகில்
சித்திரம் போல் உன் எழிலை சித்தரிக்க வல்லோமோ
நித்தமும் எம்முடனே இருப்பாயெனக் கற்பனைகள்
ஆயிரம் ஆயிரமாய் கோட்டை கட்டி நாம் இருந்தோம்
ஆண்டொன்றில் கல்வி கற்றாய் ஆசிரியர் பாராட்ட
ஆண்டவனே டெங்குவில் பிணைத்து உன்னை
அழைத்துவிட
மீண்டு எழ முடியாமல் மேதினியை மறந்தாயோ
நீண்ட துயர் வந்து எமைச் சூழ்ந்து நின்று வருத்துகிறதே
மீண்டும் வந்து எம் துயரம் தீராயோ!

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கரணவாய் வடக்கு, கரவெட்டி.
(90960) 'சிவாஸ்' பஸ் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மீளக்குடியேறியுள்ள மாணவர்கள் கல்வியைத் தொடர துரைசுவாமி வித்தியாலயத்தில் தரம் 5 வரை வகுப்புகளை ஆரம்பிக்குக!

## புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச் சபை அவசர கோரிக்கை

நல்லூர், நவ. 20

புங்குடுதீவு காளிகோயில் பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களின் பிள்ளைகள் தமது கல்வியைப் பெறமுடியாதவர்களாக இருக்கிறார்கள். இங்கு மீளக்குடியேறிய மாணவர்கள் தமது கல்வியைத் தொடர் வதற்கு இப்பகுதியில் உள்ள சேர் துரை சுவாமி கனிஷ்ட வித்தியாலயத்தில் ஐந் தாம் வகுப்புவரை இயங்க வைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண கல்வி கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச மாகக் காணப்படும் புங்குடுதீவின் நான்காம் வட்டாரம் காளிகோயில் பகுதியில் பெருந் தொகையான மக்கள் மீளக்குடியமர்ந்துள் ளனர். அடிப்படை வசதிகளை இழந்துள்ள இந்த மக்களின் பிள்ளைகள் தமது கல்வி யைத் தொடர தெற்கே 1½ மைல்கள் தூரத்தில் உள்ள ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி யாலயத்திலும் வடக்கே 1½ மைல் தூரம் சென்று சித்தி விநாயகர் வித்தியாலயத் திலும் தமது கல்வியைத் தொடர வேண் டியுள்ளது. இறுப்பிட்டி, பெருங்காடு வீதி கள் மற்றும் உள் வீதிகள் மிகவும் மோச மான பாதிப்புக்கு உள்ளான நிலையில் இந்த வீதிகளால் மக்கள் பாதசாரிகளாகவும் வாகனங்கள் ஊடாகவும் பயணிப் பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண் டியுள்ளது.

குறிப்பிட்ட கிராமத்தில் ஆண்டு ஐந்துக்கு உட்பட்ட 100 மாணவர்களுக்கும் அதிகமானோர் தமது கல்வியைப் பெற முடியாத நிலையில் இருக்கின்றனர். மேலும் பல மாணவர்கள் தற்சமயம் மீண்டும் குடியமர்வுக்கென வந்து கொண்டிருப்ப தால் இவர்களின் கல்வியைத் தொடரக் கூடியதாகக் குறிப்பிட்ட பகுதியில் உள்ள சேர் துரைசுவாமி கனிஷ்ட வித்தியால யத்தை ஐந்தாம் வகுப்புவரை இயங்க வைக்க உடன் நடவடிக்கைகளை எடுக்கு மாறு புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச் சபை அவசர வேண்டுகோள் விடுத்துள் ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் மாவட்ட கல்விப் பணிப்பாளர், தீவக வலயக் கல் விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. புங்குடுதீவு சிவ லைப்பிட்டி சனசமூகநிலையமும் இது தொடர்பான கடிதத்தை அனுப்பி வைத் துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (04-111)

## மக்கள் வங்கி சேவை நிலையத்தால் பயனடையும் கோப்பாய் மக்கள்

கோப்பாய், நவ.20

கோப்பாய் பிரதேசத்தில் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு அண்மையாக மக்கள் வங்கியின் சேவை நிலையம் ஒன்று அண்மையில் திறந்துவைக்கப் பட்டு சேவையினை ஆரம்பித்துள்ளது.

காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சேவைகள் நடைபெற்று வருவதாகவும் மக்களுக்குப் பல்வேறு சேவைகள் வழங் கப்படுவதாகவும் தெரிவிக் ்பட்டது.

குறிப்பாக விவசாய முயற்சிகளுக்கான கடன் சதிகள், அடகுசேவை, சாதாரண சேமிப்பு, நிரந்தரவைப்பு மற்றும் சிறுவர் சேமிப்பு ஆகிய சேவைகள் நடைபெறுவ தாகவும் கணனி வலைப்பின்னல் இணைப்பு உள்ளதால் சேவைகள் துரித மாகப் பெறக்கூடிய வசதிகள் உள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டது. (50-72)

# மீளக்குடியேறிய 11,019 மாணவர்களும், 503 ஆசிரியர்களும் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிகமாக இணைவு

வடமராட்சி, நவ. 20

வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட் டங்களில் உள்ள நலன்புரி நிலையங் களிலிருந்து யாழ்.மாவட்டத்தில் மீளக்குடி யமர்ந்த மக்களில் 11ஆயிரத்து 19 மாண வர்களும், 503 ஆசிரியர்களும் யாழ்.மாவட் டப் பாடசாலைகளில் இணைக்கப்பட் டுள்ளனர்.

இவர்களில் யாழ்.வலயத்தில் 2 ஆயி ரத்து 400 மாணவர்களும்,160 ஆசிரியர்க ளும், தென்மராட்சி வலயத்தில் ஆயிரத்து 617 மாணவர்களும், 38 ஆசிரியர்களும், தீவக வலயத்தில் 2 ஆயிரத்து 382 மாண வர்களும், 41 ஆசிரியர்களும், வடமராட்சி வலயத்தில் 2 ஆயிரத்து 150 மாணவர் களும் 117 ஆசிரியர்களும், வலிகாமம் வல யத்தில் 2 ஆயிரத்து 470 மாணவர்களும், 147 ஆசிரியர்களும் இணைந்துள்ளனர்.

இதேவேளை இந்த ஆசிரியர்களுடன் ஏற்கனவே அனர்த்தங்கள் நடைபெற்ற மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த 793 ஆசிரியர்களும் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள் ளனர்.

எனினும் இப்போது தற்காலிக இணைப் புப் பெற்ற 503 ஆசிரியர்களும் ஏற்கனவே இணைப்புப் பெற்ற 793 ஆசிரியர்களும் மாகாணக்கல்வி அமைச்சு அழைக்கும் போது தத்தமது சொந்தப் பாடசாலை களுக்குச் செல்லவேண்டும் என அறிவு றுத்தப்பட்டுள்ளது.

நலன்புரிநிலையங்களிலிருந்த யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேறிய மாணவர் களை இணைப்புப்பெற்ற பாடசாலை களில் அவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இலவச பாடநூல்களும் வழங்க ஏற்பாடாகியுள்ளது. பாதணி, கற்றல் உப கரணங்கள் என்பவற்றை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கவுள்ளன. (04-236)

## உப உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன

கோப்பாய், நவ.20

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரி வில் மீளக் குடியமர்ந்தோருக்கான அரசசார் பற்ற நிறுவனங்கள் உதவி வழங்கி வரு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. போரூட் நிறுவனத்தால் ஆயிரத்து 225 குடும்பத் தைச் சேர்ந்த 3 ஆயிரத்து 675 பேருக்கு உப உணவுப் பொதிகள் வழங்கப்பட் டுள்ளன. மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு 5 வயதிற்குட்பட்ட சிறுவர்க ளுக்கு அங்கர் 3+, அங்கர் 1+, லக்டோஜன் 1, லக்டோஜன் 2 ஆகிய பால்மா பொதி கள் 831 சிறுவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய சில அரச சார்பற்ற நிறுவனங் களும் பல்வேறு உதவிகளை வழங்க தரவு களைக் கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (50-72)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்புப் பதிவாளர் இல்லை

நவாலி, நவ. 20

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத் திற்கு பிறப்பு, இறப்பு, பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படாததனால் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு மற்றும் ஏனைய வேலை களையும் நிர்வாக உத்தியோகத்தரும் பிரதேச செயலாளரும் செய்து வருகின்றனர்.

இங்கு பணியாற்றிய உதவிப் பதிவா ளர் ஓய்வுபெற்றுச் சென்று கடந்த ஒரு வருடமாகியும் இதுவரை அந்த வெற்றி டத்துக்கு எவரும் பதிவாளர் திணைக் களத்தினால் நியமிக்கப்படவில்லை யென்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இங்கு தினமும் 40 முதல் 50 வரையான பிறப்பு, இறப்புப் பதிவு விண்ணப்பங்கள் பொதுமக்களினால் கையளிக்கப்படுகின்றனவென்றும் கூறப் படுகின்றது. (50-100)

## முறைசாராக் கல்வி பிரிவின் கண்காட்சி

நல்லூர், நவ.20

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவுக் கண்காட் சியை நடத்த நடவடிக்கைகள் மேற்கொண் டுள்ளன.

மேற்படி வலயக் கல்வி அலுவலகத் தின் முகாமைத்துவ மண்டபத்தில் எதிர் வரும் 25ஆம் திகதி புதன்கிழமை கண் காட்சி இடம்பெறவுள்ளது. யாழ்.வலயக் கல் விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கண்காட்சியைத் திறந்து வைக்கவுள்ளார். (50-111)

# மிருசுவில், கொடிகாமம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த 465 பேர் மணற்காடு இடைத்தங்கல் முகாமுக்கு மாற்றம்

வடமராட்சி, நவ. 20

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மிருசுவில், இராமநாதன் நலன்புரி நிலை யங்களில் இதுவரையும் தங்க வைக்கப் பட்டிருந்த வடமராட்சி கிழக்கைச் சொந்த இடமாகக் கொண்ட 142 குடும்பங்களைச் சேர்ந்த 465 பேர் மணற்காடு இடைத்தங் கல் முகாமுக்கு மாற்றம் செய்யப்பட் டுள்ளனர்.

மிருசுவில் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 121 குடும்பங்களைச் சேர்ந்த 413 பேரும் கொடிகாமம் இராமா வில் நலன்புரி முகாமில் தங்கவைக்கப் பட்டிருந்த 21 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேரும் நேற்று முன்தினம் பிற்பகல் இ. போ.ச.வண்டிகளில் அழைத்து வரப் பட்டு மணற்காடு நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இக் குடும்பங்கள் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, ஆழியவளை, வெற்றி லைக்கேணி, தாளையடி ஆகிய பகுதிக ளைச் சேர்ந்தவர்கள் என்பதால் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வு ஆரம்பிக்கும் வரை இந்த இடைத்தங்கல் முகாமுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடைத்தங்கல் முகாமில் தங்க வைக் கப்பட்டுள்ள மக்கள் சுதந்திரமாக நடமாடு வதுடன் தொழில்களையும் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. இது தவிர இக்குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் ஏற்படுத் திக் கொடுக்கப்படவுள்ளதாக யாழ்.செய லக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மணற்காடு இடைத்தங்கல் முகாமில் ஏற்கனவே சுனாமி பாதிப்பால் தங்கவைக் கப்பட்ட மணற்காடு கிராம மக்கள் சில மாதங்களுக்கு முன்னர் கடற்கரை ஓரம் உள்ள தமது சொந்த வீடுகளுக்குத் திரும் பினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மா.ஸ்ரீஸ் கந்தராசாவின் ஏற்பாட்டில் பருத்தித்து றைப் பிரதேச சபையினால் மணற்காடு இடைத்தங்கல் முகாம் சுத்திகரிக்கப்பட்டி ருந்தது. தற்போது மணற்காடு இடைத்தங் கல் முகாமுக்கு மாற்றப்பட்டுள்ள இக் குடும்பங்களுக்குத் தேவையான குடிதண் ணீர் விநியோகம், சுகாதார நடவடிக்கை களை பருத்தித்துறைப் பிரதேசசபை மேற் கொண்டுள்ளது. குடிதண்ணீர் விநியோகத் திற்கென சில பவுசர்களை பருத்தித்துறை பிரதேசசபை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.


இதேநேரம் மிருசுவில் நலன்புரி முகா மில் எஞ்சியிருந்த கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களைச் சேர்ந்த குடும்பங் கள் கொடிகாமம் இராமாவில் முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து மிருசுவில் நலன்புரி நிலையம் மூடப்பட் டுள்ளது. (04-236)

## பருத்தித்துறை கூட்டுறவுச் சங்க 15 ஆம் இலக்க கிளை திறப்புவிழா

யாழ்ப்பாணம், நவ.20

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கெருடாவில் 15ஆம் இலக்கக் கிளையின் புதிய கட்டடத்திறப்புவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

சங்கத் தலைவர் த.சந்திரதாஸ் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ்வில் கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் போ.சிவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (50-224)




1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி இன்பருட்டிக் கடலில் ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது அகாலமரணமடைந்த 4 மாண வர்களினதும் 2004 ஆம் ஆண்டு பேராதனையில் ரயில் விபத்தில் அகால மரணமடைந்த மாணவனினதும் நினைவுதின நிகழ்வுகள் அண்மையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் மாணவர்களின் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டிருப்பதையும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஹாட்லிக் கல்லூரி அதிபர் த.தெய்வேந்திரராஜா, வடஇந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி சீதா சண்முகநாதன் ஆகியோரிடம் நூல்கள் கையளிக்கப்படுவதையும் முதல் மூன்று படங்களிலும், மாணவர்கள் இரத்ததானம் செய்வதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் மீது பழி சுமத்தி தாம் செய்த தவறை மறைக்கப் பார்க்கிறார் முதல்வர்

## குற்றஞ்சாட்டுகிறார் ஜெயலலிதா



சென்னை, நவ. 20

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது பழியைச் சுமத்தி, தாம் செய்த தவறை மூடி மறைக்கப் பார்க்கிறார் முதல்வர் கருணாநிதி - என்று அ.தி.மு.கவின் பொதுச் செயலர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நம் மௌன வலி; யாருக்குத் தெரியப் போகிறது? என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்டு தான் முன்னுக்குப் பின் முரணாகப் பேசும் சந்தர்ப்பவாதி என்பதை மீண்டும் ஒருமுறை கருணாநிதி நிரூபித்திருக்கிறார்.

இலங்கைத் தமிழர்களுக்காக இருமுறை ஆட்சியை இழந்தோம் என கருணாநிதி கூறியிருக்கிறார். உண்மை நிலை என்னவென்றால் 1976 ஆம் ஆண்டு ஊழல் புரிந்ததற்காகவும், 1991 ஆம் ஆண்டு இந்திய இறையாண்மைக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டதற்காகவும்தான் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது.

இவ்வளவு வாய்கிழிய பேசும் கருணாநிதி, 2008 ஆம் ஆண்டு, தான் தாங்கிக் கொண்டிருக்கும் மத்திய அரசின் உதவியோடு இலங்கை இராணுவம் அங்குள்ள தமிழர்களை கொன்று குவித்தபோது என்ன செய்து கொண்டிருந்தார் என்பது பற்றி ஒரு வரி கூட தெரிவிக்கவில்லையே.

ஒருவேளை அவர் நடத்திய கபட நாடகங்களான அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம், மனிதச் சங்கிலி போராட்டம் என்று அறிவித்து அனைவரையும் கொட்டும் மழையில் நனையவிட்டு, தான் மட்டும் தன் மகனுடன் வாகனத்தில் பவனி வந்தது. பிரதமருக்கு தந்தி கொடுங்கள் என்று அறிவித்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா என அறிவித்தது. ராஜினாமா கடிதங்களை தானே பெற்றுக் கொண்டது. உலகத்தில் இதுவரை யாருமே நடத்தியிராத 3 மணி நேர உண்ணாவிரதப் போராட்டம் ஆகியவற்றை மனதில் வைத்துத்தான் அறப் போராட்டங்கள் நடத்தினார் என தனது அறிக்கையில் கருணாநிதி குறிப்பிட்டிருக்கிறார் போலும்.

கருணாநிதிக்கு உண்மையான தமிழர் பற்று இருந்திருக்குமானால், 2008 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வலியுறுத்தி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை திரும்பப் பெற்றிருக்க வேண்டும்.

இதை கருணாநிதி செய்திருப்பாரேயானால் அப்பொழுதே இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கும். தமிழினம் அழிவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும். இதைச் செய்யாதமையின் மூலம் தமிழினத்திற்குமிகப் பெரிய துரோகத்தை கருணாநிதி இழைத்து விட்டார். இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட கருணாநிதி முக்கிய காரண மாகி விட்டார்.

தன்னலம் காரணமாக தன் மீது ஏற்பட்டுள்ள களங்கத்தை துடைக்கும் வகையில் பிரபாகரன் தீவிரவாதி அல்லர், அவர் எனது நண்பர் என்று தான் கூறியமையையும், நாங்களே அடிமைகளாக இருக்கிறோம் என்று கூறி இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் தன்னுடைய இயலாமையைத் தெரிவித்தமையையும் மறந்து தற்போது பிரபாகரன் மீது பழியைச் சுமத்தி, தாம் செய்த தவறை முதல்வர் கருணாநிதி மூடி மறைக்கப் பார்க் கிறார்.

வீரம் என்கிற போராடும் மன வலிமை தன்னிடம் இல்லை என்பதையும், தன் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் செயற்படும் விவேகம் தன்னிடத்தில் மேலோங்கி நிற்பதையும் தனது அறிக்கையின் மூலம் கருணாநிதி தெளிவுபடக் கூறியிருக்கிறார்.

தமிழினத்திற்கு கருணாநிதி இழைத்த துரோகத்தை மக்கள் மறக்க மாட்டார்கள் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் - என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழக மீனவர் மீது இலங்கைப்படை நடத்திய தாக்குதலில் 4 பேர் காயம்!

இராமேஸ்வரம், நவ. 20

இராமேஸ்வரம் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாட்டுப்படகு மீனவர்களை சுற்றிவளைத்து இலங்கைக் கடற்படையினர் தாக்கினர் என்றும், மீனவர்களிடமிருந்த மீன்களைக் கொள்ளையடித்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரத்தில் இருந்தும், சங்குமால், ஓலைக்குடா ஆகிய துறைமுகப் பகுதிகளில் இருந்தும் 50 இற்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகளில் ஏராளமான மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

கச்சதீவு அருகே அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு 20 இற்கும் மேற்பட்ட சிறிய ரோந்துப் படகுகளில் இலங்கைக் கடற்படையினர் வந்தனர்.

அவர்கள் அனைவரும் இராமேஸ்வரம் மீனவர்களின் படகுகளில் இறங்கினர். படகுகளில் இருந்த மீனவர்களைக் கட்டையால் தாக்கி அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களைக் கொள்ளையடித்தனர். அத்துடன் மீனவர்களின் வலைகளை அறுத்து கடலுக்குள் வீசினர்.

பின்னர் மீனவர்களை எச்சரித்து விட்டு கொள்ளையடித்த மீன்களுடன் அவர்கள் சென்றுவிட்டனர். இந்தத் தாக்குதலில் காமாட்சி, ராஜேந்திரன் உட்பட 4 மீனவர்கள் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை குறைந்த அளவு மீன்களுடனும் மீன்களே இல்லாமலும் வெறும் படகுகளுடன் ஏராளமான மீனவர்கள் கரை திரும்பினர்.



முன்னாள் இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் பிறந்த நாளையொட்டி அவரது படத்துக்கு தலைமைச் செயலகத்தில் நேற்று முதல்வர் கருணாநிதி மலர்தூவி அஞ்சலி செலுத்தியபோது...

## ஈழ விவகாரத்தை திசை திருப்ப முயற்சிக்கும் கலைஞரை உலகத் தமிழினம் மன்னிக்காது

### பழ.நெடுமாறன் ஆவேசம்



சென்னை, நவ. 20

இலங்கை விவகாரத்தில் பிரச்சினையைத் திசை திருப்பத் தொடர் முயற்சிகளை மேற்கொள்ளும் கருணாநிதியைத் தமிழினம் ஒருபோதும் மன்னிக்காது - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கூறியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் புதன் கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ள சில செய்திகளின் உண்மைத் தன்மை குறித்து முதல்வர் கருணாநிதி கொஞ்சமும் கவலைப்படவில்லை. ரணில் கூறிய செய்திகளை வைத்துக் கொண்டு புலிகள் மீது அவதூறுச் சேற்றை அள்ளி வீசியிருக்கிறார் அவர்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நோர்வே பிரதிநிதிகள் முன்னிலையில் ஆறு சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றன.

இதைத்தொடர்ந்து, இலங்கை அரசு கடந்த 2003 ஆம் ஆண்டு ஜூலையில் தாற்காலிக நிர்வாக அமைப்புத் திட்டத்தை அறிவித்தது.

அதில், நிலம், பொலிஸ் துறை, பாதுகாப்பு, வரிவசூலித்தல் போன்றவை தொடர்பான எந்த அதிகாரமும் இந்த அமைப்புக்கு அளிக்கப்படவில்லை. இந்த அதிகாரங்கள் அனைத்தும் இலங்கை அரசிடமே இருக்கும். இந்தத் திட்டத்தை ஏற்க மறுத்த புலிகள் மாற்றுத் திட்டத்தை அளித்தனர்.

இதை ஏற்பது குறித்து பேச்சு நடத்த இலங்கை அரசு மறுத்தது. இதனால், பேச்சு முறிந்தது. இலங்கை அரசு பிடிவாதமாக ஒற்றையாட்சி முறையில் இருந்து விலகி நிற்க மறுத்தமைதான் பேச்சு முறிவுக்குக் காரணமே தவிர பிரபாகரன் அல்ல.

கடந்த 2005 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற பேச்சில் கலந்துகொள்வதை பிரபாகரன் தவிர்த்தார் என்ற குற்றச்சாட்டு முற்றிலும் தவறு. அந்த மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் அழைக்கப்படவே இல்லை.

1989ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தி கருணாநிதியையும் மாறனையும் அழைத்துப் பேசி பிரபாகரனுடன் இந்தப் பிரச்சினைக் குறித்துப் பேசி முடிவு காண வழிகாணுங்கள் என்று கூறினார் என கருணாநிதி கூறியிருக்கிறார்.

அதற்கிணங்க இவர் செய்தது என்ன? இலங்கை சென்று பிரபாகரனைச் சந்தித்துத் திரும்பியதற்காக வைகோ மீது அடாத பழியை இவர் சுமத்தினார். புலிகளின் உதவியோடு தன்னைக் கொலை செய்யச் சதி நடைபெறுகிறது எனவும் புலம்பினார். இத்தகையவரா அப்பிரச்சினை தீருவதற்கு வழிகாணுபவர்?

பிரதமராக வி.பி.சிங் இருக்கும்போது ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி என்ன சொல்கிறாரோ அதற்கேற்ப இந்திய அரசு நடந்துகொள்ளும் என்று கூறி இவரிடம் பொறுப்பை ஒப்படைத்த போது இவர் செய்தது என்ன?

ஈழத்தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகளான புலிகளுடன் மற்ற துரோக இயக்கங்களைச் சேர்ந்தவர்களையும் பேச்சுக்கு அழைப்பதற்கு இவர் செய்த முயற்சியை புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே திட்டமிட்டு அதைச் சீர்குலைத்தவர் கருணாநிதியே ஆவார்.

இந்தத் தவறை மூடி மறைத்து ரணில் கூறியவற்றை முதல்வர் கருணாநிதி திரும்பவும் கூறியிருப்பது வேண்டுமென்றே புலிகளை அவதூறு செய்வதாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பதற்கு புலிகள் தவறி விட்டார்கள் என்பதும் கருணாநிதியின் மற்றொரு குற்றச்சாட்டு. போர் நிறுத்த உடன்பாட்டில் பிரதமர் ரணிலும், பிரபாகரனும் கையெழுத்திட்டனர். ஆனால், அந்த உடன்பாட்டில் உள்ள அம்சங்களை நிறைவேற்ற பிரதமர் ரணில் காலம் கடத்தினார். புலிகள் இயக்கத்தை பிளவுபடுத்த சதி செய்தார்.

இந்த நிலையில், தேர்தலால் தங்களுக்கு எந்தப் பயனும் விளையப் போவதில்லை எனத் தமிழர்கள் கருதினர். அவர்களது விருப்பத்துக்கு மாறாக எதுவும் கூற புலிகள் விரும்பவில்லை.

இலங்கைப் படைக்கு இந்தியா இராணுவ ரீதியாக அளித்த உதவிகளை அறிந்திருந்தும் அதைத் தடுத்து நிறுத்த முன்வராமல் அதை மறைப்பதற்கு துணைநின்ற துரோகத்தை மறைத்து, பிரச்சினையைத் திசைதிருப்புவதற்காக கருணாநிதி தொடர்ந்து செய்யும் முயற்சிகள் ஒருபோதும் பயனளிக்கப்போவதில்லை. தமிழினம் அவரை மன்னிக்கப் போவதும் இல்லை - என்றுள்ளது.

## இந்தியச் செய்திகள்

## இந்திய – பாக். பேச்சில் 3 ஆவது நாட்டின் தலையீட்டுக்கு ஒருபோதும் இடமில்லை

### ஒபாமாவின் அறிக்கைக்கு மத்திய அரசு கண்டனம்

புதுடில்லி, நவ. 20

இந்திய - பாகிஸ்தான் இடையேயான பேச்சில் 3 ஆவது நாட்டின் தலையீட்டுக்கு இடமே இல்லை - என்று இந்தியா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அண்மையில் சீனாவுக்கு சுற்றுப்பயணம் சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அந்த நாட்டின் ஜனாதிபதியை சந்தித்துப் பேசினார். இதன் பின்னர் இருவரும் கூட்டாக ஒரு அறிக்கை வெளியிட்டனர்.

அதில், இந்தியா - பாகிஸ்தான் இடையே உறவுகள் வளர்ச்சியடையவும், அவற்றை மேம்படுத்துவதற்கு உதவி செய்யவும் இரு நாடுகளும் தயாராக இருக்கின்றன. தெற்காசியாவில் அமைதியான சூழலை உருவாக்கி வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு தகவல் தொடர்பை வலுப்படுத்துதல், பேச்சுகள் நடத்துதல், நாடுகளிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் போன்றவற்றுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று கூறப்பட்டிருந்தது.

அமெரிக்க - சீன ஜனாதிபதிகளின் இந்த கூட்டறிக்கைக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்து இருக்கிறது.

இதுகுறித்து மத்திய வெளிவிவகார அமைச்சின் சார்பில் அதன் செய்தித் தொடர்பாளர் விஷ்ணு பிரகாஷ் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் -

பாகிஸ்தானில் பயங்கரவாதச் சூழலும், தீவிரவாத அச்சுறுத்தலும் இல்லாத நிலை நிலவும்போதுதான் இரு நாடுகளும் பேச்சு நடத்துவது அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று இந்தியா நம்புகிறது - என்று கூறப்பட்டுள்ளது.

இதனிடையே அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் திமோத்தி ஜே.ரோமரிடம் இந்த விடயம் குறித்து டில்லியில் செய்தியாளர்கள் கேட்டதற்கு அவர் பதில் அளிக்கையில்-

'ஒபாமா - ஹூ ஜிந்தாவோவின் கூட்டறிக்கையை உண்மையில் இந்தக் கோணத்தில் நான் பார்க்கவில்லை. தெற்காசியாவில் அமைதி நிலவவேண்டும் என்ற நோக்கத்தில்தான் அவர்கள் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். இது வரவேற்க கூடிய அம்சமாகும். இந்தியாவுடனும், சீனாவுடனும் அமெரிக்கா சுமுகமான மற்றும் வலிமையான நட்புறவை வைத்துக்கொள்ள விரும்பியே செயற்பட்டு வருகிறது - என்றார்.

## கைதிகளைப் பரஸ்பரம் மாற்றிக்கொள்ள இலங்கையுடன் விரைவில் ஒப்பந்தம்

### வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தெரிவிப்பு

சென்னை, நவ. 20

இலங்கையிலுள்ள இந்திய கைதிகளை இந்தியச் சிறைச்சாலைகளுக்கு அனுப்பக் கோரியும், இந்தியச் சிறைகளிலிருக்கும் இலங்கைக் கைதிகளை இலங்கைச் சிறைகளுக்கு அனுப்பவும் விரைவில் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப் படும்.

- இவ்வாறு று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும், எம்.பியுமான திருமாவளவனுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த ஒக்டோபர் 10 முதல் 15 ஆம் திகதி வரையில் 11 பேர் கொண்ட தமிழக நாடாளுமன்றக் குழுவின் ஒருவராக திருமாவளன் இலங்கைக்குச் சென்றார்.

அங்கு வதை முகாமிலுள்ள தமிழர்கள் படும் துயரங்களை நேரில் பார்த்த திருமாவளவன் அவர்களை முகாமிலிருந்து அவர்களது சொந்த வாழ்விடங்களுக்கு அனுப்ப வேண்டும். இலங்கையில் அடைக்கப்பட்டு இருக்கும் இந்திய கைதிகளை மாற்றி அவர்களது உறவினர்கள் எளிதில் பார்ப்பதற்காகவும், பாதுகாப்பாக இருப்பதற்காகவும் இந்திய சிறைகளில் அடைக்கப்பட வேண் டும் என்பன உள்ளிட்ட சில கோரிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவர்களது சகோதரர்களிடம் முன்வைத் தார்.

இந்தக் கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, திருமாவளவனுக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் -

இலங்கையில் அடைக்கப்பட்டு இருக்கும் இந்திய கைதிகளையெல்லாம் மாற்றி இந்திய சிறைச்சாலைகளுக்கே அனுப்பக் கோரியும், இந்திய சிறைச்சாலைகளில் இருக்கும் இலங்கை கைதிகளையெல்லாம் இலங்கை சிறைச்சாலைகளுக்கே அனுப்பவும் விரைவில் ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப் படும் எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைகளால் நிமிர்ந்து நிற்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி







(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஒரு பிராந்திய மாணவர்கள் வேறு பிராந்தியப் பாடசாலைக்கு கற்கச்செல்கிறார்களெனில் இப்பாடசாலையில் உள்ள தேவைகளை இனங்கண்டு அவற்றினை உடனடியாகப் பூர்த்தி செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஒரு பாடசாலை சகல வளமும் உள்ளடக்கிய நிலையில் செயற்படுமாயின் ஒரு மாணவன் வேறு பிராந்தியப் பாடசாலைக்குச் செல்வது நிச்சயம் குறைவடையும்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியைப் பொறுத்தவரை மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த பல தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளதை அவதானிக்க முடிந்தது.

கல்லூரியில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான இடைநிலை வகுப்புகளில் ஆயிரத்து 356 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 36 வகுப்பு பிரிவுகள் உள்ளன. எனினும் இடைநிலைப் பிரிவுக்கான விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லை. சங்கீதம், புவியியல், நடனம், சமூகக்கல்வி, விவசாயம், மனையியல் போன்ற பாடங்களுக்கு ஆய்வுகூடமும் இல்லை; விசேட அறையும் இல்லை.

இக்கல்லூரி ஆய்வுகூடத்தில் இருந்த உபகரணங்கள் 2000ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது இழக்கப்பட்டுவிட்டன. அத்துடன் நூலகப் புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்களும் அவ்வேளையில் இழக்கப்பட்டன. இவற்றை ஈடுசெய்வதற்கான உபகரணங்கள் இன்னமும் இல்லாத நிலையே தொடர்கிறது.

கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் தற்போதும் நீள வாங்குகளையே வகுப்பறைகளில் பயன்படுத்துகின்றனர். இவர்களுக்குப் பொருத்தமான தளபாட வசதிகள் இல்லை.

இக்கல்லூரியில் உள்ள பல வகுப்பறைகள் இன்னமும் திறந்த வகுப்பறைகளாகவே மிகப் பழமையான நிலையில் காணப்படுகின்றன. மாரி காலத்தில் மழைநீர் சிந்துவதால் வகுப்புகளில் கற்க முடியாத நிலை.

போதிய வகுப்பறைகள் இல்லாததால் 20 வகுப்பறைகள் தற்காலிக வகுப்பறைகளிலும் பிரார்த்தனை மண்டபத்தில் இயங்குகின்றன.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட இக்கல்லூரியில் ஓர் கலையரங்கம் இல்லாதது பெரும் குறையாகவே உள்ளது. 1937ஆம் ஆண்டு தண்டவாளத் தூண்களில் அமைக்கப்பட்ட பிரார்த்தனை மண்டபமே 70 வருடங்களுக்கும் மேலாக கலையரங்காகச் செயற்பட்டு வருகிறது. இது அவசியமாக நவீன முறையில் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

இன்றைய கல்வித்துறையில் கணனிக்கல்வி அவசியம் என்பது அனைவரும் அறிந்ததே. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலையில் 20 கணனிகளைக்கொண்ட ஆய்வுகூடம் உள்ளது. இதனால் ஒரு வகுப்பு மாணவர்களை இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவைதான் பயிற்சிக்காக அழைத்துச் செல்லமுடியும். இந்நிலையில் மேலும் 40 கணனிகள் இக்கல்லூரிக்குத் தேவைப்படுகின்றன.

இக்கல்லூரியில் முகாமைத்துவ உதவியாளர், சுகாதாரத் தொழிலாளர், ஆய்வுகூட உதவியாளர், ஆய்வுகூடத் தொழிலாளி, நூலகர், நூலக உதவியாளர் போன்ற பதவிகள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளன. இவையும் நிரப்பப்படல் வேண்டும் - இத்தனையும் நிறைவு செய்யப்படும்போது தன்னிறைவு பெற்ற கல்லூரியாக சாவகச்சேரி இந்துக்கல்லூரி மிளிரும்.

★ ★ ★

# செம்மணி உப்பளம் இனிமேலும் வளம் பெறுமா?



தென்மராட்சியின் எல்லைப் பிரதேசத்தில் உள்ள செம்மணி உப்பளம் நீண்டகாலமாக இயங்கி வருவது அனைவரும் அறிந்ததே. ஆனையிறவு உப்பளத்திற்கு கடலிலிருந்து பெறப்படும் நீரில் உபரியாக வெளி யேறும் நீரைக் கொண்டே இந்த உப்பளம் உருவாக்கப்பட்டதாக முன்னோர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த உப்பளத்தை உருவாக்குவதற்கு தென்மராட்சிப் பிரதேச கடலேரி பயன்படுத்தப்பட்டது. இந்த உப்பளத்திற்கு கடல்நீரைச் சேகரித்து விநியோகிப்பதற்காகவே நாவற்குழி நீர்த்தடுப்பு அணை அமைக்கப்பட்டதாகவும் நமது முன்னோர்கள் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு ஆகிய உப்பளங்களுக்கென சுண்டிக்குளம் கடலிலிருந்து பாரிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீர் பாய்ச்சப்பட்டது. இந்த நீர் ஆனையிறவு சோதனைச் சாவடிக்கும் ஆனையிறவுச் சந்தைக்கும் இடைப்பட்ட கடலேரிக்குள் தேக்கப்பட்டு ஆனையிறவுச் சோதனைச் சாவடிக்கும் சந்தைக்குமிடையில் உள்ள ஏ-9 வீதி, புகையிரத வீதி ஆகியவற்றிலுள்ள பாலங்கள் ஊடாக உள்ளே வரவழைக்கப்பட்டது.

அங்கிருந்து நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஊடாக உப்பளங்களுக்கு உப்புத்தயாரிப்பதற்கு வாய்க்கால்கள் ஊடாகக் கடல்நீர் விநியோகிக்கப்பட்டன. (காலப்போக்கில் இவ்விரு வீதிகளிலும் இருந்த பாலங்கள் மூடப்பட்டுவிட்டன) தினமும் குழாய்கள் மூலம் வெளியேறும் கடல் நீரில் உபரியாக காணப்படுபவை வாய்க்கால்கள் வழியே ஆனையிறவு உப்பளத்திற்கு மேற்குப் பகுதியில் உள்ள கடலேரிக்கு விடப்பட்டன.



இந்தக் கடல் நீர் கடலேரி வழியாகக் கிளாலி, கச்சாய், கேரதீவு, தனங்கிளப்பு, மறவன்புலோ, நாவற்குழி ஆகிய கடலேரி வழியாக நாவற்குழி நீர்த்தடுப்புப் பாலத்தைச் சென்றடையும். நாவற்குழிப் பாலத்திலிருந்து நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் வாய்க்கால்கள் வழியாகச் செம்மணி உப்பளத்திற்கு கடல்நீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. இதனால் பெருமளவு உப்பு செம்மணி உப்பளத்தில் விளைவிக்கப்பட்டது.

நாட்டு நிலைமை காரணமாக ஆனையிறவு ஏ•9 வீதி பாலம், புகையிரத வீதிப் பாலம் ஆகியவை முழுமையாக மூடப்பட்டதை அடுத்து ஆழ்கடல் உப்புநீர் இந்த உப்பளத்திற்கு வருவது தடைப்பட்டது. அதன் பின்னர் நாவற்குழிப் பாலத்தில் உள்ள நீர்த்தடுப்புப் பாலத்தில் சேகரிக்கப்படும் உப்புநீரை உப்பு உற்பத்திக்குப் பெறப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வ.ந.நவரத்தினம் அவர்களின் முயற்சியினால் கச்சாய் கடலேரியை உப்பளமாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கச்சாயிலிருந்து சாவகச்சேரி வரையான கடலேரியில் ஆழம் குறைந்த பகுதியை உப்பளமாக்குவதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

உப்பளம் அமைப்பதற்கான எல்லைக் கற்கள் பல இடங்களில் நாட்டப்பட்டன.

சில காரணங்களால் இத்திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் சாவகச்சேரியில் பாரிய உப்பளம் அமைந்திருக்கலாம்.




தொகுப்பு: ஜயந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் - கரவெட்டி.

## மதிப்பளித்தல் நிகழ்வு 2009

தோற்றியோர்: 50
சித்தியடைந்தோர்: 18
100 புள்ளிக்குமேல் பெற்றோர் : 39
சித்திவீதம்: 36

காலம்:
21.11.2009 சனிக்கிழமை
காலை 9.00 மணி

பிரதம விருந்தினர்:
திரு.கு.சிவபாலன்
(பிரதம பொறியியலாளர், யாழ் மாவட்ட கல்வித் திணைக்களம்)

சிறப்பு விருந்தினர்:
திரு.க.அம்பலவாணர்
(கோட்டக்கல்வி அதிகாரி)

பரிசில் வழங்குபவர்:
திருமதி வசந்திமாலா சிவபாலன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

### புலமைப்பரிசில் பரீட்சை - 2009 சித்தியடைந்தோர்


சி.லக்சிகா 168


ஆ.ஹெனோசன் 166


கு.நிதுஷா 165 (தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டியில் தங்கப்பதக்கம்)


யோ.ரகீஷன் 159


பு.கஜன் 159


ஜெ.மிதுர்ஷன் 159


சி.கம்ஷா 158


பி.வைஷ்ணவி 157


இ.தர்விகன் 157


வே.வினோத் 155


ச.சஞ்ஜித் 153


சு.தர்சனா 150


கெ.அகத்தியா 149


இ.சோபிகா 145


இ.விவேதனன் 144


சி.மிதுளா 144


சு.மதுசன் 143


சி.திலக்ஷனா 140

இப்பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களையும் தேசிய, மாகாண, மாவட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்தி பாடசாலையின் பெருமையினை மேம்படுத்துகின்ற எமது ஆசிரியர் குழாத்தினையும் பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்.

(கு.562490)

# 825 குடும்பங்களைச் சேர்ந்த 2,280 பேர் மீள்குடியமர்வு

## பலாலி இராணுவத் தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் இருந்து 825 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 280 பேர் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

பலாலியில் உள்ள இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

குருநகர், கோப்பாய் மற்றும் கைதடி ஆகிய நலன்புரி நிலையங்களிலிருந்து பொது மக்கள் விடுவிக்கப்பட்டு தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதையடுத்து யாழ்.மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் இருந்த பொது மக்கள் அனைவரும் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-9)

# நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ.20

பேராசிரியர் மா.சின்னத்தம்பி எழுதிய "பாடசாலையும் ஆசிரியரும்; ஓர் ஊடக விழிப் பார்வை" நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் நிகழ்த்துவர்.

நூலின் முதற்பிரதியை மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர் என். நாகேஸ்வரன் பெற்றுக் கொள்வார். மதிப்பீட்டுரையை அகவிழி, கூடம் சஞ்சிகை ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் தெ. மதுசூதனன் வழங்குவார். (04-201)

## வலி.கிழக்கில் மீளக்குடியமர்ந்தோர் கவனத்துக்கு

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 20.10.2009 இக்கு முன்னர் வந்து மீளக் குடியமர்ந்தவர்கள் மற்றும் முதற்கட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இதுவரை பெறாதவர்களுக்கு முதற்கட்டக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப் பிரதேச செயலர் பிரிவில் வதியும் குடும்பத் தலைவர் இலங்கை வங்கிக் கிளையில் தமக்குரிய கணக்கினை தொடங்கித் தமது பிரிவு கிராம அலுவலர்களூடாகப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலி. கிழக்குப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (50-72)


கணபதி துணை

## ஆன்மீகச் சுற்றுலா

பிள்ளையார் கதையை முன்னிட்டு உச்சிப்பிள்ளையார், பிள்ளையார் பட்டி, மதுரை மீனாட்சி உட்பட ஆறுபடை வீடுகளுக்கும் குறைந்த செலவில் நிறைந்த பயணம். பதிவுகள் ஆரம்பம். முந்தும் முதல் ஐவரிற்கு விஷேட கழிவு.

விவரம்: 0776953726, 0217451990.
Ravikumarr.
" Gowri Vasa"
ஆலடி, உடுவில், சுன்னாகம்.
(91204)



மீண்டும் யாழ். மண்ணில்......

ஆர்வலர்களின் அறிவுப்பசிக்கு விருந்தளிக்க மிக விரைவில் வெளிவர இருக்கின்றது

# கம்ப்யூட்டர் ருடே

இலங்கையின் முதலாவது தமிழ் கணினிச் சஞ்சிகை

- நவீன தகவல் தொடர்பாடல் துறை பற்றிய புதிய தகவல்கள்
- சமகால கணினிச் சந்தை
- மாணவர்களுக்கான கணினி உலகம்
- கணினிக் கற்கைகளின் விவரக் கொத்து
- நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய தொடர்கள்
- மற்றும் பல பயனுள்ள பல புதிய தகவல்களுடன், புதுப் பொலிவுடன்......

கம்ப்யூட்டர் ருடே யில் பணியாற்றுவதற்குப் பின்வரும் பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அ. உதவி ஆசிரியர்கள் (Sub Editors)
ஆ. பக்க வடிவமைப்பாளர்கள் (Page Makers / Type Setters)
இ. வரைகலை நிபுணர்கள் (Graphic Designers)

தரமான ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

(சி/562484)

தொடர்புகளுக்கு :
ஆசிரியர் - கம்ப்யூட்டர் ருடே, GATEWAY Language & ICT Centre
347,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல : 0774447646


# நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
28
10
1928



ஆண்டவன் அடியில்
01
12
2008

## அமரர் திருமதி. அரியரட்ணம் நாகேஸ்வரி

(மானிப்பாய்-பம்பலப்பிட்டி)

சதுர்த்தி திதி: 20.11.2009

ஆண்டுகள் பல சென்றாலும்
அமைதியான உங்கள் பண்பும்
அன்பான வார்த்தைகளும்
அரவணைக்கும் நற்குணமும்
அணையாத தீபமாய்
நிலைத்து நிற்கும் எம் மனதில்!

என்றும் உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தி பெறவேண்டி நிற்கும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

245/1 காலி வீதி, பம்பலப்பிட்டி. தொலைபேசி 011 2501555

(சி/562507)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மஹிந்தவும் 3 சகோதரர்களும்!

**இலங்கை அரசை இயக்கிக் கொண்டிருக் கும் ராஜபக்ஷ சகோதர நிறுவனத்தின் அரசியல் கட்டமைப்பின் மீதான கண்ணோட்டமாக அமைகிறது இக்கட்டுரை 'லக்ருவணி மெதகம' என் பவரால் எழுதப் பட்ட இக்கட் டுரை கடந்த 8ஆம் திகதிய 'இருதின' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது. அதன் தமிழ் வடிவமே இது.**

"இன்று, 'மஹிந்த சகோதர' நிறுவனத்தின் 363 பேர் பலதரப்பட்ட அரச பதவிகளை வகித்து வருகின்றனர். இவர்கள் அன்னவருமே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள விதிமுறைக்கு அமைய இப்பதவிகளில் அமர்த்தப்பட்டிருக்கவில்லை. இவர்களுக்கு இருக்கும் ஒரே தகுதி அவர்கள் 'சகோதர நிறுவனத்தின்' உறுப்பினர்கள் என்பது மட்டுமேயாகும்.

அண்மையில், பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் வைத்து மேற்குறிப்பிட்டவாறு கருத்து வழங்கியவர் சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவரான மங்கள சமரவீர. அவர் இவ்வாறு தெரிவித்திருந்தமைக்குக் காரணம் உள்ளது. இன்று அரசினுள் போன்றே அரசுக்கு வெளியிலும் சகோதர நிறுவனமானது எந்தளவு தூரத்துக்கு வலுவாகக் காலூன்றிக் கொண்டுள்ளது என்பதை நாட்டுக்குப் புலப்படுத்திவிடுவதே அவரது அக்கருத்து வெளிப்பாட்டுக்கான காரணமாகும்.

மங்கள சமரவீரவின் கூற்று முற்றிலும் உண்மையானதேயாகும். அதாவது அரசும், அரசோடு சம்பந்தப்பட்டுள்ள முன்னணி நிறுவனங்கள் என்ற அனைத்தையும் நிர்வகித்து வருவோர் 'பரசூட்களின்' மூலம் உயர் பதவிக் கதிரைகளில் வந்தமர்ந்து கொண்டுள்ள சகோதர நிறுவனத்தின் உறுப்பினர்களேயாவர்.



**ஜனாதிபதியின் செலவு**

இந்த அரசைப் பொறுத்தவரையில் அதன் நான்கில் மூன்று பங்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்தின் கீழேயே கொண்டு செல்லப்படுகிறது. உதாரணமாக எதிர்வரும் ஆண்டுக்கான 'வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்காத அரசு, தேர்தலை எதிர்கொள்ளும் வரையில் அரசை நடத்திச் செல்வதற்காக இடைக்கால உத்தேச கணக்கு அறிக்கையை முன்வைத்து அவசர அவசரமாக அதை நிறைவேற்றிக் கொண்டது. இவ் அறிக்கையின் மூலம் ஜனாதிபதி மஹிந்தரின் நான்குமாத காலத்துக்கான செலவினங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த தொகை 280 கோடி ரூபாவாக காட்டப்பட்டிருந்தது. வேறு விதத்தில் கூறுவதானால் மஹிந்த ராஜபக்ஷவின் தினமொன்றுக்கான செலவினம் ஒரு கோடியே 90 லட்சம் ரூபாவாகும்.

இலங்கையின் வரலாற்றில் ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்து கொண்ட எந்தவொரு ஜனாதிபதியும் இத்தகையதொரு பெரும் தொகையை தமது ஒரு நாளைய செலவீனமாகச் செலவழித்ததில்லை. முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவோ, ஆர்.பிரேமதாஸாவோ, டீ.பி.விஜேதுங்கவோ இத்தகையதொரு பெரிய நிதித்தொகையைத் தமக்காக ஒதுக்கிக்கொண்டதில்லை. குறைந்தபட்சம் செலவினம் மிக அதிகமானது என எதிர்க்கட்சியின் கடுந்தொனி விமர்சனத்துக்கு உள்ளான ஜனாதிபதி சந்திரிகா கூட இத்தகைய மிகப் பாரியதொரு தொகையைத் தமது செலவினமாகப் பயன்படுத்திக் கொண்டதில்லை.

**அண்ணன், தம்பிகளின் அதிகார 'ஆதிக்கம்'**

அது இவ்வாறிருக்க, மஹிந்த ராஜபக்ஷ இவ்விதமான அரசின் நான்கில் மூன்று மடங்கு நிர்வாகத்தைத் தாமே நிர்வகித்து வருகிறாரெனில் எஞ்சியுள்ள நான்கில் ஒரு பங்கை நிர்வகித்து வருவோர் எவர்? என்ற வினா இங்கு தொக்கி நிற்கிறது.

அதற்குப் பதிலாக அமைவது, அவர்கள் வேறு எவருமல்லர், மஹிந்தவைத் தவிர எஞ்சியிருக்கும் அவரது மூத்த சகோதரர்களும் இளைய சகோதரர்களுமான மூவரே என்பதாகும். அதற்கமைய, இன்று அரசின் முதல்வரிசை நிறுவனங்கள் அனைத்தும் நிர்வகிக்கப்படுவது இந்த அண்ணன் தம்பிமார்களினாலேயே ஆகும்.

அந்த வகையில், மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஷவின் கரத்துக்குள் இந்நாட்டுப் பொருளாதாரத்தின் கேந்திர மையங்களான விமான சேவை மற்றும் துறைமுகங்கள் அடங்கியுள்ளன. நாட்டின் வருவாயின் அதிகரித்த அளவுப் பிரமாணம் இந்த இரு துறைகளிலிருந்தே கிட்டுகிறது. அவற்றைவிட நீர்ப்பாசனம் போன்ற துறைகளும் சமல் ராஜபக்ஷவின் கரங்களுக்குள்ளேயே உள்ளன.

இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய அனைத்து அபிவிருத்தித் திட்டங்கள் முழுமையாகவே சார்ந்திருப்பது சகோதர நிறுவனத்தின் அடுத்த முக்கியஸ்தரான பஸில் ராஜபக்ஷவின் கீழேயேயாகும். 'கிழக்கின் உதயம்' அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் அதன் அனைத்துச் செயற்பாடுகளும் பஸில் ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பின் கீழேயே நிகழ்கின்றன. அது போதாதென்று ''வடக்கின் வசந்தம்'' திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்துச் செயற்பாடுகளுக்குமான கட்டளைகளைப் பிறப்பிப்பவரும் பஸில் ராஜபக்ஷவேயாவார். வீதி அபிவிருத்தியின் அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்புவரும் பஸில் ராஜபக்ஷவே. இவ்வாய்ப்புக்கள் அனைத்துமே தினமும் கோடிக் கணக்கில் பணம் அங்குமிங்குமாக புரளும் சாதகங்களைக் கொண்டனவாகும். ஆனால், இங்கு புதுமைக்குரியது யாதெனில், இப்பணத் தொகைகள் என்னவாகின்றன என்பதற்கான சுவடுகள் எங்கு தானும் பதியப்படாததேயாகும்.

இதற்கு நல்லதொரு உதாரணத்தை முன்வைக்க முடியும். அதாவது, தெனியாயவில் நிறுவப்பட்டுவரும் அரச மாளிகைக்குச் செல்லும் பாதை 'மகநெகும'வின் மூலம் 'கொங்கிறீற்' கலவையிடப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. அந்த வினாவுக்கு அரச தரப்பினரால் பதில் வழங்கப் பட்டபோது 'மகநெகும' திட்டம் (பாதை மேம் படுத்தல் திட்டம்) என்பது அரசின் நிறுவனமொன்றல்ல என்றே மழுப்பலாகப் பதிலளிக்கப்பட்டது. ஆனால், 'மகநெகும' பஸில் ராஜபக்ஷவின் நேரடி நிர்வாகத்தின் கீழேயே செயற்படுகிறது.

**'பொம்மை' அமைச்சர்கள்!**

இது, சகோதர நிறுவனத்தின் செயற்பாடுகளின் ஒரு பக்கம் மட்டுமேயாகும். மறுபக்கத்தை நோக்குவோமானால், அரசின் இன்றைய அமைச் சர்கள் அனைவரும் பெயரளவில் மட்டுமே அமைச் சர்களாக உள்ளனர். அதாவது அவர்கள் தமது அமைச்சின் துறைகளிலுள்ள அவர்களது பதவிக் கதிரைகளுக்கு மட்டுமாக வரையறுக்கப்பட்டுள்ள பொம்மைகளாக அமர்ந்துள்ளனர். அவர்களுக்குரிய வேலைத் திட்டங்களின் அனைத்துச் செயற்பாடு களும் சகோதர நிறுவனத்தின் பணிப்புரைகளின் மீதே முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களின் உத்தரவுகளே அங்கு நிறைவேறுகின்றன. அமைச் சர்களின் உத்தரவுகளைவிட அமைச்சுக்களுக்கு அப்பாலிருந்து வரும் இந்த சகோதர நிறுவனத்தின் 'பரசூட்' உத்தரவுகளுக்கே அங்கு பெறுமதி கிட்டுகிறது.

அமைச்சு ஒன்றின் மூலமாக கேள்வி கோர லொன்று (டெண்டர்) கோரப்படுமானால், அக் கேள்விக் கோரல் சகோதர நிறுவனத்தால் பரிந்துரை செய்யப்படும் நபருக்கே கிட்டுகிறது. அதற்கான தரகுப்பணம் சகோதர நிறுவனத்தைச் சென்றடைகிறது. இங்கு அரசின் அமைச்சர்களுக்கென்ற எந்தவொரு அதிகாரமும் இல்லை. இதன் காரணமாக, இன்றைய அளவில் சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்களும் கூட, சகோதர நிறுவனம் தொடர்பாக கடும் விரக்தி நிலைக்கே உள்ளாகியுள்ளனர்.



சமல்



பஸில்



கோத்தபாய

அண்மையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப் பட்ட சட்டப்படி வேலையென்ற தொழிற்சங்க நடவடிக்கையின்போது, சகோதர நிறுவனத்தின் மகிமைகளை நாட்டு மக்களால் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. இத் தொழிற்சங்கச் செயற்பாடுகளின் இடைநடுவில், ஜனாதிபதி நேபாளத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். மேற்படி தொழிற்சங்கங்கள், கனியவள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸியுடன் பேச்சுகளை மேற்கொண்ட போதிலும், அமைச்சர் பௌஸியால் அவர்களது விவகாரம் சம்பந்தமாக எந்தவொரு இறுதித் தீர்மானத்தையும் எடுக்க இயலாது போனது. அதாவது, ஜனாதிபதி நாடு திரும்பும் வரையில் தம்மால் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க இயலாதெனத் தொழிற்சங்கங்களுக்கு அவர் தெரிவித்திருந்தார்.

**பஸிலிடம் கேளுங்கள்!**

சகோதர நிறுவனத்தின் மகிமைகளை உணரத்தக்க மேலுமொரு சம்பவம் கடந்த வாரத்தில் இடம்பெற்றது. அதாவது, இலங்கையில் வெளிவரும் பத்திரிகையொன்று, மீள் குடியேற்றங்கள் தொடர்பான அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் வினாவொன்றை எழுப்பியிருந்தது.

அது, இன்றைய அளவில் இடம்பெயர்ந்துள்ள மக்களுள் எவ்வளவு தொகையினர் மீள்குடியமர்த்தப் பட்டுள்ளனர் என்ற வினாவேயாகும். அவ்வினாவுக்கு அபூர்வமானதொரு பதிலை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வழங்கியிருந்தார். அது குறித்துத் தமக்கு [illegible] வடபுலத்தின் அனைத்துவிதச் செயற்பாடுகளுடன் சம்பந்தமான தகவல்களைத் தெரிந்து கொள்வதற்குப் பிரமுகர் பஸில் ராஜபக்ஷவையே அணுகுமாறும் அவர் பதில் வழங்கியிருந்தார்.

இவற்றிலிருந்து இந்த சகோதர நிறுவனமானது அரசையும், அரசின் கேந்திர மையங்களையும் சிலந்தியைப் போன்று கௌவிப்பிடித்து ஆக்கிரமித்துக் கொண்டுள்ள விதம் தெளிவாகப் புலப்படுகிறது.

**மன்னராட்சிக்குச் செல்கிறோமா?**

இவை மட்டுமல்ல, எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில், இச் சகோதர நிறுவனமானது நாடளாவிய ரீதியில் போட்டியிடத் தயார் நிலையில் இருந்ததாகத் தெரிவிக்கும் செய்தி கள் பல்வேறு தினத்தாள்களிலும், இணையத்தளங் களிலும் காணமுடியும். அப்பத்திரிகைகள் வழங்கும் தகவல்களுக்கு அமைய, மேல்மாகாணத்துக்கு பஸில் ராஜபக்ஷ, வடமேல் மாகாணத்துக்குப் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ, சப்ரகமுவ மாகாணத்துக்கு சமல் ராஜபக்ஷ, தென் மாகாணத்துக்கு நாமல் ராஜபக்ஷ, ஊவா மாகாணத்துக்கு சசீந்திர ராஜபக்ஷ என்ற விதமாக வரவிருக்கும் தேர்தலில் நாட்டின் அதிகாரத்தைப் போன்றே மாகாணங்களின் அதிகாரத்தையும் கூடத் தமதாக்கிக் கொள்வதே சகோதர நிறுவனத்தின் குறிக்கோளாகும்.

இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, இவர்கள் பயணித்துச் செல்வது வேறு எங்கும் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தி நிற்பது போன்றே மன்னராட்சி அரசொன்றுக்கே யாகும் - முடியாட்சிக்கேயாகும். பண்டைய முடியாட்சி அரசுகளிலும் கூட மன்னரென்பவர் ஒட்டுமொத்த தேசத்தையும் நிர்வகித்தார். நாட்டின் பட்டி தொட்டிகள் ஈறாக அரசின் கட்டளைகளே நடைமுறைப்படுத்தப் பட்டன. அமைச்சர்களும், பிரதானிகளும் மன்னரின் காலடியில் சூழ்ந்திருந்தனர். மன்னர் நாட்டை நிர்வகிக்கையில் மன்னரின் சகோதரர்கள் இளவரசர்களாகப் பட்டம் சூட்டப் பெற்று நாட்டின் பிரதேசங் களை நிர்வகிக்க அமர்த்தப்பட்டனர். இன்று விரிவடைந்து வருவதும் கூட, அப்பண்டைய முடியாட்சியையேயொத்த நிர்வாகக் கட்டமைப்பேயாகும். சற்று வித்தியாசமானதாக அமைவது, இன்று அந்த அரசானது கூட்டாட்சியென்ற அம்சங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளதேயாகும்.

என்றாலும் கூட, இதற்கு முன்னரும் இந்நாட்டில் இதுபோன்ற குடும்ப நிர்வாகம் நிலவியுள்ளதல்லவா? அவ்வாறிருக்கையில் இப்போது மட்டும் எதிர்க்கட்சிக்கு ஏன் இந்த விமர்சன நோய் ஏற்பட்டுள்ளது?

**பண்டா குடும்பம் பரவாயில்லை!**

ஏதோ ஒரு தரப்பினர் இவ்வாறு வினாவெழுப்பி நிற்கக்கூடும். அந்த வாதத்தில் உண்மையில்லையெனக் கூறிவிடவும் இயலாது. அதாவது, பண்டாரநாயக்கா குடும்பம் 1956 ஆம் ஆண்டிலிருந்து இடையிடையே இந்தநாட்டை ஆண்டு வந்துள்ளது. அந்த வகையில் 1956 இல் எஸ். டயிள்யூ.ஆர்.டீ. பண்டார நாயக்கவும் அதன் பின்னர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவும் பின்னர் சந்திரிகாவும் கூட இந்நாட்டில் பிரதமர்களாகவும் ஜனாதிபதிகளாகவும் ஆட்சி புரிந்துள்ளனர். ஆனால்,இவர்களிடம் தென்பட்ட வித்தியாசமென்பது நாட்டை நிர்வகிக்கையில் இவர்கள் தமது குடும்ப நிறுவனத்தை நாடளாவிய ரீதியில் கட்டமைத்து விட எத்தனிக்காமையேயாகும்.

குறைந்த பட்சமாக, பண்டாரநாயக்கா நாட்டை நிர்வகித்துச் செல்கையில் தமது துணைவியை அதனுடன் இணைத்துக் கொண்டதில்லை. பின்னர் நிர்வாகத்துக்கு வந்த அவரது துணைவியாரான சிறிமாவோ பண்டாரநாயக்காவும்கூட, அது போன்றே ஒழுகினார். சந்திரிகாவும் கூட இரு தடவைகள் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியிலிருந்தாலும்,தனது சகோதரரான அனுரா பண்டாரநாயக்காவைப் பிரதமராக்கிவிடவோ அல்லது அனுரவுக்கு அமைச்சுக்களின் நான்கில் மூன்று பங்கு அதிகாரத்தை கையளிக்கவோ எத்தனித்ததில்லை. அதேபோன்று, பண்டரநாயக்க சந்ததியினரைத் தேடிக் கண்டறிந்து அரசின் உயர் பதவிகளில் அமர்த்திவிட எத்தனித்ததுமில்லை. வெளியுறவுத்துறை சேவைகளுக்கு 'பரசூட்'களின் மூலம் இறக்கிவிட்ட நபர்களைப் பதவிகளில் அமர்த்தியதும் இல்லை.

ஆனால், இன்றோ, அதற்கு நேர்மாறான விதத்திலான செயற்பாடுகளே இங்கு நடந்தேறி வருகின்றன.

இது போன்று,சகோதர நிறுவனங்களை நாட்டில் கட்டமைத்து அரசைத் தமக்குரிய சொத்தாக உரிமைப் பத்திரம் எழுதிக்கொண்ட அரச நிர்வாகிகளோ உலகில் தாராளமாகவே காணப்பட்டுள்ளனர். அந்தவகையில் ரஷ்யாவின் சார் மன்னர் குடும்பமும், பிலிப்பைன்ஸ் மார்க்கோஸ் குடும்பமும் அவ்விதமாக சகோதர நிறுவனங்களை நாடளாவிய ரீதியில் கட்டமைத்து நிர்வாகத்தைக் கொண்டு செல்லும் விதத்தில் செயற்பட்டுள்ளன. ஆனாலும் இறுதிக்கட்டத்தில் அவர்களும்கூட நாட்டு மக்களின் தீர்ப்புக்குத் தலைவணங்க வேண்டிய நிலையே ஏற்பட்டது. அவர்களது இறுதி முடிவாக நாட்டு மக்களாலேயே அவர்கள் நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டனர்.

அவைபோன்ற நிகழ்வுகள் எமது நாட்டில் முன்னொருபோதும் இடம்பெற்றதில்லையென்றாலும்கூட, இந்த வரலாற்றுப் பாடங்கள் எமது நிர்வாகிகளுக்கும் கூட பெறுமதிமிக்க பாடங்களாகும்.

************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - யாழ்ப்பாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - I    34-T-I

01. தாவரங்களின் பிரதிநிதித்துவமானது உயிருலகின் நிலவுகைக்கு மிகவும் இன்றியமையாதாகும். அந்த வகையில் தாவரங்கள் சுவாசிக்கப் பயன்படும் வாயு பின்வருவனவற்றில் எது?
1) காபனீரொட்சைட்டு. 2) நைதரசன்.
3) ஒட்சிசன். 4) ஒட்சிசனும் காபனீரொட்சைட்டும்.

02. பன்றிக்காய்ச்சலை (Swine Flu) உருவாக்கக்கூடிய வைரஸ் வகை எது?
1) $AH_1N_1$ 2) ஆபோவைரஸ் 3) HIV 4) அந்திரெக்ஸ்.

03. யூரியாவின் செறிவு குறைவாகக் காணப்படக்கூடிய மனித உடலில் காணப்படும் குருதிக்குழாய் பின்வருவனவற்றில் எது?
1) சுவாசப்பை நாளம். 2) ஈரல் வாயி நாளம்.
3) ஈரல் நாளம். 4) சிறுநீரக நாளம்.

04. அணு எண் அடிப்படையிலமைந்த தற்கால பயன்பாட்டுக்குரிய நவீன ஆவர்த்தன அட்டவணை யாரால் தயாரிக்கப்பட்டது?
1) மெண்டலீவ். 2) மோஸ்லி. 3) J.J.தொம்சன். 4) நியூட்டன்.

05. இருசொற் பெயரீட்டின் தந்தை என வர்ணிக்கப்படுபவர் யார்?
1) சாள்ஸ் டார்வின். 2) மெண்டலீவ்.
3) கரோலஸ் லினேயஸ். 4) மெண்டல்.

06. பின்வருவனவற்றுள் எது ஒரு கழிவுப்பொருளாக விஞ்ஞானரீதியில் கருதப்படுவது இல்லை?
1) மலம். 2) யூரிக்கமிலம்.
3) காபனீரொட்சைட்டு. 4) யூரியா.

07. வெப்பச் சக்தியை அளவிடும் சர்வதேச அலகு,
1) கெல்வின். 2) யூல். 3) பரனைட்டு. 4) செல்சியஸ்.


08. முதுகுப்புற வேர்த்திரட்டில் காணப்படுவது பின்வருவனவற்றில் எது?
1) இயக்க நரம்புக்கலத்தின் கலவுடல். 2) புலன்நரம்புக்கலத்தின் கலவுடல்.
3) இடைநரம்புக்கலத்தின் கலவுடல். 4) மேற்கூறிய எவையுமன்று.

09. ஒளித்தொகுப்பின்போது இரண்டு மூல் குளுக்கோசை உருவாக்கத் தேவையான நீர் மூலக்கூறுகளின் மூல் எண்ணிக்கை யாது?
1) 12 2) 6 3) 36 4) 1

10. நாம் உண்ணும் உணவிலுள்ள சக்தி பெருமளவில் பின்வரும் எவ்வடிவில் வீண்விரயமாகிறது?
1) வெப்பமாகக் கலச்சுவாசமூலம். 2) இயக்கமாக.
3) இரசாயன சக்தியாக 4) அமுத்தச்சக்தியாக.

11. 10ml குருதியில் காணப்படக்கூடிய குளுக்கோசின் அளவு யாது? (ஆரோக்கியமான ஒருவருக்கு)
1) 9mg. 2) 90mg 3) 120mg 4) 240mg

12. படத்தில் காட்டப்பட்டவாறு அளவுச்சாடி ஒன்றில் நிரப்பப்பட்ட நீரில் கம்பியில் சுற்றப்பட்ட நிலையில் பனிக்கட்டி ஒன்று போடப் பட்டுள்ளது. பனிக்கட்டி முற்றாக உருகியதும் நீர்மட்டம் எவ்வாறு மாற்றமடையும்?
1) குறையும். 2) கூடும்.
3) மாறாது. 4) குறைந்து கூடும்.




13. பின்வரும் எவ் இரசாயன பதார்த்தம் வெப்பமாக்கும்போது வாயுவிளைவொன்றைத் தரக்கூடியது?
1) $Na_2CO_3$ 2) $CaCO_3$ 3) MgO 4) Nacl

14. தரப்பட்ட குறியீட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவது எது?
1) சீராக்கும் இருவாயி.
2) ஒளிப்புலக்கூர்மை இருவாயி.
3) புள்ளித்தொடுகை இருவாயி.
4) சேனர் இருவாயி.




15. அருகில் காட்டப்பட்ட உரு பிரதிநிதித்துவப்படுத்துவது எது?
1) வைரஸ்.
2) பக்ரீரியா.
3) பங்கஸ்.
4) புரட்டோசோவா.



16. மக்னீசியம் நைத்திறைட்டின் (Magnesium nitride) சூத்திரம் பின்வருவனவற்றில் எது?
1) $Mg(NO_3)_2$ 2) $MgNO_3$ 3) $Mg(NO_2)_2$ 4) $Mg_3N_2$

17. ஐதான அமிலமொன்றில் நாகக்கோல், செப்புக்கோல் ஆகியவற்றின் இயல்புகளைக் தொடுகையில் பரீட்சிப்பதற்கான அமைப்பைப் படம் காட்டுகிறது. மேற்படி விடயம் தொடர்பான சரியான கூற்றை தெரிவுசெய்க.
1) இலத்திரன்கள் நாகத்திலிருந்து செப்பை நோக்கிச் செல்லல்.
2) செப்பு அமிலத்துடன் தாக்கமடைதல்.
3) நாகம் ஆனது செப்பு பூச்சுக் கொண்டதாக மாறல்.
4) நாகம் செப்பை விட தாக்கம் குறைந்ததாகும்.





18. மனித விந்துகள் உருவாக்கப்படும் குறிப்பான இடம் பின்வருவனவற்றில் எது?
1) சுக்கிலச் சிறுகுழாய். 2) விதைமேற்றிணிவு.
3) அப்பாற் செலுத்தி. 4) ஆண்குறி.

19. பின்வருவனவற்றில் எது ஓர் அமில உப்புக்கு உதாரணமாகும்?
1) $NaHSO_4$ 2) NaCl 3) $K_2SO_4$ 4) KCl

20. ஒலியின் உரப்பை அளவிடும் அலகு பின்வருவனவற்றில் எது?
1) கேட்ஸ் 2) டெசிபல். 3) லம்டா. 4) டயோப்டர்.

21. 400g திணிவுடைய சீரான மீற்றர்கோலொன்று நிறை X இன் தாக்கத்தின் கீழ் சமநிலையில் இருக்கத்தக்கவாறு இழை ஒன்றின் உதவியுடன் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது. நிறை X இன் பெறுமானம் யாது? $g = 10ms^{-2}$
1) 1N 2) 6N.
3) 4N 4) 2N




22. ஆர்முடுகலை அளவிடக்கூடிய அலகு பின்வருவனவற்றில் எவை?
1) N/kg 2) $ms^{-1}$
3) a. 4) மேற்கூறிய எவையுமன்று.

23. பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எது?
கூற்று A - நன்னீரில் பயணம் செய்த கப்பலொன்று கடல்நீரினுள் பயணத்தைக் தொடங்கும்போது கடல்நீரால் கூடிய மேலுதைப்பு வழங்கப்படுவதன் காரணமாக நன்னீரை விட கடல்நீரில் கப்பல் அமிழும் ஆழம் குறைவடையுழ்.
கூற்று B - கப்பல் ஒன்று நன்னீரிலும் கடல்நீரிலும் பயணம் செய்யும் இரண்டு சந்தர்ப்பங்களிலும் கப்பலால் இடம்பெயர்க்கப்பட்ட நன்னீரினதும் கடல்நீரினதும் கனவளவுகள் சமனாக அமையும்.
கூற்று C - ஆகாயத்தில் மேல்நோக்கிச் செல்லும் ஐதரசன் பலூன் ஒன்றினால் இடம்பெயர்க்கப்பட்ட வளிமண்டல வளியின் நிறை பலூனின் நிறைக்கு சமனாக அமையும்.
கூற்று D - மாதிரி நீர்மானியொன்று மண்ணெண்ணெயிலும் நீரிலும் வேறுபட்ட ஆழங்களில் மிதப்பதற்கு காரணம் அவற்றால் வழங்கப்பட்ட மேலுதைப்புகள் வேறுபடுவதனால் ஆகும்.
சரியான கூற்றுக்களாக அமைபவை.
1) A,B,C,D . 2) A,B,D.
3) A,D. 4) யாவும் பிழையானவை.

24. நியம வெப்ப அமுக்க நிலையில் திறந்த தொகுதியொன்றில் 40g கல்சியம் 100g நீருடன் தாக்கமடைதலை பின்வரும் சமன்பாடு காட்டுகிறது. தாக்கமுடிவில் எஞ்சும் கரைசலின் திணிவு யாது?

$$Ca_{(s)} + 2H_2O(l) \rightarrow Ca(OH)_{2(aq)} + H_2\uparrow_{(g)}$$


1) 58g 2) 74g 3) 138g 4) 140g

25. ஆவர்த்தன அட்டவணையொன்றில் அதிகளவில் காணப்படக்கூடியவை எவை?
1) உலோகங்கள். 2) அலோகங்கள்.
3) வாயுக்கள். 4) உலோகப் போலிகள்.

26. சலரோக (நீரிழிவு) நோயாளி ஒருவருக்கு சரியாகத் தொழிற்படாத அங்கம்,
1) சிறுநீரகம். 2) சிறுநீர்ப்பை. 3) சதையி. 4) ஈரல்.


27. pH தாளை பயன்படுத்துவதால் அறியக்கூடியது,
1) அமிலத்தை இனங்காணுதல். 2) காரத்தை இனங்காணுதல்.
3) நடுநிலையான பதார்த்தத்தை இனங்காணுதல்.
4) மேற்கூறிய யாவற்றையும் இனங்காணுதல்.

28. இவ்வமைப்பில் நீர்த்துளி BA திசையில் நகர்கிறது. இவ் அவதானத்தின்படி பொருத்தமற்ற கூற்று,
1) துருபிடித்தலுக்கு வளியின் கூறு பயன்படுகிறது.
2) துருப்பிடித்தலுக்கு ஒட்சிசன் பயன்படுகிறது.
3) துருப்பிடித்தலின்போது குழாயில் வளியமுக்கம் குறைகிறது.
4) துருப்பிடித்தலின்போது குழாயில் உள் வாயுவின் கனவளவு குறைகின்றது.





29. பின்வரும் எந்நாளில் தாவரங்களின் ஆவியுயிர்ப்பு வீதம் குறைவாகக் காணப்படும்,
1) சூழல் வெப்பநிலை உயர்வாக உள்ள நாள்.
2) மழை மேகம் குவிந்துள்ள நாள்.
3) காற்று வேகமாக வீசும் நாள்.
4) சூரிய ஒளி கூடுதலான நாளில்

30.




குழிவாடி ஒன்றில் படத்தில் காட்டியவாறு படும் ஒளிக்கதிரானது தெறிப்படைந்த பின்னர் செல்லுமென எதிர்பார்க்கப்படும் பருமட்டான புள்ளி,
1) Z 2) Y 3) X 4) W

31. சுற்றில் அம்பியர்மானி வாசிப்பு 3A ஆகவும், வோல்ற்மானி வாசிப்பு 12V ஆகவும் காணப்படும் எனில், தடை X இன் பெறுமானம் யாது?
1) 4Ω
2) 2Ω
3) 8Ω
4) 1Ω




32. பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
1) குவிவாடியில் எப்போதும் உருச்சிறுத்த விம்பமே பெறப்படும்.
2) குவிவாடியில் தோன்றும் விம்பங்கள் எப்போதும் நேரானவை.
3) குவிவாடியில் எப்போதும் மாயவிம்பம் மட்டுமே பெறப்படும்.
4) குவிவுவில்லையில் உண்மையான விம்பங்களைப் பெறமுடியாது. ஆனால், குழிவுவில்லையில் உண்மையான விம்பங்களைப் பெறலாம்.

33. ஒட்சிசன் அயனின் இலத்திரன் எண்ணிக்கைக்கு சமனான இலத்திரன் எண்ணிக்கையைக் கொண்டிராதது எது?
1) கந்தகம் அயன். 2) மக்னீசியம் அயன்.
3) புளோரின் அயன். 4) சோடியம் அயன்.

மறுபக்கம் பார்க்க....

ஆசிரியர்:- P.ரகுமார், (0776059650)
யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

இன்றைய விஞ்ஞான பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்குவது
NSP®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும் உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் ... கூடிய தடிப்பம்
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
N0 5, Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் I – தொடர்ச்சி.....

34. கடத்தி ஒன்றின் தடையைத் தீர்மானிக்காத காரணி எது?
 1) அதன் நீளம்.
 2) கடத்தியினூடாகச் செல்லும் மின்னோட்டம்.
 3) அதன் குறுக்குவெட்டுப் பரப்பு.
 4) கடத்தி ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் தன்மை.


35. நிணநீர் பாயம் கடத்தப்பட உதவும் விசை எச்செயன்முறையால் வழங்கப்படுகிறது?
 1) உட்சுவாச, வெளிச்சுவாச செயன்முறை.
 2) இதயத்தின் பம்பும் விசை.
 3) நிணநீர் கான்களில் உள்ள முடிச்சுகளால்.
 4) நிணநீர் கான்களில் உள்ள நிணநீர் குழியங்களால்.

36. படைவீரர் ஒருவர் நிலைக்குத்தாக மேல்நோக்கி துப்பாக்கி சுடுகையின்போது (Firing) துப்பாக்கிச் சன்னத்தின் இயக்கம் எவ்வாறு அமையும்?
 1) ஆர்முடுகல். 2) அமர்முடுகல்.
 3) முதலில் ஆர்முடுகிப் பின்னர் அமர்முடுகும்.
 4) முதலில் அமர்முடுகிப் பின்னர் ஆர்முடுகும்.

37. அரியத்தினூடாக வெள்ளொளிக்கற்றை முறிவடையும்போது அதிகளவு விலகலை காட்டாத நிறஒளிக்கதிர் எது?
 1) ஊதா. 2) சிவப்பு. 3) நீலம். 4) பச்சை.


38. நீர் நீராவியாக மாறும்போது நீராவி கொண்டுள்ள சக்தி வகை யாது?
 1) அழுத்தச்சக்தி 2) இயக்கச்சக்தி.
 3) இரசாயனச்சக்தி. 4) மின்சக்தி.

39. அண்மையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின்போது நடைபெற்ற கயிறிழுத்தல் போட்டியில் ஒரு சந்தர்ப்பத்தில் ஆசிரியர் அணியும் மாணவ முதல்வர் அணியும் சமனான 100,000N விசையுடன் எதிர் எதிர் திசையில் இழுத்துக்கொள்வார்கள் எனின், நடுவில் கட்டப்பட்ட விற்றராசின் வாசிப்பு யாது?
(விற்றராசின் நிறையை கருத்தில் கொள்ள வேண்டாம்)




 1) 100,000N 2) 200,000N 3) 0N 4) 50,000N

40. காட்டப்பட்ட கதிர் வரிப்படத்திற்கு அமைய பெட்டியில் இருக்கக்கூடிய உபகரணம்,
 1) குவிவாடி. 2) குழிவாடி.
 3) செங்கோண அரியம். 4) சூழ்காட்டி




# விஞ்ஞானம் – II

**34-T-II**

## பகுதி A - அமைப்புக் கட்டுரை வினாக்கள்


01. A.




உப்பு தயாரிப்பின் சில படிகள் காட்டப்பட்டுள்ளன.
 1) பாத்தி A எவ்வாறு அழைக்கப்படும்?
 ..................................................
 2) Aஇல் வீழ்படிவாகும் பதார்த்தங்கள் எவை?
 a .............................. b ..............................
 3) Cஇல் இருந்து வெளியேற்றப்படும் திரவம் எவ்வாறு அழைக்கப்படும்?
 ..................................................
 4) நீர் மேலே குறிப்பிட்ட திரவத்தில் காணப்படும் இரசாயனப் பதார்த்தம் ஒன்று தருக.
 ..................................................
 5) சீமெந்து உற்பத்திக்கு அவசியமானதும் Bஇல் படிவடைவதுமான பதார்த்தத்தின் பெயர் யாது? ..............................
 6) கடல்நீரின் அடர்த்தியை அளக்க பயன்படும் விசேட உபகரணம் எவ்வாறு அழைக்கப்படும்?
 ..................................................


B. 1) வாயுக்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
 ..................................................
 2) சாள்ஸின் விதியைத் தருக. ..............................
 3) மாறா அமுக்கத்தில் 300kஇல் ஒரு வாயு மாதிரியின் கனவளவு 600cm$^3$ ஆகும். இதன் வெப்பநிலை 400k ஆகும்போது (மாறா அமுக்கத்தில்) அதன் கனவளவு யாது? ..............................

02. A. மாணவன் ஒருவனால் பயன்படுத்தப்பட்ட மின்சுற்று ஒன்றைப் படம் 2.1 காட்டுகிறது.



2.1


 1) ஆழி மூடியதும் மின்குமிழ் ஒளிர்கிறது. எவ்வாறு மாறும் தடையீயானது சுற்றில் பாயும் மின்னோட்டத்தின் அளவில் செல்வாக்குச் செலுத்துமென விளக்குக.
 ..................................................
 2) மேற்படி சுற்றுடன் மாணவன் இன்னோர் துணைக்கூறு "A" ஐ இணைத்தான். படம் 2.2 தற்போது ஆழி மூடப்பட்டதும் மின்குமிழ் சற்று தாமதமாக ஒளிர்ந்தது.




2.2

 a. A ஐப் பெயரிடுக. ..............................
 b. மின்குமிழ் தாமதமாக ஒளிர்ந்ததற்குரிய காரணத்தை விளக்குக.
 ..................................................
 c. ஆழி திறக்கப்பட்ட பின்னரும் மின்குமிழ் சிறிது நேரம் ஒளிர்ந்த பின்னரே அணைந்தது. இதற்கான காரணத்தை விளக்குக.
 ..................................................


B.




2.3

நிலைமின்னியல் தொடர்பான சோதன ௨ மைப்பொன்றை படம் 2.3 காட்டுகிறது. துணியினால் உரோஞ்சப்பட்ட பேர்ஸ்பெக்ஸின் மேற்பரப்பில் நேரேற்றங்கள் தோன்றுகின்றன. சிறிய கடதாசித்துண்டுகள் பேர்ஸ்பெக்ஸை நோக்கி கவரப்பட்டு அதில் ஒட்டிக்கொள்கிறது.
 1) இலத்திரன் அசைவுக் கொள்கையின்படி உரோஞ்சலின் மூலம் எவ்வாறு பேர்ஸ்பெக்ஸ் நேரேற்றத்தைப் பெற்றதென விளக்குக.
 ..................................................
 2) மின்னேற்றங்களை அளவிடும் அலகு யாது?
 ..................................................
 3) பேர்ஸ்பெக்சில் உள்ள ஏற்றங்கள் காரணமாக சிறிய கடதாசித்துண்டுகளிலும் ஏற்றங்கள் தூண்டப்படுகிறன. அவ்வாறு தூண்டப்பட்ட ஏற்றத்தை படத்தில் கடதாசித்துண்டு Aஇல் வரைந்து எழுதிக்காட்டுக.
 ..................................................
 4) ஏன் கடதாசித்துண்டுகள் மேல்நோக்கி அசைந்தன என்பதை விளக்குக.
 ..................................................
 5) மின்னேற்றங்களை அறிய பயன்படும் உபகரணம் எவ்வாறு அழைக்கப்படும்? ..............................


03. A. நீட்டப்பட்ட சுருளி வில்லினூடாக (சிலிங்கி) கடத்தப்படும் அலைகளை படம் 3.1 காட்டுகிறது.




3.1

 1) நெருக்கங்கள் காணப்படும் இடங்களைப் படத்தில் குறித்துக்காட்டவும்.
 2) நெருக்கம் என்றால் என்ன?
 ..................................................
 3) ஒலி அலைகளும் நெருக்கம் ஐதாக்கம் மூலமே வளியில் கடத்தப்படுகின்றன. இது தவிர்ந்த மேற்படி சிலிங்கியில் உருவாக்கப்படும் அலைகளுக்கும் ஒலி அலைகளுக்குமிடையிலான ஒற்றுமை ஒன்று தருக.
 ..................................................
 4) முழு அளவிடைக்கமைய சிலிங்கியின் அமைப்பு 3.1 வரையப்பட்டுள்ளது எனக்கொண்டு சிலிங்கியில் உருவாக்கப்பட்ட அலையின் அலை நீளத்தை அளந்து தருக.
 ..................................................
 5) அலை ஒன்றின் மீடிறன் என்றால் என்ன? மேற்படி சிலிங்கியில் உருவாக்கப்பட்ட அலையின் வேகம் 75cm/s எனில், அதன் மீடிறனைக் காண்க.
 ..................................................

B. 1)





படம் 4.1 இல் வைக்கப்பட்ட பொருள் ABஇன் விம்பம் உருவத்தைக் காட்ட தெளிவான கதிர்ப்படம் வரைக.
 2) வெள்ளொளி அரியத்தினூடாக பயணிக்கும்போது நிறப்பிரிகையடைந்து திருசியம் உருவாக்கப்படுகிறது. நிறப்பிரிகை என்றால் என்ன?
 ..................................................
 3)




காட்டப்பட்ட ஒளிக்கதிரானது அரியத்தினூடாக பயணம் செய்து பக்கம் B இனூடாக வெளியேறும் வரை செல்லும் பாதையை வரைக.

04. எமது உடலில் காணப்படும் தொகுதி ஒன்றின் பகுதியைப் படம் காட்டுகிறது.




 1) A, B, C, Dஐ பெயரிடுக.
 A .............................. B ..............................
 C .............................. D ..............................
 2) a. ஒருவர் காலை உணவாக பாணையும் இறைச்சிக்கறியையும் உட்கொள்கிறார். 5 மணி நேரத்தின் பின் மேற்படி உணவுக்கூறுகள் பகுதி C இல் எவ் இறுதி விளைவுகளாகக் காணப்படும்?
 ..................................................

வளரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்
# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாள்களில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 30.11.2009 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பதவி: களஞ்சியப் பொறுப்பாளர் (நிரந்தரம்)**

பதவி இல: 165/88 இன் படி சம்பள குறி இல: 202/13
சம்பளத் திட்டம்: 66/06 இன் படி 9950-85X10-90X10-11700

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 14ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறையில் பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 15ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (சாதாரணம்) சான்றிதழ் க.பொ.த. (சாதாரணம்) கணிதம்/ வர்த்தக எண்கணிதம் / எண்கணிதம் மற்றும் சிங்களமொழி/ தமிழ்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**பொது நிபந்தனைகள்**

01. வயது 30.11.2009 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாயும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
02. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
04. ஆள்சேர்ப்பு செய்யப்படுபவர்கள் இரண்டு வருட கால தகுதிகாண் அடிப்படையில் பதவியில் அமர்த்தப்படுவர்.
05. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
06. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்... உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்க... விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனம் இல்லாதொழிக்கப்படும்.
07. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாக பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதனை தாங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

20.11.2009 (சி/562448) பொது முகாமையாளர்.

### சாவகச்சேரியில் ஹற்றன் நஷனல் வங்கிக்கிளை நாளை திறப்பு

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மேலும் ஒரு வங்கிச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கியின் கிளை நாளை சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு வங்கி சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் ராஜேந்திரா தியாகராசாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வங்கியின் உயர் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (1-207)

### தென்மராட்சியில் அதிபர்களுக்கு பட்டறை

யாழ்ப்பாணம், நவ.20

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்தியாவசிய தகவல் சேகரித்தல், மாணவர்களுக்கு அடையாள அட்டை இலக்கம் வழங்கல் ஆகியன பற்றிய பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளன.

இன்று வகை Iஏபி, வகை Iசி, வகை II பாடசாலைகளுக்கும், 21 ஆம் திகதி வகை III பாடசாலைகளுக்கும் நடத்தப்படவுள்ளன. பாடசாலையிலிருந்து அதிபரும் ஒரு ஆசிரியரும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

### மிருசுவில் முகாம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.20

மிருசுவில் நலன்புரி நிலையம் நேற்றுமுன்திம் புதன்கிழமை மூடப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இங்கு தங்கியிருந்த வடமராட்சி கிழக்கு மருதங்கேணியைச் சேர்ந்த 136 குடும்பங்களைச் சேர்ந்த 434 பேரும் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை தென்மராட்சி நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 75 குடும்பங்களை சேர்ந்த 248 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வவுனியாவைச் சேர்ந்த 10 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேரும், புத்தளத்தைச் சேர்ந்த எட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும், மட்டக்களப்பைச் சேர்ந்த 20 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேரும், திருகோணமலையைச் சேர்ந்த 37 குடும்பங்களை சேர்ந்த 106 பேரும் நலன் புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (1-207)

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 20 |
| ★ | ★ |
| 08 | 11 |
| ★ | ★ |
| 1948 | 2009 |

### அமரர் காசிலிங்கம் இந்திரதேவன்
(அன்பு பேபி)

"ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம் துயரம்!
பல்லாண்டு வாழ்வாய்
பாரினிலே என்றிருந்தோம்!
பாதியிலே உன் வாழ்வு அஸ்தமனமானதே!"

''கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்''
.....................(பிலிப்பியர்: 2:21)

''அன்னாரின் இல்லத்தில் இன்று (20.11.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு ஆராதனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும்.''

உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மாமி, மைத்துனர்மார், மைத்துனிமார், சகலன்மார், சகோதரர்கள், பெறாமக்கள்.

கோவிலாக்கண்டி,
கைதடி. (91180)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## பேதுரு பிலிப்பல்

(சமாதான நீதிவான்,மட்டுவில் ஆரோக்கிய வாச வைத்தியசாலை உரிமையாளர்)

பிறப்பு 23.05.1929

இறப்பு 20.11.2006



◎ வைத்தியமணி ◎ வைத்திய வாருதி
◎ வைத்தியரத்தினம் ◎ வைத்திய கலாநிதி
◎ சகஸ்றாபிஷேக வைத்திய சிகாமணி

அரும்புகளாய் நாமிருக்க ஆரோக்கியமனை அமைத்து
இருக்கையில் அமர்ந்திராது உருவாக்கி வைத்தவரே
பெருமையுறு கல்விதனை பொக்கிசமாய் கற்க வைத்து
பாரெங்கும் கால்பதிக்க பார்த்திருந்த ஐயாவே!
குருவுமாய் செய்தபணி கரும்பாக வாழ்வினிக்க
கணமறிந்த கைவிளக்கே கோபுரத்து ஒளியுமானாய்
ஒருபிடி ஔடதமாய் உள்ளவரை விருந்தாவாய்
ஊருக்காய் இறைத்த நீர் எமை உயர வைக்குதையா!

உயிருள்ளவரை உமை மறவோம்
உம் பணி தொடர்வோம்.

பிரசாத் வீதி,
நவாலி,
மானிப்பாய்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாட சாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின் றோம். தொடர்ந்து படியுங்கள்.



### வேலும்மயிலும் வினோத்
### கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
### புள்ளிகள் -155

நான் யா/மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தரம் - 1 தொடக்கம் கல்விபயின்று வருகின்றேன். சித்தியடைவதற்கு எனக்குக் கற்பித்த செல்வி ஆனந்தநாயகி கந்தசாமி, சுமதி மகேஸ்வரன் ஆகியோரின் அயராத முயற்சியே காரணமாகும்.

இத்துடன் எனது பாடசாலை அதிபர் இ.இராகவன் ஏனைய ஆசிரியர்களும் நான் சித்தியடைவதற்கு உறுதுணையாக இருந்தார்கள்.

இவர்களுடன் எனது அம்மாவின் ஆக்கமும் ஊக்கமுமே எனக்குப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

எல்லோரினதும் ஆசையை நிறைவேற்றியதை எண்ணி நான் சந்தோசப்படுகிறேன். மேலும் இவ்வாறு திறமையாகக் கல்வி பயின்று பொறியியலாளராக வரவேண்டும் என்பது எனது இலட்சியம்.



### பரமநாதன் பகலவன்
### உடுவில் மகளிர் கல்லூரி
### புள்ளிகள் -157

காலையும், மாலையும் நான் கல்லூரியிலும் மற்றும் தனியார் கல்வி நிலையத்திலும் கற்பிப்பதை மீளப் பயிற்சி செய்து பார்ப்பேன். இதேபோன்று ஏனைய மாணவர்கள் கொண்டு வரும் விடயங்களையும் கூடப் படிப்பேன்.

எமது கல்லூரி ஆசிரியை யுதர்சன் ஸ்ரெலா வகுப்பில் நாளாந்தம் பயிற்சி வகுப்புக்களை நடத்துவதுடன் மாதிரி வினாத்தாள்களையும் பரீட்சைகளையும் நடத்துவார்.

எனக்கு இந்த மாதிரிப் பரீட்சைகளுடன் யாழ். குடாநாட்டுப் பத்திரிகைகளில் வெளியாகும் பயிற்சி வினாத்தாள்களையும் எடுத்துத் தவறாது பயிற்சி செய்வேன்.

கூடியவரைக்கும் எனக்குக் கிடைக்கும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்களையும் வைத்து பயிற்சி செய்வதுடன் விளங்காத விடயங்களை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடமும் கேட்டுத் தெரிந்து கொள்வேன்.

எனது இந்தப் புள்ளிக்குக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுடன் பெற்றோர்களின் முழுமையான ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் காரணமாகும்.



### தயாளன் ஈழநிலா
### யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
### புள்ளி - 155

புலமைப்பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சைகள் அனைத்திலும் சிறப்பாகச் செயற்பட்டு வந்தேன்.

எனினும் இந்தப் பரீட்சையில் எதிர்பார்த்த புள்ளி எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இப்புள்ளி பெற்றதைக் கொண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது குடும்பம் அப்பா, அம்மா, சகோதரர்கள் வன்னியில் இருந்து தற்போதுதான் இங்கு வந்துள்ளனர்.

நான் எனது நோய்வாய்ப்பட்ட அப்பப்பா, அப்பம்மாவுடன் கடந்த மூன்று ஆண்டு களாக எனது தாய், தந்தையைப் பிரிந்து இங்கிருந்து படித்து வந்தேன்

வன்னியில் கடும் யுத்தம் நடைபெற்றபோது நான் அவர்களது நினைவுடன் படித்து வந்தேன். எனது அப்பப்பா, அப்பம்மாவின் அன்பான அரவணைப்பில் எனது அதிபரின் வழிகாட்டலும் அறிவுரைகளும் என்னை வழிப்படுத்தின. அத்தோடு தரம் 4, 5 வகுப்புகளில் இருந்து அர்ப்பணிப்போடு அன்போடு வழிநடத்திய ஆசிரியர்களும் எனது நன்றிக்குரியவர்கள்.

இதைவிட எனது உறவினராகிய மாலதி, கோமதி ஆகிய இரு ஆசிரியர்கள் என்னை தனியார் கல்வி நிலையத்திற்கு விடாது எனது நிலை உணர்ந்து எனக்குக் கற்பித்தார்கள். அவர்களுக்கும் நான் நன்றியுடையவள் ஆவேன்.

மேலும் நான் எதிர்காலத்தில் ஒரு டாக்டராக வந்து எனது தாய்நாட்டுக்கு சேவை செய்வேன்.



### யோகலிங்கம் ரகிஷன்
### யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்
### புள்ளிகள் - 159

எனது வெற்றிக்கு இறைவனின் ஆசியும் அதிபரின் வழி காட்டலும் வகுப்பாசிரியர் திருமதி சுமதி மகேஸ்வரனின் ஊக் கமும் உறுதுணை யாக அமைந்தன.

சந்திப்பு : வல்லமகனார், நேசன்

எனது ஆசிரியர் பாடசாலை நாள்க ளில் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் சனி, ஞாயிறு விடுமுறை தினங் களிலும் மேலதிக வகுப்புக்களை நடத்துவார்.

நான் தினமும் காலையில் ஒருமணி நேரமும் மாலையில் ஒருமணி நேரமும் எனது பாடங்களை விருப்பத்துடன் கற்பேன்.

எனது பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். எனக்கு இரண்டு சகோதரர்களும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். எனவே வீட்டிலும் சகலரும் கற்றலுக்கு உதவுவார்கள்.

இவர்களுடன் தரம் ஒன்று தொடக்கம் இன்றுவரை கற்பித்த சகல ஆசிரியர்கள் எனது மாமா, சித்திமார், அம்மம்மா, அப்பப்பா, இராணி ஆசிரியை சகலரும் என்றும் என் நன்றிக்கு உரியவர்கள்.



### அன்ரன் சிறேசியன் டெஸ்மன்
### உடுவில் மகளிர் கல்லூரி
### புள்ளி - 156

ஆசிரியர்களும், பெற்றோரும் எனது கல்விக்கு மிகவும் ஆதரவாக இருந்தார்கள்.

நாளாந்தம் நான் கற்பதை மீளப்படிக்கின்றேனா பயிற்சிகளை உரிய முறையில் செய்கின்றேனா என்பதை ஒவ்வொரு நாளும் எனது பெற்றோர் பார்வையிடுவார்கள்.

கல்லூரியில் நாளாந்தம் வகுப்பு முடிவடைந்த பின்னர் விசேட வகுப்புகளை ஆசிரியர் பா.பிறேமரஞ்சித் எடுப்பார். வகுப்பில் செய்யப்படும் பயிற்சிகள் செய்யப்படுகின்றதா என்பதைப் பார்வையிடுவதுடன் வீட்டு வேலைகளாக தரப்படும் பயிற்சிக் கொப்பிகளையும் நாளாந்தம் பார்வையிடுவார்.

• தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்ற போதிலும் கூட அங்கும் தரப்படும் பயிற்சிகளை சீராகச் செய்து ஆசிரியர்களிடம் காட்டுவேன்.

பெற்றோர்களின் உதவியுடன் காலையும், மாலையும் நாளாந்தம் வீட்டு வேலை களைச் செய்வேன்.

இதனைவிட பத்திரிகைகளில் வரும் வினாத்தாள்கள் மற்றும் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் வெளியிடும் மாதிரி வினாத்தாள்களையும் பெற்று பயிற்சி செய்வேன்.

## மனிதனுக்கு அற ஒழுக்கம் மிக அவசியம்

ஞானக்கதிர்

இன்றைய காலகட்டத்திலே பல்வேறு விதமான போராட்டங்களிலும் மனிதன் சிக்கித் தவிக்கின்றான். வறுமையுடன் போராட்டம், பட்டினியுடன் போராட்டம், நோயுடன் போராட்டம், வேலையில்லாத் திண்டாட்டம் எனத் தினந்தோறும் அவதிப்பட்டு துன்பத்தினால் துவண்டு சோர்வடையும் மனுக்குலத்திற்கு முதலாவது தேவை தெய்வ நம்பிக்கையாகும்.

தெய்வத்தை நம்புபவன் தன்னை நம்புவான். 'தன்னிடம் நம்பிக்கையற்றவனே நாஸ்திகனாவான்' என்றார் சுவாமி விவேகானந்தர். 'சமயம் இல்லாத விஞ்ஞானம் முட வனுக்குச் சமமானது. விஞ்ஞானம் இல்லாத சமயம் குருடனுக்குச் சமமானது என்றார் விஞ்ஞான மேதை ஆபர்ட் ஐன்ஸ்ரீன்.

எனவே மனிதன் அறிவியல் பூர்வமாக வாழ்வைச் செப்பனிடும் அதேவேளை அற ஒழுக்கவியல் முறைமைகளையும் உள்ள வாறு விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

நமது உள்ளத்தில் சூழ்ந்திருக்கும் அவா, வெகுளி, இன்னாச்சொல், மதம், காமம், குரோதம் என்னும் இருட்டினை நீக்கிவிட்டால், அன்பு, சத்தியம், சாந்தி, பிரேமை, அகிம்சை, அறிவு என்கின்ற ஒளி தானாகப் பிரகாசிக்கும் என்றார் சாயிபகவான்.

மனிதனை மனிதனாக்காத மதம் மனிதனை மனிதனாக்காத கல்வி மனிதனுக்குத் தேவையற்றவை என்பது சுவாமி விவேகானந்தரின் அறிவுரை. எனவே 'அன்பு' என்னும் ஒளி விளக்கினை அகத்திலே ஏற்றிவைத்து அந்த ஞானஒளியிலே வாழ்க்கைப் பாதையைச் செலுத்தக் கற்றுக் கொண்டால்-அதுவே அமைதியான ஆன்மீகப் பயணமாக அமையும். இவை உண்மைச் சமயியின் இலட்சிய வாழ்வாக மலரும். 'அன்பே சிவம்' என்னும் திருமந்திரத்தின் உபாயமும் இதுவேயாகும்.



யாழ்.மத்திய கல்லூரியின் விஞ்ஞான தினத்தையொட்டி அண்மையில் விஞ்ஞான மன்றத்தின் மாணவர்களால் கல்லூரியில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில் மாணவர்கள் சிரமதானப் பணி மேற்கொள்கிறார்கள், மாணவர்களுடன் அதிபர் இ.ஓங்காரமூர்த்தி படத்தில் காணப்படுகின்றனர்.

## மாதாந்த உதவிப்பணம் பெறுவோரின் அட்டைகள் இன்று முதல் மீளாய்வு

நவாலி, நவ. 20

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரி வில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரது அட்டைகள் இன்று வெள்ளி முதல் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

பின்வரும் தினங்களில் மீளாய்வு நடை பெறவுள்ளது.

இன்று-ஜே.13 (சாவற்கட்டு), 24ஆம் திகதி-ஜே.132 (உயரப்புலம்), 26ஆம் திகதி-ஜே.133 (ஆனைக்கோட்டை), 27ஆம் திகதி-ஜே.134 (நவாலி வடக்கு).

சம்பந்தப்பட்டவர்களைக் காலை 9 மணிக்கு குடும்ப அட்டை, குடும்பப் படம், பணம்பெறும் அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் தத்தமது கிராம சேவையாளர் அலுவலகங்களுக்குச் சமு கந்தருமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார்.

ஏனைய பிரிவுகள் அடுத்தமாதம் அறிவிக் கப்படுமென்றுதெரிவிக்கப்படுகின்றது. (50)

## மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நவாலி, நவ. 20

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் தற்போது நாளுக்கு நாள் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

வன்னியிலிருந்து வந்த மக்களும் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ளதால் தினமும் 200 பேர் வரை சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

இவர்களில் அநேகமானோர் காய்ச்சல், இருமல், முட்டு போன்ற வருத்தங்களினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுச் செல்வதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி ஏகாம்பரமூர்த்தி புஸ்பராணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை பல லட்சம் ரூபா செலவில் இங்கு கட்டப்பட்டுவரும் மகப்பேற்று மனையின் வேலைகள் பூர்த்தியடைந்து வருவதால் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் திறந்துவைக்கப்படலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (50-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைதல், காலநிலை மாற்றம் என்பவற்றின் விளைவுகளை விளக்கிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சூழல் மாசடைகின்றது; காலநிலை மாறுகிறது. அதனால் பாரிய எதிர்மறை விளைவுகளை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது உலகெங்கும் பேசப்படும் முக்கிய விடயமாகிவிட்டது. காலமாற்றம் ஏற்படும் போது மழைவீழ்ச்சியில் மாற்றங்கள் ஏற்படும். வரட்சி, வெள்ளம், புயல் போன்றவற்றால் மட்டுமன்றி விவசாயப் பாதிப்பு, நீரில் வெப்பவிரிகை போன்ற பல தரப்பட்ட சம்பவங்களால் மனிதகுலம் உட்பட பல தரப்பட்ட உயிரினங்களும் அழியும் அபாயம் உண்டு என அச்சம் தெரிவிக்கும் விஞ்ஞானிகள் சூழல் மாசடையாதவாறு மனிதர்களின் நடவடிக்கைகளில் மாறுதல் ஏற்பட வேண்டும் என்று கருதுகின்றனர். இதனை வெளிப்படுத்தும் வகையில் காலநிலை மாற்றம் இன்றைய உலகிற்கு ஒரு சவாலாக இருப்பது குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த 12 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. மக்கள் இது பற்றிய விழிப்புணர்வு உள்ளவர்களாக வேண்டும் என்பதே கருத்தரங்கின் குறிக்கோளாக இருந்தது.

இந்த நிகழ்வில் பேசிய யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஒரு விடயத்தை மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். ''பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் அளிக்கும் பேட்டிகளைப் பத்திரிகையில் வாசிக்கின்றேன். எல்லோருமே வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும் வரவேண்டும் என்பதே தமது எதிர்காலக் கனவு என்கிறார்கள். ஒருவராவது சிறந்த ஒரு விஞ்ஞானியர்க வேண்டும் என விரும்புகிறார்கள் இல்லை'' தாங்கள் சிறந்த விஞ்ஞானிகளாக வர வேண்டும் என்ற இலட்சியம் மாணவர்களிடம் ஏற்பட வேண்டும். நான் படித்த காலத்தில் வானொலியில் விவசாயம் குறித்த அறிவுரைகளைக் கேட்க முடிந்தது. இப்போது அதனைக் காணவில்லை. காலநிலை மாற்றங்கள் சூழல் மாசடைவதால் ஏற்படக்கூடிய விபரீதங்களுக்கு முற்றுப் புள்ளியிடவும் மனிதர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்ற செய்தியை இந்தக் கருத்தரங்கு மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்வுக்கு தலைமை வகித்த பேராசிரியர் என்.சிவநாதன் ''1860இல் ஏற்பட்ட கைத்தொழில்புரட்சி கடல், தரைப் போக்குவரத்தை இயந்திரமயப்படுத்தியது. இதைத் தொடர்ந்து இடம்பெற்ற கண்டுபிடிப்புக்கள் மனித மேம்பாட்டுக் கானது என பரிசுகளும் வழங்கப்பட்டது. நூறு வருடங்களுக்கு முன் விமானத்தைப் பறக்க வைத்த ரைட் சகோதரர்களுக்கு நன்றி கூறிய நாம் இன்று விமானக் கழிவுகளால் சூழல் மாசடைவதாகக் கூறுகிறோம். மனித நோக்குடனான கண்டுபிடிப்புகள் தூர நோக்குடன் சிந்தித்து அதற்கமைவாக இடம்பெற வேண்டும். இங்கே கிடைக்கக் கூடிய நீரைப் பாதுகாக்க முடியாமல் சந்திரனில் நீரைத் தேடிக்கொண்டிருக்கிறோம் - என்றார்.

**- லக்ஸ்மன் -**

உணவு, நிதி போன்ற விடயங்கள் கூட காலமாற்றத்துடன் தொடர்புடையது. ரஷ்யா பெரியநாடு எனினும் பொருளாதாரத்தில் கஷ்டம். அங்கேயுள்ள பனிப்பாறைகள் உருகும் பட்சத்தில் அந்தநாடு வளர்ச்சியடையலாம். ஆனால் தென்துருவத்தில் பல நாடுகளை மக்கள் இழக்க வேண்டியேற்படும். உலகளாவிய ரீதியில் இதனால் எல்லோருமே பாதிக்கப்படுகின்றார்கள். டைனோசர் உட்பட பல்வேறு உயிரினங்கள் இன்று இல்லை. மனிதகுலம் கூட அழிந்துவிடலாம். நாங்கள் மாறிவிடுவதால் காலநிலை மாறிவிடும் என்று கூற முடியாதென்ற கருத்தும் உண்டு. மனித மேம்பாட்டுக்காக எல்லோருமே ஒன்றிணையக் கூடியதாகச் சிந்திக்க வேண்டும். கைத்தொழில்புரட்சி சரியான ஒழுங்கு முறையில் இடம்பெறவில்லை என்று நினைக்கிறேன். காலமாற்றம் குறித்த உண்மைகளை உணர்த்தும் ஓர் எச்சரிக்கையே இந்தவிழா.

ஆபிரிக்க நாடுகளில் எலும்பும் தோலுமாக மனிதர்களைக் காணமுடியும். ஆனாலும் அந்த மக்கள் பீடை நாசினிகளை உள்வாங்கவில்லை. சூழல் மாசடையக்கூடாது என்பதிலும் பீடைநாசினிகளை உள்வாங்கினால் தமது இனம் அழிந்துவிடும் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். அரசியல் கொள்கைகள் தமது மக்களின் அழிவுகளுக்காக இருக்கக் கூடாது என்பதில் அக்கறை காண்பிக்கிறார்கள் என விரிவுரையாளர் மிகுந்தன் தனது உரையில் கூறினார்.

இயற்கையுடன் நாங்கள் வாழவிரும்பவில்லை. முயற்சிக்கவில்லை. அதனால் இயற்கையே இப்போது எங்களுக்குச் சவால்விடுகிறது. இது சிறியநாடு. நாங்களே எங்களை அழித்துக் கொண்டோம். இயற்கைச் சூழலைப்பாதுகாக்கத் தவறிவிட்டோம். எதிர்காலச் சந்ததிக்காக மட்டுமல்ல நாங்களும் வாழை மரங்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது. 'நிஷா' வெள்ள அனர்த்தத்தைச் சாட்டாக வைத்து விழுந்த மரங்களுடன் நிமிர்ந்து நின்ற மரங்களையும் வெட்டிச் சாய்த்து விட்டோம். யாழ்ப்பாண மக்கள் கல்வியில் சிந்தவர்கள். இருந்தாலும் அந்தக் கல்வியால் கிடைக்கக்கூடிய அறிவைப் பயன்படுத்துகிறார்களா என்ற சந்தேகம் தென்படுகின்றது. காசு சேமிப்பதில் தான் குறியாக இருக்கிறார்கள். எஞ்சிய மரங்களையும் தறித்து காசாக்க மீண்டும் ஒரு நிஷா வராதா என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் ஒரு மரத்தையாவது நட்டுவைத்தார்களா? என்றும் அவர் தெரிவித்தார்.

வரவேற்புரை, நன்றியுரைகளைக் கூறி வந்த கருத்தரங்கின் அமைப்பாளர்களும் காலநிலை மாறுதல்களால் மனிதஇனம் எதிர்கொள்ளப்போகும் சவால்களை ஆபத்துக்களை எடுத்துக்கூறி கூடியிருந்தவர்கள் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வந்ததை வரவேற்று நன்றியைத் தெரிவித்தனர்.

மானிப்பாய் கலைக்கோயில் மாணவிகளின் ''காட்டிலுள்ள மரத்தையெல்லாம் கண்டபடி வெட்டாதீர் பசுமைப்புரட்சி செய்வோம்'' என்ற பாடலுடன் கூடிய ஆடல் அபிநயங்கள் கருத்தாளம் மிக்கதாகவும் மாணவர்களின் காலநிலை மாற்றம் குறித்த பட்டிமன்றமும் சிறப்பாக ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது. சூழல் மாசடைதல் குறித்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் விருந்தினர்கள் வழங்கினார்கள்.

யாழ்ப்பாணத்தில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி அதன் மூலம் பல இடர்களைத் தவிர்க்கக்கூடியதான ஆய்வுகள் தேவை எனவும் -பாதை திறந்தபின் தென்பகுதியில் இருந்து எடுத்துவரப்படும் இரசாயன உரங்கள் ஏனைய பொருள்களை இங்குள்ள மக்கள் விழுந்தடித்து வாங்குவதாகவும் அவற்றில் கிடைக்கக்கூடிய பாதிப்புக்கள் குறித்து சிந்திப்பதில்லை எனவும் - போர்கூட நன்மை அளித்துள்ளது. அது நடைபெற்ற காலங்களில் விவசாயிகள் இரசாயன உரங்களைப் பயன்படுத்த வாய்ப்புகள் குறைவாக இருந்ததால் மக்கள் ஓரளவு தம்மைப் பாதுகாக்க முடிந்தது போன்ற கருத்துக்களையும் அரங்கில் கேட்கக்கூடியதாக இருந்தது.

கூடியிருந்த மாணவர்கள் காலநிலை மாற்றம் அதனால் மக்கள் எதிர்கொள்ளப் போகும் பாரிய நெருக்கடிகள் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் எப்படி ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதில்தான் கருத்தரங்கின் முக்கியத்துவம் புலப்படும்.

## கோப்பாய் தரவைப் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.20

கோப்பாய் தரவைப் பகுதியில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்பு மீண்டும் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

குறிப்பாகக் கடந்த ஐந்து ஆண்டுகளின் பின்பு இவ்வருடமே விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

தற்போது காலபோக நெற்செய்கை மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றின் ஆரம்ப கட்ட வளர்ச்சிகள் சிறப்பாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மேய்ச்சலுக்காகக் கால்நடைகள் தரவைப்பகுதியில் விடப்படுவதால் பயிரழிவுகள் ஏற்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடய கால்நடை உரிமையாளர்கள் கால்நடைகளைக் கட்டி மேய்ச்சலுக்கு விடுமாறு கோப்பாய் மத்தி விவசாய சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (50-72)


## கண்ணீர் அஞ்சலி

கருணாலயம் சிறுவர் இல்லம், திருநெல்வேலி



எமது நிறுவன பணியாளர்
ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த

**நடராசா ஜெயசீலன்**

அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

இல்ல பிள்ளைகள்,
பணியாளர்கள்,
நிறுவுநர்.

கருணாலயம் சிறுவர் இல்லம்,
திருநெல்வேலி. (91212)



## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 30.10.1923

மறைவு: 11.12.1999



அமரர்

**நாகேசு தம்பிமுத்து**

(நண்பர்)

(ஸ்தாபகர்-டவர் கோப்பி அன் கூல்பார்)

திதி: கார்த்திகை சதுர்த்தி

உருவாக்கி உயர்வாக்கி எம்முள்ளம்
உலாவி உறவாடி ஒத் உணர வைத்தீர்
கார்த்திகை சதுர்த்தியில் தீபமேற்றி உம்
திருவுருவைக் காண்பதற்கு காத்திருக்கின்றோம்

இல.15, யாழ்பாடி வீதி,
யாழ்ப்பாணம். (சி-562495) குடும்பத்தினர்



### மணமகள் தேவை

M.Sc.முடித்து Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian P.R. உள்ள சைவசமயம் 29 வயது, ஏழுச் செவ்வாய், பூச நட்சத்திரம், பலம் 30 உடைய மணமகனுக்கு, வைத்தியத் துறையில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக் கொண்ட மணமகள் தேவை.

(90672) தொடர்பு : 0713163508



### துர்க்கா திருமண சேவை

எங்களிடம் வெளிநாடு, உள்நாட்டு அரச தொழில் புரியும் சகல மதத்தவர்களுக்குமுரிய மணமக்கள் உண்டு. பதிவுக்கட்டணம் எதுவுமில்லை. புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

துர்க்கா திருமண சேவை
9, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

T.P - 0214591417
0213211814



### காணி விற்பனைக்கு

வடலியடைப்பு, அரசடி வாசகர் சாலைக்கு அருகில் சித்தன்கேணி, பண்டத்தரிப்பு பிரதான வீதி யில் கிணற்றுடன் 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776404330 (பவானி)

(91210)



### Visa ! Visa ! Visa !

எந்த நாட்டிற்கும் எவ்வகையான விசாவிற்கும் உரிய ஆலோசனைகள்

Ravikumar r- 0776953726

(RegisteredTravel Consultent)


## வலி.கிழக்கில் மீளக்குடியமர்ந்த் குடும்பங்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

கோப்பாய், நவ.20

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 2 ஆயிரத்து 256 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 509 பேர் நலன்புரி முகாம்களிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்துள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களை மேற்கொள்வதற்கான திட்டங்கள் வகுக்கப்படுவதாகவும், இதனடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் இவர்களுக்கு அரச,அரச சார்பற்ற அமைப்புக்களினூடாக உதவிகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மீளக்குடியமர்ந்தவர்களில் பாடசாலை மாணவர்கள் பலர் மீளவும் பாடசாலைகளில் இணைந்துள்ளதாகவும் பாடசாலைக்கு இதுவரை செல்லாதவர்களை மீள இணைப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் நலன்புரி முகாம்களிலிருந்து வந்து பாடசாலைகளில் சேர்ந்த மாணவர்களை வரவேற்று இணைத்து விசேட கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(50-72)

## தீவுப்பகுதிக்கு எரிபொருள் இன்று அனுப்பி வைக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ.20

தீவுப்பகுதிக்கு இன்று வெள்ளிக்கிழமை எரிபொருள்கள் அனுப்பிவைக்கப் படும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பும் களஞ்சிய உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவை இன்று பவுசர் வாகனங்கள் மூலம் தீவுப்பகுதிக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீவுப்பகுதியில் மண்ணெண்ணெய்க்கு நிலவி வரும் பற்றாக்குறை இன்றுடன் நீங்கிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(50-224)

## மாதர் அபிவிருத்திச் சங்கங்களுக்கு சுழற்சி முறையில் கியூடெக் கடன்

வண்ணை, நவ.20

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் சுனாமி மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதாரத் திட்டத்தின் ஊடாக யாழ்.பிரதேச செயலர் பிரிவு, நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 5 கிராம் மாதர் அபிவிருத்திச் சங்கங்களுக்கு சுழற்சி முறைக் கடன் திட்டத்தில் 21 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.


இதனடிப்படையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 3 கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அரியாலை, நாவலடிக் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கு 5 லட்சம் ரூபாவும், நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 4 லட்சம் ரூபாவும், தட்டாதெரு, ஐயனார் கோயில் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 3 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.பிரதேச செயலகப் பிரிவில் 2 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தெரிவாகியுள்ளன. யாழ்.பெரியகடை மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கு 5 லட்சம் ரூபாவும், சிறாம்பியடி மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கு 4 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

(50-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவை 'பாண்ட்' வாத்திய அணித்தலைவி கைலாகு கொடுத்து வரவேற்பதை முதல் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் மா.நவநீதமணி, ஈ.பி.டி.பி யின் வடமராட்சிப் பொறுப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் காணப்படுகின்றனர். சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் மாணவன் ஒருவனுக்கு அமைச்சர் பரிசில் வழங்குவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: ஹரிஸ்)*

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ.20

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி என்பவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் தாச்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சுதுமலை யுவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுவில் சிந்து விளையாட்டுக் கழகம் மோதும். (50-23)

# பெற்றோர்களுடன் இணைந்து வாழவே முன்னாள் சிறுவர் போராளிகள் விருப்பம்

## நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவிப்பு

கொழும்பு, நவ.20

''பெற்றோருடன் சென்று வாழ வேண்டும் என்ற ஆதங்கத்திலேயே முன்னாள் சிறுவர் போரளிகள் உள்ளனர்''- என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இரத்மலானை இந்துக் கலூரியின் விடுதியில் தங்கியுள்ள முன்னாள் சிறுவர் போரளிகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம், பா.அரியநேத்திரன், த.கனகசபை, டாக்டர்.வில்லியம் தோமஸ், பத்மினி சிதம்பரநாதன், சி.கிஷோர் மற்றும் சொலமன் சிறி ஆகியோர் நேற்று முன்தினம் முற்பகல் அவர்களை பார்வையிட்டனர்.

இது தொடர்பாக பா.அரியநேத்திரன் எம்.பி. தெரிவித்தவை வருமாறு:-

இவர்களில் 154 ஆண்பிள்ளைகளும் 119 பெண்பிள்ளைகளும் அடங்குகின்றனர். இதில் 8 ஆம் ஆண்டு முதல் 12 ஆம் ஆண்டுவரை கல்வி கற்கும் மாணவர்கள் உள்ளனர்.

வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களைச் சேர்ந்த இவர்களில் மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே அதிகம் உள்ளனர்.

'வடக்கிலும் தெற்கிலும் இயங்கும் 17 புனர் வாழ்வு முகாம்களில் 8 ஆயிரத்து 894 ஆண் களும் 2 ஆயிரத்து 98 பெண்களுமாக 10 ஆயிர த்து 992 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கப்படு கிறது'- என்று புனர்வாழ்வு ஆனையாளர் மேஜர் ஜெனரல் தயாரட்ணாயக்கா கூறியுள்ளார்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் 471 பேர் தமது பெற்றோர் உறவினர்களின் தொடர்புகள் இன்றி உள்ளனர்.

இதேவேளை புனர்வாழ்வு முகாம்களில் உள்ளோர் தாம் பெற்றோருடன் சென்று வாழ வேண்டும் என்ற ஆதங்கத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்- ன்றார். (அ-சி)

# 'லங்கா ஈ நியூஸ்' இணையத்தள ஆசிரியர் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை

கொழும்பு,நவ.20

'லங்கா ஈ நியூஸ்' இணையத்தளசெய்திச் சேவை ஆசிரியர் நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வுப்பிரிவுப் பொலிஸாரால் சுமார் இரண்டு மணி நேரம் விசாரணை செய்யப்பட்டார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் சாலித்த திஸாநாயக்க சில பொலிஸ் உத்தியோகத்தர்களை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்று பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் என்றும் அதனை அடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடம் மாற்றம் செய்யப்பட்டனர் என்றும் 'லங்கா ஈ நியூஸ்' இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தது. இது தொடர்பாகவே அந்த இணையத்தள செய்தி சேவையின் பிரதம ஆசிரியரான சண்ட ரூப சேனவீர விசாரணைக்குட்படுத்தப்பட்டார் எனத் கூறப்படுகிறது.

குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இரு பொலிஸார் 'லங்கா ஈ நியூஸ்' செய்திச் சேவைகள் இணையத்தள அலுவலகத்திற்கு நேரில் சென்று அந்த செய்தி எவ்வாறு, யார் கொடுத்தது? என விசாரித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# வன்னியில் இருந்து வந்தவர்களுக்கு இன்னும் நிவாரணம் ஏதும் இல்லை

## இக்கட்டான நிலையில் அவர்கள்

யாழ்ப்பாணம், நவ.20

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து யாழ்.குடாநாட்டுக்கு மீள்குடியேற அழைத்துவரப்பட்ட பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இதுவரை உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை எனப் புகார் கூறப்படுகிறது.

இந்த மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கான பங்கீட்டு அட்டைகளை உரிய பிரதேச செயலங்கள் வழங்க வேண்டும் எனவும் ஏற்கனவே அரச அதிபரினால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

குடும்பத் தலைவர்களை பறிகொடுத்தும், தடுப்பு முகாம்களில் கைவிட்டும், கைக்குழந்தைகள் பிள்ளைகளுடன் இங்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பெரும் கஷ்டமான நிலையில் உள்ளனர்.

இந்த மக்களின் அவல நிலைமையை கருத்திற்கொண்டு உலர்உணவுப் பொருள் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

# நாச்சிமார் கோயிலடி வடிகால்களில் வெள்ள நீர் தேக்கம்

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதியில் நாச்சிமார் கோயிலடியில் உள்ள வடிகால்களில் வெள்ள நீர் செல்லமுடியாதவாறு தடைப்பட்டுள்ளது.

தற்போது மழை காலம் தொடங்கி உள்ள காரணத்தால் வீதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் அப்பகுதி பொதுமக்கள், வியாபாரிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி வருகின்றனர்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த மதகு வழியாக வெள்ள நீர் வடிந்து கோம்பையன் மணல் வயல் வெளிக்கு செல்வது வழமை. ஆனால் தற்போது ஆலயத்துக்காக அமைக்கப்பட்ட மண்டபத்தினால் வாய்க்கால்கள் நீர்வடிந்து செல்லமுடியாதவாறு அடைக்கப்பட்டிருப்பதாகவும் வெள்ள நீர் வடிந்து செல்வதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் அப்பகுதி மக்கள் மாநகர முதல்வருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர். (50-16)

# முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரப் பணியாளர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட நிறுவனங்களில் தற்காலிக இணைப்புப்பெற்றுக் கடமை புரிந்த முல்லைத்தீவு மாவட்ட சுகாதார உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தமது வைத்திய நிறுவனங்களில் இருந்து விடுவிப்புக் கடிதத்தினை உடனடியாகப் பெற்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வைத்திய நிறுவனங்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டதை அடுத்தே இந்த விடுவிப்புக் கடிதத்தினைப் பெறுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (50-204)

# பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டடங்களை மக்கள் பாவனைக்கு திறந்துவிட நடவடிக்கை.

நல்லூர், நவ.20

யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதியில் பஸ்நிலையத்திற்கு அண்மையில் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படாமல் மூடப்பட்டிருந்த வீதிகள், கட்டடங்கள் அனைத்தும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படவுள்ளன.



மேற்படி பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை முதல் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

யாழ். மாநகரமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா எடுத்த நடவடிக்கையை அடுத்து மாநகரசபையின் உறுப்பினர் எஸ். நிஷாந்தன் இந்த வேலைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இப்பகுதியில் அமைந்துள்ள பஸ் பயணிகளுக்கான மலசலகூடங்கள், குளியலறைகள் என்பனவும் மீண்டும் திருத்தியமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக நேற்று முதல் அப்பகுதியில் கனரக வாகனங்களின் உத[illegible]புரவுப் பணிகள் மேற்கொள்[illegible]ன. (50-111-224)

# சன்மார்க்க வித்தியாலய ஒளி விழா இன்று

யாழ்ப்பாணம், நவ.20

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் திருமதி ப.அ.ஜோ.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலை ஆசிரியர் பீலிக்ஸ் மோகன்குமார் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் செ.சிவநடராசா கலந்துகொள்வார். (50-204)

# யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் 14 வாகனங்கள் அரசிடம் கையளிப்பு

கொழும்பு, நவ. 20

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினால் பயன்படுத்தப்பட்ட 14 வாகனங்கள் நேற்று முன்தினம் காலை அரசிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் இந்த வாகனங்களை நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

இந்த வாகனங்கள் வடபகுதி மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கை அலுவலகங்களுக்காக பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற பேச்சுக்களின் போது யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் பயன்படுத்திய வாகனங்[illegible] பட்டன என[illegible] (சி)

# நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ.20

''சர்வதேச ஸ்தாபனங்களும் ஒப்பந்தங்களும்'' நூல் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.ஜும்மா மொஸ்க்லேனில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் யாழ்.தே.ரங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூலின் அறிமுக உரையை யாழ்.பல்கலைக்கழகப் பொருளியல்துறை, சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (04-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். இந்துக் கல்லூரியின் ஆங்கிலக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்த ஆங்கில தின நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பாடசாலை அதிபர் வீ.கணேசராசா மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.இந்துவின் பழைய மாணவனும் ஓய்வுபெற்ற அதிபருமான ஆ.சபாரத்தினம் வரவேற்கப்படுவதையும் ஆங்கில நாடகத்தின் காட்சியையும் படங்களில் காணலாம். (1)

## பொது அமைப்புகளுக்கு மரக்கன்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 20

தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புகளுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் கொள் வனவு செய்யப்பட்ட 2 ஆயிரம் மரக்கன்றுகள் நேற்று முன்தினம் விநியோகிக்கப் பட்டன.

தென்மராட்சிப் பிரதேச செயலர் சே.ஸ்ரீநிவாசன் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளர் சூ.அலெக்ஸாண்டர் (சாள்ஸ்) மரக்கன்று களை பொது அமைப்புகளின் பிரதிநிதியிடம் கையளித்தார்.

## நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், நவ. 20

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த வேளையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் தற்காலிகமாக ஓய்வூதியம் பெற்று தற்போது சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்கள் தமது நவம்பர் மாத ஓய்வூதியத்தினை பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

# ஊழல் மலிந்துள்ள 180 நாடுகளில் இலங்கை 97ஆவது இடத்தைப் பிடித்தது

## கடந்த ஆண்டை விட நிலைமை மோசம்

கொழும்பு, நவ.20

வருடாந்த ஊழல் நிலை குறியீட்டில் 2009ஆம் ஆண்டில் இலங்கை 97ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த வருடம் 180 நாடுகளின் கணக்கெடுப்பில் 92ஆவது இடத்திலிருந்த இலங்கை இந்த வருடம் நிலைமை மேலும் மோசமடைந்து 97 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

'ரான்பரன்ஸி இன்ரர்நஷனல்' நிறுவனம் நாட [illegible] பொதுச்சேவைகளில் நிலவும் ஊழல தொடர்பாக எடுத்துள்ள புள்ளி விவரங்களில் இந்த நிலைமை தெரியவந்துள் ளது.

இலங்கையின் புள்ளிகள் கடந்த ஆண்டு 3.2ஆக இருந்து மேலும் குறைந்து இந்த ஆண்டு 3.1 புள்ளிகளாக வீழ்ச்சியடைந்துள் ளது.

சர்வதேச மட்டத்தில் ஊழல் புள்ளி விவரங்களில் பெரும்பாலும் மேற்கோள் காட்டப்படும் இந்தப் புள்ளிவிவரமானது நாட்டில் ஊழல் நிலை அதிகரித்திருப்பதை எடுத்துக் காட்டுவதுடன் இந்த நிலையை மாற்றி அமைப்பதற்கான வழி முறைகளைக் கையாள வேண்டிய அவசியத்தையும் வலியுறுத் துவதாக 'ரான்பரன்ஸி இன்ரர்நஷனல்' நிர் வாகப் பணிப்பாளர் ஐ.சி.வெலியமுன தெரி வித்துள்ளார்.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் கற்க வேண்டிய விடயம் யாதெனில் ஊழல் ஒழிப்பானது தேசிய முக்கியத்துவத்தில் முதன்மை பெறும் விடயமாகும் என்று அவர் மேலும் கூறினார்.

சர்வாதிகாரம் நிலவும் நாடுகளும் உள்நாட்டு மோதல்கள் இடம்பெறும் நாடுகளும் ஊழல்களில் மிக மோசமாகக் காணப்படும் நாடுகளாகவிருக்கின்றன என்று வெலியமுன தெரிவித்தார். (ப)

## கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மதிப்பளித்தல் நிகழ்வு

கரவெட்டி, நவ.20

கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியா லயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவருக்கான மதிப்பளித் தல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய சின்னத்தம்பி மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பிரதம கல்விப் பணிமனை பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராகக் கரவெட்டிக் கோட் டக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர் கலந்துகொள்வார். (50-204-70)

NSB திறப்பு விழா

அழைப்பு

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு தேசிய சேமிப்பு வங்கி ஆற்றிவரும் உன்னத அர்ப்பணிப்பான அரசாங்க உத்தரவாதமிக்க வாடிக்கையாளர் சேவையின் தொடர்ச்சியாக இன்று முதல் (20.11.2009) நெல்லியடி, அச்சுவேலி மக்களின் நலன்கருதி புதிய கிளைகளை ஆரம்பித்து வைப்பதில் பெரும் உவகை அடைகின்றோம்.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் திரு.எஸ்.ஆர்.ஆட்டிகல அவர்களின் அழைப்பின் பேரில்

பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் நிதி மற்றும் அரச வருவாய்த்துறை அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கௌரவ ரஞ்சித் சியம்பலப்பிட்டிய அவர்களினால் 2009 நவம்பர் 20

வெள்ளிக்கிழமை மு.ப.11.02 மணிக்கு இல.52/1, 'மருதம்', கொடிகாமம் வீதி, நெல்லியடி என்னும் முகவரியில் நெல்லியடிக் கிளையும்

பிற்பகல் 3.25 மணிக்கு இராஜ வீதி, அச்சுவேலி என்னும் முகவரியில் அச்சுவேலிக் கிளையும்

சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படும். சமூகசேவைகள் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விழாவில் விசேட அதிதியாகப் பங்கேற்று சிறப்பிப்பார் என்பதையும் அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருவதுடன் தங்கள் அனைவரையும் இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தேசிய சேமிப்பு வங்கித் தலைமையகம்.

(ரி/56250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயவர்த்தன கூட்டணி அபாரம்! இந்தியாவுக்கு இமாலய இலக்கு!!



மஹேல ஜெயவர்த்தன குவித்த 275 ஓட்டங்களும் பிரசன்ன ஜெயவர்த்தனவின் 154 ஓட்டங்களும் இலங்கை அணி இந்தியாவுக்கு எதிராக 760 என்ற இமாலய இலக்கை எட்டுவதற்கு வழிவகுத்தன.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்தியா அணி நேற்றைய நான் காம் நாள் ஆட்டநேர முடிவின் போது 190 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்திருந்தது. நான்காம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸை 591 ஓட் டங்களுக்கு 5 விக்கெட் என்ற நிலையில் தொடர ஆரம்பித்தது.

நேற்றையதினம் பிரசன்ன ஜெயவர்த்தனவின் சிறப்பான ஆட்டம் இந்திய அணியை மேலும் இக்கட்டான நிலைக்குத் தள்ளியது.

ஆறாவது விக்கெட்டுக்காக மஹேல ஜெயவர்த்தனவுடன் இணைந்து கொண்ட பிரசன்ன ஜெயவர்த்தன மிகவும் பொறுமையாக ஆடிக்கொண்டிருந்த வேளையில் அமேஷ் மிஷ்ராவின் சுழற்பந்தில் 27 பவுண்டரிகள் அடங்கலாக 275 ஓட்டங்களை பெற்றிருந்த மஹேல ஜெயவர்த்தன போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 351 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர். தொடர்ந்தும் பிரசன்ன ஜெயவர்த்தனவுடன் இணைந்து கொணடார். தம்மிக்க பிரசாத். பொறுமையாக ஆடிக்கொணடிருந்த வேளையில் பிரசன்ன ஜெயவர்த்தன 154 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்தும் தம்மிக்க பிரசாத் 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் அமேஷ் மிஷ்ராவின் பந்துவீச்சில் ஹர்பஜன் சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தவேளையில் 760 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகள் என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது இலங்கை அணி.

தொடர்ந்தும் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட தொடங்கிய இந்தியாவின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் மிகவும் பொறுமையாக துடுப்பெடுத்தாடினர். வீரேந்திர சேவாக் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்த கணமே ரங்கன ஹேரத்தின் பந்து வீச்சில் மத்தியூஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கம்பீருடன் இணைந்து கொண்ட ராகுல் ராவிட் 66 பந்துகளுக்கு முகம்கொடுத்து 38 ஓட்டங்களை பெற்றிருந்த போது வெலகெதரவின் பந்து வீச்சில் எல்பி டபள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் இந்தியா அணி 169 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகள் என்ற இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டது.

தொடர்ந்து துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய அமேஷ் மிஷ்ரா கௌதம் கம்பீருடன் இணைந்து துடுப்பெடுத்தாடிய போது ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

ஆட்டநேர முடிவின் போது இந்தியா அணி 190 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்து ஆடுகளத்தில் அரைச்சதத்தை கடந்த கம்பீர் 74 ஓட்டங்களுடனும் அமேஷ் மிஷ்ரா 12 ஓட்டங்களுடனும் உள்ளனர்.

பந்து வீச்சில் வெலகெதர 1 விக்கெட்டையும் ரங்கன ஹேரத் 1 விக்கெட்டையும் வீழத்தியுள்ளனர்.




# இந்திய மண்ணில் இலங்கை அரங்கேற்றிய சாதனைகள்

* இந்திய மண்ணில் இரட்டைச் சதம் அடித்த முதல் இலங்கை வீரர் என்ற சிறப்பை மஹேல ஜெயவர்த்தன பெற்றிருக்கிறார்.

* மஹேல ஜெயவர்த்தனவுக்கு இது 6ஆவது இரட்டைச் சதமாகும். அதே சமயம் இந்தியாவுக்கு எதிராக 2 ஆவது இரட்டைச் சதமாகும். ஏற்கனவே 1999 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் 242 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார்.

* சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக இரட்டை சதம் அடித்த வீரர்களின் பட்டியலில் மஹேல ஜெயவர்த்தன 6 ஆவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறார்.

* மஹேல ஜெயவர்த்தன - பிரசன்ன ஜெயவர்த்தனே ஜோடி 6 ஆவது விக்கெட்டுக்கு இதுவரை 216 ஓட்டங்கள் சேர்த்திருக்கிறது. 6ஆவது விக்கெட்டுக்கு இலங்கை ஜோடி திரட்டிய அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும். இதற்கு முன்பு 1998 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்டில் அரவிந்த டிசில்வா - ரணதுங்கா ஜோடி 189 ஓட்டங்கள் எடுத்ததே இந்த விக்கெட்டுக்கு அதிகபட்சமாக இருந்தது.

* இலங்கை அணி இந்திய மண்ணில் குவித்த அதிகபட்சம் ஓட்டங்கள் (591 - 5) இதுவாகும். இதற்கு முன்பு 1986-ம் ஆண்டு கான்பூரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் 420 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

* இந்திய மண்ணில் தனது 15 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் இலங்கை அணி 2 ஆவது முறையாக முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றுள்ளது.

* தனது 27ஆவது சதத்தை பூர்த்தி செய்து இரட்டை சதத்தையும் தொட்ட மஹேல ஜெயவர்த்தன 12 முறை 150 ஓட்டங்களைக் கடந்திருக்கிறார்.

* மஹேல ஜெயவர்த்தன இதுவரை சொந்தமண்ணில் 18 சதங்களும், வெளிநாடுகளில் 9 சதங்களும் அடித்திருக்கிறார்.

# ஜெயவர்த்தன ஜோடி உலக சாதனை; 72 வருடகால சாதனை முறியடிப்பு!

அகமதாபாத்தில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் 6 ஆவது விக்கெட்டானமஹேல ஜெயவர்த்தன - பிரசன்ன ஜெயவர்த்தன ஜோடி 351 ஓட்டங்கள் குவித்து புதிய உலக சாதனை படைத்தது.

இதன்மூலம் 72 ஆண்டுகால சாதனை முறியடிக்கப்பட்டது. இதற்கு முன்பு 1937ஆம் ஆண்டு இங்கி லாந்துக்கு எதிராக ஆஸ்திரேலியாவின் பிங்கின்டன்- பிராட்மேன் ஜோடி 346 ஓட்டங்கள் குவித்ததே சாதனையாக இருந்தது.

மஹேல ஜெயவர்த்தன 275 ஓட்டங்களை குவித்து இந்தியாவுக்கு எதிராக சாதனை புரிந்தார். இதற்கு முன்பு 1999 ஆம் ஆண்டு கொழும்பில் இந்தியாவுக்கு எதிராக 242 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

இலங்கை அணி நேற்று இந்தியாவுக்கு எதிராக 2 ஆவது அதிக பட்ச ஓட்டங்களை எடுத்தது. 1997 ஆம் ஆண்டு அந்த அணி இந்தியாவுக்கு எதிராக 952 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

# பாகிஸ்தானில் நேற்றும் குண்டுத்தாக்குதல்; 16 பேர் உடல் சிதறிப் பலி; 26 பேர் காயம்!

பெஷாவர், நவ. 20

வடமேற்கு பாகிஸ்தான் நகரான பெஷாவரிலுள்ள நீதிமன்றத்துக்கு வெளியே நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர். 26 பேர் காயமடைந்தனர். அநேக கார்கள் சேதமடைந்தன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''மக்கள் நடமாட்டம் மிகுந்த கைபர் வீதியில் இந்த நீதிமன்றம் அமைந்துள்ளது. நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் நுழைவாயிலில், அங்கு வந்த நபர் ஒருவரை பொலிஸார் சோதனையிட்டனர். அப்போது இக்குண்டு வெடித்துள்ளது. அந்நபரே தற்கொலைக் குண்டுதாரியாவார்'' என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

''இக்குண்டுவெடிப்பில் பலியான 16 பேரின் சடலங்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டன. பலியானோரில் மூன்று பேர் பொலிஸாராவர். ஏனையோர் சிவிலியன்களாவர். பலத்த காயங்களுடன் கொண்டு வரப்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்'' என லேடிரீடிங் வைத்தியசாலை தலைமையதிகாரி டாக்டர் சாஹிப்குல் நிருபர்களிடம் தெரிவித்தார்.

''தற்கொலைக் குண்டுதாரி 10 கிலோ எடையுள்ள குண்டை வெடிக்க வைத்துள்ளார். குண்டுவெடிப்பால் அநேக கார்கள் சேதமடைந்துள்ளன. அப்பகுதியில் மனித அவயவங்கள் சிதறிக் கிடந்தன. காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் வாகனங்களில் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்'' என குண்டுகளை செயலிழக்கச் செய்யும் குழுவின் தலைமையதிகாரி குறிப்பிட்டார்.

''குண்டுவெடித்ததும் உடனடியாக அப்பகுதியை பாதுகாப்புப் படையினர் சுற்றி வளைத்தனர். கைபர் வீதி மூடப்பட்டு போக்குவரத்துகளுக்கு தடை விதிக்கப்பட்டது. பெஷாவர் ஆப்கன் எல்லைக்கருகில் அமைந்துள்ளது. இங்கு சமீப காலமாக தலிபான் தீவிரவாதிகள் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள்'' என பெஷாவர் நகர தலைமை நிர்வாகி சஹிப் ஜாடா அனிஸ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இதே வீதியில் அமைந்துள்ள பாகிஸ்தானின் கேந்திர உளவுத்துறை தலைமை அலுவலகக் கட்டடம், கடந்த வெள்ளிக்கிழமை பயங்கரக் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானது. இதில் 12 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமடைந்தனர்.

மக்கள் நடமாட்ட மிகுந்த பெஷாவர் கால்நடைச் சந்தைத் தொகுதியில் ஒக்ரோபர் 28 ஆம் திகதி கார்க்குண்டுத் தாக்குதலொன்று இடம்பெற்றது. இதில் 100 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.




# பன்றிக்காய்ச்சல் நோயாளர்கள் ரஷ்யாவில் நாளாந்தம் அதிகரிப்பு

மாஸ்கோ, நவ. 20

ரஷ்யாவில் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதுவரை 5 ஆயிரத்து 600 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சர் தத்யானா கோலிகோவா தெரிவித்துள்ளார். கடந்த வாரம் இது 4 ஆயிரத்து 560 ஆக இருந்தது.

ரஷ்யாவிலுள்ள 74 மாவட்டங்களில் 5 ஆயிரத்து 613 பேர் பன்றிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் கடும் பாதிப்புக்குள்ளான 132 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 16 பேர் பன்றிக்காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர் என ரஷ்ய அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

# அமெரிக்காவில் கடந்த ஆண்டு 5 கோடி குடும்பங்கள் பட்டினி

## விவசாயத்துறை அறிக்கையில் தகவல்

வாஷிங்டன், நவ. 20

அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகையில் 6 இல் ஒரு பகுதியினர் கடந்த 2008 ஆம் ஆண்டு பட்டினி கிடந்தனர் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

சர்வதேச பொருளாதார மந்தம் அமெரிக்கர்களை கடுமையாகப் பாதித்துள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டு அமெரிக்கப் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பல லட்சம் பேர் வேலையிழந்து, குடும்பம் குடும்பமாக வீடுகளை விட்டு வெளியேறினர். பிழைப்புத் தேடியே இவர்கள் வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில், இந்த ஓராண்டில் மட்டும் 5 கோடி குடும்பங்கள் பட்டினியால் தவித்தன என்று அமெரிக்க விவசாயத்துறை சுட்டிக்காட்டி அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை விரைவில் ரோமில் நடைபெறும் உச்சி மாநாட்டிலும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சமீபத்தில் இதுகுறித்துப் பேசுகையில், ''இந்த 5 கோடி குடும்பங்களில் 5 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் மிகக் கொடூரமான பட்டினியை அனுபவித்துள்ளனர். இந்த நிலைமையை அடியோடு மாற்ற வேண்டும். அரசு இதில் செய்யவேண்டிய பணிகள் நிறைய உள்ளன'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா முழுவதிலும் உள்ள 44 ஆயிரம் குடும்பங்களிடம் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு அடிப்படையில் இந்த அறிக்கையை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. 1955 இற்குப் பின்னர் இந்த அளவுக்கு அமெரிக்கர்கள் பட்டினியால் அவதிப்படுவது இப்போதுதானாம்.

# இந்தியாவைவிட பாகிஸ்தானிடம் அதிகளவில் அணு ஆயுதங்கள்!

## இரு அமெரிக்க விஞ்ஞானிகள் தகவல்

வாஷிங்ரன், நவ. 20

இந்தியாவைவிடப் பாகிஸ்தானிடம் அதிக அளவில் அணு ஆயுதங்கள் உள்ளன என அமெரிக்க விஞ்ஞானிகளான றொபர்ட் எஸ்.நாரிஸும், ஹூஸ் எம்.கிரிஸ்டின்சனும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்விருவரும் அணு விஞ்ஞானம் என்னும் சஞ்சிகையில் இது தொடர்பாக கூட்டாக கட்டுரையொன்றை எழுதியுள்ளனர்.

இக்கட்டுரையில், ''சீனா, பாகிஸ்தான், இந்தியா ஆகியவை போட்டிபோட்டுக் கொண்டு அணு ஆயுதங்களைப் பெருக்கி வருகின்றன. பாகிஸ்தான் 70 முதல் 90 வரையிலான அணு ஆயுதங்களை வைத்துள்ளது. இந்தியா 60 முதல் 80 வரை வைத்துள்ளது. அவை எந்தெந்த இடங்களில் பாதுகாக்கப் படுகின்றன என்பதை அடையாளம் காண் பது சிரமம்'' என இவ் விஞ்ஞானிகள் குறிப் பிட்டுள்ளார்கள்.

''உலகம் முழுவதும் 14 நாடுகளில் சுமார் 23 ஆயிரத்து 360 அணு ஆயுதங்கள் உள்ளன. அவற்றில் பாதியளவு செயற்படும் நிலையில் உள்ளன. ரஷ்யாவில் 13 ஆயிரம் ஆயுதங்களும், அமெரிக்காவிடம் 9 ஆயிரத்து 400 ஆயுதங்களும், பிரான்ஸிடம் 300 ஆயுதங்களும், சீனாவிடம் 240 அணு ஆயுதங்களும் உள்ளன. இந்த வரிசையில் பாகிஸ்தான் 7 ஆவது இடத்திலும், வட[illegible] உள்ளன'' என்று இவ்விரு விஞ்ஞானிகளும் பட்டிய லிட்டுள்ளார்கள்.

இந்நிலையில், பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் தொடர்பான பல இரகசியங்களை அமெரிக்காவிடம் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் காட்டிக் கொடுத்து விட்டார் என பாகிஸ்தான் அணு விஞ்ஞானியான ஏ.க்யூ.கான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடகொரியாவுக்கும், ஈரானுக்கும் அணு ஆயுத தயாரிப்பு இரகசியங்களை விற்றமைக்காக பாகிஸ்தான் அணு விஞ்ஞானிகான், அமெரிக்க நிர்ப்பந்தத்தால் முன்னாள் ஜனாதிபதி முஷாரபால் வீட்டுக்காவலில் வைக் கப்பட்டிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அ-அட்டை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை

திருநெல்வேலி, நவ.20

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டு வரும் மக்களுக்கு தேசிய அடையாள அட்டைபெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச செயலர் எஸ். செந்தில் நந்தனன் தெரிவித்தார்.

மிகவிரைவில் இதற்கான நடமாடும் சேவை ஒன்றுநடைபெற இருப்பதாகவும் அதற்கேற்ப முன்னேட்பாடாக தயார் நிலையில் இருக் குமாறும் அவர் கிராம சேவையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையைத் தவற விட்டவர்களும் இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் இந்த நடமாடும் சேவையில் விண்ணப்பிக்க முடியும்.

அதற்கு பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி), திருமணமான பெண்களுக்கு மட்டும் திருமணச் சான்றிதழ்,தேசிய அடையாள அட்டைக்காகஎடுக்கப்பட்ட படம் ஆறு, 15 ரூபா பெறுமதியான முத்திரை என்பவற்றைக் கொண்டுவர வேண் டும். ஏற்கனவே அடையாள அட்டை பெற்று தொலைந்தவர்கள் தங்கள் பகுதி பொலிஸ் பிரிவில் தொலைந்தமை பற்றி முறைப் பாடு செய்து முறைப்பாட்டு பிரதி, முதல் தடவையாக விண்ணப்பிப்பவர்கள், பாடசாலை மூலமாகவோ அல்லது வேறு எந்த மாவட்டத்திலோ விண்ணப்பிக்கவில்லை என்ற விண்ணப்பதாரியின் கடிதம், அரச சேவையில் உள்ளவர்கள் தமது சேவை தொழில் என்பவற்றை உறுதிப்படுத்திய கடிதம், அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் இதற்கு முன் தேசிய அடையாள அட்டை பயன்படுத்திமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பவற்றுடன் தங்கள் பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் தெரிவித்தார்.

(50-125)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 13 ★ 01 ★ 1950 | | 21 ★ 10 ★ 2009 |



### அமரர் செல்லமுத்தர் திருலோகச்சந்திரன் (மணி)

*(விமலா ஸ்ருடியோ உரிமையாளர்)*

*திதி : சதுர்த்தி*

அப்பா
இல்லை நீங்கள் இல்லை என்று
இன்னும் நாங்கள் நம்பவில்லை அப்பா
பிறகு எப்படி (அப்பா) எழுதுவது உங்களுக்கு அஞ்சலி
31 நாள்கள் கடந்து விட்டன- ஆனாலும்
உங்கள் சின்னச் சின்ன ஞாபகங்கள்
கண்ணீர்த் துளிகளாய் நம் கண்களில் இன்றும்.
வந்து விடுங்களப்பா எம்மிடம்- அதுவரையில்
கோடையிலும் வற்றாத அருவிதான் நம் கண்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி-விமலா,மகன்-மதனரூபன்,மகள்-அபிராமி.

(91219)

எமது நிறுவனத்தின் யாழ்.கிளைக்கு விற்பனை உதவியாளர்

**தேவை**

வயதெல்லை: 20 இற்கும் 40 இற்கும் இடையில்
A/L பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்

ஏற்கனவே விற்பனை தொடர்பான
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

நேர்முகப் பரீட்சை : 22.11.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கிளையில் இடம்பெறும்.

**Abans Retail PVT. LTD.**
No: 31, Manipay Road, Jaffna.
தொடர்புகளுக்கு: 214920430/0212221140
Abans

## ஆமை பிடித்தவர்களுக்கு நீதிமன்றம் அபராதம்

யாழ்.,நவ.20

அனுமதிப் பத்திரமின்றி ஆமை கொண்டு சென்ற ஐந்து பேரைச் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

இந்த ஐந்து பேருக்கும் எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கினை விசாரித்த நீதிவான் ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராத தொகையைச் செலுத்தத் தவறின் தலா ஒரு மாதம் சாதாரண சிறைத் தண்டனைஅனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

ஆமைகளை குளத்தில் விடுமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

(50-207)

## பிறப்புச் சான்றிதழை பெற்றுக்கொள்ளலாம்

யாழ்.நவ.20

தென்மராட்சி பிரதேச செயலக மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் பிறப்புச் சான்றிதழ் கோரி விண்ணப்பித்த பிரதேச நலன் புரிநிலையங்களில் தங்கியிருந்தோர் தமது பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பிறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலக பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் [illegible] அறிவித்துள்ளார்.

(50-207)

**Nottingham College Of London And UNI ICT - CAMPUS**
(Accredited by the Ministry of Higher Education & Vocational Training - Sri Lanka)

கீழ்வரும் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
எமது யாழ் நிறுவனத்தில் கீழ்வரும் கற்கைநெறிகள் தற்போது ஆரம்பமாகவுள்ளதால் இதற்கான அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன. மாணவர்கள் உடன் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Certificate Courses :-
- Certificate in Information Technology
- Certificate in PC Hardware Engineering
- Microsoft Office for Business Professional
- Certificate in PC Network Administration
- Certificate in English
- Certificate In Business & Communication

Diploma Courses :-
- Diploma in Marketing
- Diploma in Human Resource Management
- Diploma in Electronic Technology
- Diploma in Multimedia
- Diploma in IT
- Diploma in Hardware Engineering
- Diploma in Business (With Accounting & IT)
- Diploma in Business Technology
- Professional Diploma in Marketing
- Diploma in Spoken & Practical English & IELTS
- Diploma in Mobile Phone Repairing (Hardware & Software)

Our International Affiliations :-

Higher National Diploma — விண்ணப்ப முடிவுத்திகதி :- 24/11/2009
- Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy)

Degree Courses :-
- B .A (Hons) in Business Administration
- B.Sc (Hons) in Multimedia

தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியோரும் இணைந்து கொள்ளலாம்!!!

மேலதிக விபரங்களுக்கு :- UNI ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 [illegible]

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





தொண்டர் ஆசிரியர்களான எமது நீண்டநாள்
வேண்டுகோளை கவனத்தில் கொண்டு மிகுந்த சிரத்தையுடன்
எமக்காக பல்வேறு வழிகளில் முயன்று ஆசிரிய
உதவியாளர்களாக நியமனம் பெற்றுத் தந்தமைக்காக சமூக
சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ
K.N. டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும், யாழ். மாவட்ட இணைப்பாளர்
உதயன் (சில்வெஸ்திரி அலன்ரீன்)
அவர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*நியமனம் பெற்ற ஆசிரிய உதவியாளர்கள்.*

(சி/62605)

## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் கசிதரன்



போயிட்டி நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து Southenஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் கசிதரன் 22.10.2009 அன்று காலமானார். அன்னார் இராசரத்தினம் - தவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், கிருபாஜினி (கொலண்ட்), தர்சினி (ஆசிரியை), தர்மேந்திரா, கஜீபன், ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மகேந்திரன் (கொலண்ட்), ஜெகதீஸ் (நிக்கொட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஷமிலா, மிதுலன், திஷானா ஆகியோரின் பிரியமான மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போயிட்டி, நீர்வேலி. (91217) தகவல்: குடும்பத்தினர்.

### இரத்தினசிங்கம் இரஞ்சன்

**(இளைப்பாறிய கணக்காளர்/உதவி முகாமையாளர்)**
(Associated Battery Manufacturers (Pvt.) Ltd., Ratmalana.)



யாழ். வண்ணார்பண்ணையை (தட்டாதெரு) பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் இரஞ்சன் 18.11.2009 புதன்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம்-புவனேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம் -ஞானம்மா தம்பதிகளின் மருமகனும், கதிர்காமசோதியின் அன்புக்கணவரும், மோகன்(பல்வைத்தியர்), இராகுலன் (இளைப்பாறிய மக்கள் வங்கி உதவி முகாமையாளர்), ரமணி, காலஞ்சென்ற ராஜன் மற்றும் இரத்தினகுமார், ரஜனி, ரங்கன், ரமணன், ராஜினி, ராகவன், ராகினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகௌரி (பல்வைத்தியர்), யோகேஸ்வரி, காலஞ் சென்ற குகதாசன் மற்றும் கிருஷ்ணவேணி, பரமேஸ்வரி, தியாகராஜன், ஜெயந்தி, ஜெயகௌரி, லோகநாதன், சர்மிளா, பாலகுமார், நீலாயதாச்சி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் ஞானகாந்தன், ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற Dr.கந்தசாமி மற்றும் ராஜகிருஷ்ணர், ஜெயநிதி ஆகியோரின் சகலனும், டிலினி, டிலானி, விதுனன், விதுர்பன், ஜீவிதா, பிரகாஷ், அபினா, ஹரிஹறன், சாருஜன், அனோஜ், அபினாஜ், ஆரதி, சகானா, ஷைலன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், ரமேஷ், சதீஸ், திவ்யா, அஸ்வினி, லோஜினி, மதிநாத், சுஜித்தா, றபித்தா, சாருகா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : *Ragulan 0777676479, 0112360162*
*41 A, Dr. E.A. Cooray Mawatha, Wellawatte, Colombo 6.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியருக்கு விசேட கொடுப்பனவு 750 ரூபா; முப்படைகளுக்கு 1,000 ரூபா; ஓய்வூதிய அதிகரிப்பு 350ரூபா

## 6 மாதங்களுக்கு மேல் தற்காலிக அடிப்படையில் பணிபுரிவோருக்கு நிரந்தர வேலை

கொழும்பு, நவ. 20

அரச ஊழியர்களுக்கு 750 ரூபாவை வாழ்க்கைச் செலவீனக் கொடுப்பனவாகவும், முப்படையினருக்கு 1000 ரூபாவை விசேட கொடுப்பனவாகவும் வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அத்தோடு தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மாத்திரம் பணிபுரிந்து வந்த படையினருக்கு வழங்கப்பட்டு வந்த நாளாந்தக் கொடுப்பனவான 80 முதல் 100 ரூபா வரையிலான தொகை இனி அனைத்துப் படையினருக்கு வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா இத்தகவலைத் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் அமைச்சரவைக்குச் சமர்ப் பிக்கப்பட்ட இது தொடர்பான யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அத்தோடு ஓய்வுதியக் கொடுப்பனவையும் 350 ரூபாவால் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் சொன்னார்.

மேலும் 180 நாள்களுக்கு மேலாக அரச துறையில் தற்காலிக, ஒப்பந்த, பதில் அடிப்படையில் வேலை செய்யும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கும் அமைச்சரவை தீர்மானமெடுத்துள்ளது.

மேற்படி விடயங்கள் அனைத்தும் நவம்பர் முதல் நடைமுறைக்கு வரும் என்று அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா கூறினார். (அ-சி)

# ஈழ அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்க நியூஸிலாந்திடம் உதவிகோருகிறது ஆஸி.

கொழும்பு, நவ.20

'ஓசியானிக் வைகிங்' கப்பலில் இருந்து இறக்கப்பட்டு இந்தோனேஷியாவில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் 78 பேருக்கும் அரசியல் தஞ்சம் வழங்கும் நடவடிக்கையில் நியூஸிலாந்தும் பங்கேற்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய அரசு நேற்று அழைப்பு விடுத்துள்ளது.

ஆஸி.யின் குடிவரவு அமைச்சர் கிறிஸ் வென்ஸ் அரசியற் தஞ்சம் வழங்கும் நடவடிக்கையில் பங்கேற்பதன் மூலம் ஆஸியின் சுமையை நியூஸிலா தமது கோரிக்கையில் வலியுறுத்தி உள்ளவை வரு மாறு:-

நியூஸிலாந்து அரசு இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. ஏனெனில் காலங்காலமாக அகதிகளுக்கு அரசியற் தஞ்சம் வழங்குகின்ற நாடுகளில் ஒன்றாக அது இருந்து வருகிறது. குறிப்பாக இந்தோனேஷியாவில் தங்க வைக்கப்படுகின்ற வெளிநாடுகளைச் சேர்ந்த அகதிகளுக்கு நியூஸிலாந்து கட்டாயம் அரசியற் தஞ்சம் வழங்கி வந்துள்ளது.

அதேநேரம், நியூஸிலாந்தை நோக்கி இலங்கை அகதிகளுடன் புறப்பட்டு வந்த படகுகளும் இந்தோனேஷிய கடலில் வைத்து அண்மையில் எம்மால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. அவர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். எனவே இந்த அகதிகளின் சுமையை நியூஸிலாந்து ஆஸியுடன் பங்குபோடவேண்டும். (அ-சி)

# வன்னிப் பகுதி விவசாயத் தேவைக்கு ரூ.50 மில்லியனுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம்.நவ.20

வடபகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்டு வரும் பிரதேசங்களில் விவசாய முயற்சிகளில் ஈடுபடுவோருக்குத் தேவையான 50 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் நேற்று வியாழக்கிழமை கொழும்பிலிருந்து வடபகுதிக்கு எடுத்துவர ஏற்பாடாகியிருந்தன.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்டுள்ள இந்தவிவசாய உபகரணங்கள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் எம்.பியுமான பஸில் ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

இந்த உபகரணங்கள் நேற்று வியாழக்கிழமை வவுனியாவிற்கு எடுத்துவரப்படும் என்றும் இன்று வெள்ளிக்கிழமை வட மாகாண ஆளுநரால் இவை முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி அரச அதிபர்கள் மற்றும் மாவட்ட விவசாயப் பணிப்பாளர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட முசலிப் பிரதேசத்தில் 4 ஆயிரம் ஏக்கரிலும், முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய், மல்லாவிப் பிரதேசத்தில் 3 ஆயிரத்து 100 ஏக்கர் மற்றும் மேட்டு நிலப் பகுதியான 750 ஏக்கரிலும், கிளிநொச்சி மாவட்ட முழங்காவில் பிரதேசத்தில் 110 ஏக்கரிலும் காலபோக, பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்படுவதாக வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் காலநிதி எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

வடபகுதியில் தற்போது மழைவீழ்ச்சி ஆரம்பித்துள்ளதால் நெற்பயிர்ச் செய்கைக்கான நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள பொது மக்கள் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிலத்தை பண்படுத்துவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபாவும், 3ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க விதைநெல் இலவசமாக வழங்குவதற்கும் உரமானியம் வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் ஆளுநர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-3)

## அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.20

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில்ஆ.சி. நடராஜா தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கவிஞர் வி.கந்தவனமும் அவரது பாரியார் திருமதி தவமணி கந்தவனமும் கலந்துகொள்வர். (50-204)

## நேர்முகப் பரீட்சை

வடக்கு மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் II 'ஆ' பிரிவுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

அதேசமயம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். (ஒ)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நேற்று முன்தினம் அலரி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கைகொடுத்து, அவரைக் கட்டியணைத்து அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார். அப்போது எடுக்கப்பட்ட படம்.

# தமிழர்கள் நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பாகவும் அங்குள்ள நிலைமை தொடர்பாகவும் இச்சந்திப்பின் போது விரிவாக எடுத்துக் கூறியதுடன் அங்கு இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் குடும்பங்களின் துரிதமான மீள்குடியேற்றத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டதாக அரசு கூறினாலும் வடக்கு கிழக்கில் மாத்திரமல்ல வடக்கு கிழக்கிற்கு வெளியேயும் மின்றி சுதந்திரமாக நடமாடக் கூடிய முழுமையான சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லையென்பதை இச்சந்திப்பின்போது ஐ.நா.பிரதிநிதியிடம் தாம் விளக்கினார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

**பொது மன்னிப்பு வழங்க வேண்டும்**

''போராதனை [illegible] துவாரகா அண்மையில் கைதான சம்பவம் உட்பட சில சம்ப வங் களை நாம் ஐ.நா. பிரதிநிதிக்கு விளக்கி னோம். வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களில் தொடரும் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவரது கவனத்திற்கு கொண்டு வந்தோம்.'' என்றும் அவர் தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு் கொண்டுவரப்பட்டு விட்டதாக அரசு கூறும் நிலையில் சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ள மற்றும் சரணடைந்துள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் எனக் கூறப்படும் சகலருக் கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும். சிறைச்சாலைகளில் அவசரகாலச் சட்ட விதிகள் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகலருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் ஆகியன தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இச்சந்தர்ப்பத்தின் போது முன் வைத்துள்ளது.

இதேவேளை வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்குத் தாம் மேற்கொண்ட விஜயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்த ஜோன் ஹோம்ஸ், அகதிகளின் மீள் குடியேற்றத்தில் தற்போது முன்னேற்றம் இருப்பதாகவும் கணிசமான குடும்பங்கள் எதிர்வரும் ஜனவரி மாதத்திற்கு முன்பாக மீள்குடியேற்றப்படுவார்கள் என தான் நம்புகிறார் என்றும் கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார். (அ-சி)

# கோப்பாய் கல்வியியல் கல்லூரி மாணவருக்கு டெங்கு நோயா?

யாழ்ப்பாணம்.நவ.20

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆசிரிய மாணவரொருவர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளதாகக் கருதப்பட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆசிரிய மாணவர்கள் பத்துப் பேருக்கு மேலும் காய்ச்சல் காணப்படுவதால் இவர்கள் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட பின்னர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தேசியக் கல்வியியல் கல்லூரியில் கோப்பாய் சுகாதார சேவை பணிமனையினர் நேற்று டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்தினர். அத்துடன் சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடாநாட்டில் பரவலாக டெங்கு நோய் இனங்காணப்பட்டிருக்கும் நிலையில், மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்திருக்கின்றனர். (ஒ-10-72)

## முதியோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.20.

கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த 200 முதியோர் கடந்த வாரம் கௌரவிக்கப்பட்டனர்.

கனடா வாழ் கைதடி மக்கள் நலன்புரிச் சங்கம், கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகம், சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்து சர்வதேச முதியோர் தினத்தையொட்டி கௌரவிப்பு நிகழ்வினை நடத்தினர்.

கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த 200 முதியோர்கள் கௌர[illegible]ப்பட்டனர். (207)

## கோப்பாயில் நாளை இரத்ததானம்

யாழ்ப்பாணம்,நவ.20.

பகவான் சத்தியசாயி பாபாவின் பிறந்த தினத்தையொட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரத்ததானம் வழங்கும் நிகழ்வு கோப்பாய் சாயிசேவா நிலையத்தில் இடம்பெறும். (ஒ)

## பஸ் தரிப்பிடங்கள் அகற்றப்பட்டதால் நோயாளர் அவதி

யாழ்ப்பாணம், நவ.20

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக இருந்த பஸ் தரிப்பு நிலையங்கள் அகற்றப்பட்டுள்ளதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் நோயாளர்கள் பஸ் வரும் வரை வெயிலிலும் மழையிலும் நிற்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பஸ் தரிப்பு நிலையங்கள் சாவகச்சேரியைச் சேர்ந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்தன.

## நீரிழிவு நோயாளருக்கான மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.20.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவு ஆயுள்வேத பாதுகாப்புச்சபை மானிப்பாய் வட்ட லயன்ஸ்கழக அனுசரணையில் நீரிழிவு நோயாளர்களுக்கான மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை மானிப்பாய் பிரதேச சபை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

நீரிழிவு நோயில் பயன்படும் மூலிகைகளும், மருத்துவப் பயன்களும் மற்றும் நீரிழிவு நோயாளர்களுக்குரிய உணவுக் குறிப்பும் வழங்கப்படவுள்ளதால் சகல நீரிழிவு நோயாளர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-201-112-130)

## சிறந்த ஆசிரிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.20.

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் 2009ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசிரிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் கலந்துகொள்வார். திருமதி அரியநாயகம் பரிசில்களை வழங்குவார்.

## வங்கியியல் கற்கை நெறி

யாழ்ப்பாணம், நவ.20

சமுதாய நல மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாடசாலையை விட்டு விலகிய யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான வங்கியியல் கற்கை நெறியை ஹற்றன் நஷனல் வங்கி நடத்தவுள்ளது.

இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நாளை சனிக்கிழமை ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி இராஜேந்திரா தியாகராஜா,மனிதவள மற்றும் நிர்வாகப் பிரதிப் பொது முகாமையாளர் ஜே.ஆர்.பி.எம். பாய்வா,கொழும்புப் பிராந்திய பிரதம முகாமையாளர் ஆர்.பி.எம்.தயாவன்ச,பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான சிரேஷ்ட முகாமையாளர் திருமதி மானரம் ரம்புக்வல,வடகிழக்கு பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் ஏ.வீ.பீடில்,யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கை நெறிப் பீடாதிபதி பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் உள்ள 250 இலங்கையரை இந்தோனேஷிய அரசு நாடு கடத்தாது

கொழும்பு,நவ.20

இந்தோனேஷியாவின் மெராக் துறை முகத்தில் கடந்த ஒரு மாதகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படகுக் கப்பலில் உள்ள இலங்கையர்கள் 250 பேரை உடனடியாக நாடு கடத்தும் திட்டத்தை அந்த நாடு தற்காலிகமாக கைவிட்டுள்ளது.

இந்தோனேஷிய அமைச்சர்கள் மற்றும் அமைப்புகள் மத்தியிலான சந்திப்பின்போது இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

படகில் வந்த 255 பேருக்கும் அடைக்கலம் வழங்குவதா என்பது குறித்து யு.என்.எச்.சி.ஆர். ஆராய்வதற்கு அனுமதிப்பது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அவர்களுக்கு அவுஸ்திரேலியா அடைக்கலம் அளிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென அந்த நாட்டின் குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் இவான் தெரிவித்துள்ளார்.

அவர்கள் இந்தோனேஷிய அதிகாரிகளால் இந்தோனேஷியக் கடற்பரப்பில் இடைமறிக்கப்பட்டமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தோனேஷிய துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள படகில் உள்ள 250 இலங்கையர்களும் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்ளும் அபாயம் குறித்து மனிதாபிமான அமைப்புகள் எச்சரித்துள்ளன.

கடந்த ஒருமாத காலமாக சிறிய படகொன்றில் தங்கியுள்ள இலங்கையர்கள் விவகாரத்துக்குத் தீர்வு காண்பதற்கு இந்தோனேஷியா உறுதியான முடிவு எதனையும் எடுக்கவில்லை என அந்த நாட்டின் அரச சார்பற்ற அமைப்புகளின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தோனேஷிய அரசு உறுதியுடன் இந்த விவகாரத்தைக் கையாளாமையினாலேயே இலங்கை அகதிகளின் நிலை மோசமடைந்துள்ளது என அரச சார்பற்ற அமைப்புகளின் சம்மேளனங்களின் உறுபினரான ஷட்டி தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா, அகதிகள் தொடர்பான ஐ.நா. பிரகடனத்தை இதுவரை ஏற்றுக்கொள்ளாத போதிலும் அடைக்கலம் கோருபவர்களை அந்த நாடு, நாடு கடத்தவோ புறக்கணிக்கவோ முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தங்களை இந்தோனேஷிய அதிகாரிகள் பலவந்தமாகப் படகிலிருந்து இறக்க முயன்றால் படகை வெடிக்கவைத்து விட்டு கடலில் குதிப்பர் எனப் படகில் உள்ளவர்களின் சார்பில் கருத்துத் தெரிவித்துள்ள அலெக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது குடும்பத்தவர்கள் பழிவாங்கப்படலாம் என்றும் அலெக்ஸ் அச்சம் வெளியிட்டுள்ளார்.

# அடுத்த வெள்ளி 27 இல் தீபம் ஏற்றுங்கள்; தமிழக மக்களிடம் நெடுமாறன் வேண்டுகோள்!

கொழும்பு, நவ. 20

இலங்கையில் நடைபெற்ற போரில் படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்களுக்கும், மற்றும் ஈழத் தமிழர்களுக்காக பல்வேறு நாடுகளில் தீக்குளித்து உயிரைத் தியாகம் செய்த தமிழர்களுக்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நவம்பர் 27 ஆம் திகதியன்று தமிழகத்தில் தியாகத் தீபங்கள் ஏற்றுவீர்.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படிருப்பவை வருமாறு -

இலங்கையில் நடைபெற்ற போரில் படுகொலை செய்யப்பட்ட ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஈழத் தமிழர்களுக்கும் மற்றும் தமிழ்நாட்டிலும் உலக நாடுகளிலும் ஈழத் தமிழர்களுக்காகத் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்த முத்துக்குமார் உள்ளிட்ட 18 தமிழர்களுக்கும் வீரவணக்கம் செலுத்தும் வகையில் நவம்பர் 27ஆம் திகதியன்று தமிழகமெங்கும் அமைதி ஊர்வலங்களையும், அஞ்சலிக் கூட்டங்களையும் நடத்துமாறு அனைத்துத் தமிழர்களையும் வேண்டிக் கொள்கிறேன்.

அன்றிரவு தமிழர் வீடுகளில் தியாகத் தீபங்கள் ஏற்றி மறைந்தவர்களின் நினைவைப் போற்றுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

அத்துடன், இலங்கைப் போரில் குண்டடி பட்டு காயமடைந்து, உடல் உறுப்புகளையும், குடியிருப்புகளையும் இழந்து, இன்றும் சித்திரவதைக் கூடங்களில் அளவிட முடியாத கொடுமைகளை அனுபவித்து வரும் இலங்கைத் தமிழ் மக்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் உறுதி ஏற்க வேண்டுகிறோம் - என்றுள்ளது.

## யாழ்ப்பாணத்திலிருந்து 51 பேர் மட்டக்களப்புக்கு

கொழும்பு, நவ. 20

வன்னியிலிருந்து யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 18 குடும்ப உறுப்பினர்கள் 51 பேர் நேற்று கிளிநொச்சி ஊடாக மீள்குடியேற்றத்தின் நிமித்தம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சிவில் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 3 பஸ்களில் மட்டக்களப்பை வந்தடைந்த இக்குடும்பங்களை சிங்கள மகா வித்தியாலயத்தில் சிவில் மற்றும் படைத் தரப்பினரால் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதனைத் தவிர வவுனியா மெனிக் பாம் இடைத்தங்கல் முகாமிலிருந்தும் 16 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் நேற்று மாலை மட்டக்களப்பிற்கு அழைத்து வரப்பட்டு மீள்குடியேற்றத்தின் நிமித்தம் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்தனர்.

# மத்திய மாகாணத்தில் பன்றிக் காய்ச்சல் பரவுகின்றது; மாணவர் மூவர் பலி! பாடசாலைகள் மூடப்பட்டன

கண்டி, நவ.20

பன்றிக்காய்ச்சல் நோயினால் மத்திய மாகாணத்தில் கடந்தவாரம் பாடசாலை மாணவர்கள் மூன்று பேரும் மற்றும் கர்ப்பிணித் தாயும் இறந்துள்ளனர்.

இதனால் நோய் அச்சம் காரணமாக அந்த மாகாணத்தில் உள்ள 1,470 பாடசாலைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் அடுத்தவருடம் ஜனவரி மாதம் வரை மூடப்பட்டிருக்கும் என்று மத்திய மகாண கல்வி அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

இந்நோயினால் மேலும் 7 பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளில் அதிகளவில் மாணவர்கள் ஒன்றுகூடுவதனால் மேலும் நோய்த்தொற்று, இறப்பு நிகழலாம் என்பதால் அவற்றினைத் தடுப்பதற்காகவே இவ்வாறு பாடசாலைகள் அனைத்தும் மூடப்படவுள்ளன. என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-7)

## புலிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மற்றும் தென் பகுதியிலுள்ள பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் குறித்த தகவல்களை புலிகளுக்கு வழங்கியுள்ளதுடன் இதற்காக மாதாந்தம் லட்சக் கணக்கில் பணத்தைப் பெற்றுவந்திருக்கிறார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி குறித்து கிடைத்த இரகசிய தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளால் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ அதிகாரிகளின் கொலைகளுடன் இவர் சம்பந்தப்பட்டுள்ளாரா என்பது குறித்து விசாரணை செய்யப்பட்டு வருகிறது என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## வாடகைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புல்லர்ஸ் வீதியில் உள்ள வீட்டை அங்குள்ள அனைத்துத் தளபாடங்களுடனும் அடுத்த சில நாள்களுக்குள் கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு சரத் பொன்சேகாவைக் கேட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வீடொன்றை வாடகைக்குப் பெறவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, தனக்கு வீட்டை வாடகைக்கு அளிக்க முன்வருபவர்கள் மிரட்டப்படுகின்றனர் என முன்னாள் இராணுவத் தளபதியை மேற்கோள் காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜெனரல் சரத் பொன்சேகா தான் இதுவரை 15 வீடுகளைப் பார்வையிட்டுள்ளார் எனவும் இந்த வீடுகளின் உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் மிரட்டப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளார் என இணையத்தளங்கள் குறிப்பிட்டுள்ளன.

## ஜனாதிபதியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ ஆகியோரையும் சந்திக்கிறார்.

இவர் கடந்த இரு நாள்களும் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்தார்.

அதன்போது இடம்பெயர்ந்த மக்களை சந்தித்து அவர்களின் நிலைமைகள் குறித்து நேரில் ஆராய்ந்தார்.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (அ-சி)

## அரசு தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இன்னும் தீர்மானிக்கவில்லை. உரிய நேரத்தில் ஜனாதிபதி அந்தத் தீர்மானத்தை எடுப்பார்.

இரு தேர்தல்களுக்கும் போதிய கால அவகாசம் இருப்பதால் தேர்தல்களை எதிர்பார்த்து நாட்டு மக்கள் அவசரப்படத் தேவையில்லை. இருப்பினும், எந்நேரத்திலும் தேர்தல் அறிவிக்கப்படலாம்.

ஆனால், எந்தத் தேர்தல் முதலில் நடத்தப்படும் என்று இப்போது சொல்லமுடியாது. நாம் எதிர்த்தரப்பில் போட்டியிடும் வேட்பாளர் பற்றிக் கவலைப்படவில்லை.

எப்படிப்பட்ட வேட்பாளர் வந்தாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கும் மக்கள் ஆதரவைக் குறைக்க முடியாது. ஆகவே, நாம் தேர்தலுக்கு அவசரப்படவில்லை - என்றார். (அ)

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஏ.சுதாகர் (வயது - 21) மற்றும் வவுனியாவைச் சேர்ந்த ஜீவா (வயது - 30) ஆகியோரே இவ்வாறு விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## அரைவாசிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது ஏமாற்று நடவடிக்கை. முகாமில் இருந்தவர்களில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் அங்கிருந்து விடுவிக்கப்பட்ட பின்னரே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு செல்வதற்கு அரசு அனுமதித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முகாம்களுக்கு நாங்கள் சுதந்திரமாகச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இராணுவத்தினரால் வழிகாட்டப்படும் பயணங்கள் எங்களுக்குத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இராணுவத்தினரின் வழிகாட்டுதலுடனான பயணம் என்பதால் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களுக்குச் செல்வதற்கான அழைப்பைத் தான் நிராகரித்துவிட்டார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

''நாங்கள் எங்களது வாகனத்தில் வருவோம் என இராணுவத்தினருக்குத் தெரிவித்தோம். எனினும், அரசு தனது ஹெலிக்கொப்டரிலேயே முகாம்களுக்குச் செல்ல வேண்டும் என வற்புறுத்தியது எனத் தெரிவித்துள்ள அவர் எமது மக்களைப் பார்ப்பதற்கு நாங்கள் ஏன் ஹெலிக் கொப்டரில் செல்லவேண்டும் எனக்கேள்வி எழுப்பியுள்ளார். (அ-சி)

வெற்றி இலக்கு
3 ஆம் தவணைப் பயிற்சிப் பரீட்சை தரம் 1,2,3,4,5.
வினாத்தாள் வெளிவந்துவிட்டன
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பெற்றுக்கொள்ளலாம்.
நபா அச்சகம், 158, நாவலர் வீதி, (மனோகரா சந்தி) யாழ்ப்பாணம்.
(91280)

வாகனம் தேவை
விநியோக நிறுவனம் ஒன்றிற்கு சிறிய வாகனம் நாளாந்த/ மாதாந்த அடிப்படையில் வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 071 5230943
0773196355
(சி/562602)

கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை. பதிவு எண் D.S 589
* எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்த விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
* ஏதாவது ஒரு வாகன அனுமதிப்பத்திரம் உள்ள ஒருவர் கனரக வாகனம் தவிர்ந்த இன்னொரு வாகனத்திற்கான சாரதி அனுமதிப் பத்திரம் பெற எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றத் தேவையில்லை. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து வாகனப் பயிற்சி பெற்று ரெயலுக்குத் தோற்ற முடியும்.
* ரெயல் பரீட்சையில் சித்தியடைய வான், ஓட்டோ மற்றும் சிறிய ரக, பெரியரக மோட்டார் சைக்கிள்களில் விசேட வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
* அரச, தனியார் ஊழியர்களுக்கு தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்.
கிளை: மகாத்மா வீதி, நெல்லியடி. 021 300 6550
தலைமைக் காரியாலயம்: 226,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 0777225292, 0212224353
(91227)

25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
வடமராட்சி மண்ணில்
உப பணிமனை திறந்திருப்பதனை ஒட்டி வடமராட்சி மாணவர்களுக்காக நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி
விபரங்கள் நாளைய உதயனில்....

வெளிவந்துவிட்டது
SLAS
SLAS ஆக்கம் : த. தவசேகர்
SLAS ஆக்கம் : P. கமலதாஸ்
SLAS ஆக்கம் : க.தெய்வேந்திரன் (2 Books)
மொத்தம் 4 வகைப் புத்தகங்கள் நேற்றுமுதல் விற்பனையாகின்றன.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். 222 9881
(சி/562607)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.